சங்காரம்

ஆற்றுகையும் தாக்கமும்



கலாநிதி சி.மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தவர்களான
கவிஞர் சுபத்திரன்
கலைஞர் வடிவேல்
நினைவுக்கு.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம்

அவைக்காற்றுகையும் தாக்கமும்
(Sankaram Performance & impact)

கலாநிதி சி. மௌனகுரு

சவுத் ஏசியன் புக்ஸ்

SAB

தேசிய கலை இலக்கியப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sankaram
C. Maunaguru
First Published : July 1993
Printed at : Suriya Achagam, Madras.
Published in Association with
National Art & Literary Association
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane
Madras - 600 002.
Rs. 21.00

சங்காரம்
சி. மெளனகுரு
முதற்பதிப்பு : ஜூலை 1993
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை.
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை-600 002.
ரூ. 21.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சி. மௌனகுருவின் சங்காரம் அவைக்காற்றுகையும் தாக்கமும் என்னும் இந்நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதுவதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மௌனகுருவினுடைய சங்காரம் ஈழத்தமிழருடைய கூத்துக் கலை வரலாற்றிலே ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை ஏற்படுத்தி புதியதொரு வளர்ச்சி நிலையைக் குறித்து நிற்பதொன்றாகும். இத்தகைய பணியினைச் செய்வதற்கு மௌனகுருவுக்கு ஏற்ற தகைமைகள் இருந்தன. மௌனகுருவுடன் மட்வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத் திலும் ஒரேகால மாணவனாகவும் பின்னர் பல்கலைக்கழகத்தில் அவருடைய ஆசிரியனாகவும் இருந்த எனக்கு அவரின் கலை ஆளுமை வளர்ச்சியினை நன்கு அறிவதற்கு வாய்ப்பு இருந்தது.

மௌனகுரு தன்னுடைய சிறு வயதிலேயே கூத்துக்கலையை நன்கு அறிந்தவராக இருந்தார். நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே மாணவனாக இருந்தபொழுது, மௌனகுரு கல்லூரி மாணவனாகப் பல்கலைக்கழகத் திறந்தவெளி அரங்கிலே, "அருச்சுணன் தவசு" கூத்திலே சில வேடனாக வேடமிட்டு ஆடி பேராசிரியர் சரச்சந்திர, பேராசிரியர் சிறிகுணசிங்க போன்ற கலைவல்லுனருடைய பாராட்டினைப் பெற்ற நிகழ்வு இன்னும் என் நினைவிலே இருக்கின்றது. இந்த இளங்கலைஞனை இனங் கண்டு உலகுக்கு வழங்கிய பெருமை காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனையே சாரும்.

மௌனகுருவினுடைய கலை ஆளுமை வளர்ச்சிக்கு அவருடைய பல்கலைக்கழக நுழைவு மேலும் வழிகோலியது. கூத்துக்கலையை நகர மக்களுக்கு வழங்கும் எண்ணங் கொண் டிருந்த கலாநிதி வித்தியானந்தனுக்கு மௌனகுருவின் பல்கலைக் கழக வருகை நல்ல வாய்ப்பினை வழங்கியது. "கர்ணன் போர்" வடமோடிக்கூத்து மேடையேற்றுதற்குரிய ஆயத்தங்கள் நடை பெற்றன. கர்ணன் போரில் மௌனகுருவும் நானும் ஒன்றாக நடித்தோம். முதலிலே ஆட்டப்பயிற்சி தொடங்கியது. வந்தாறு மூலை செல்லையா அண்ணாவியர் இருந்தபோதும் பங்குபற்ற இருந்தவர்களுக்கு ஆட்ட நுணுக்கங்களையெல்லாம் மௌன குருவே ஆடிக்காட்டி பழக்கியதை நாம் மறக்கமாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

ஈழத்து தமிழ்மேடை நாடகம் தனக்கென தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியம் ஒன்றைக் கொண்டுள்ளது.

கூத்துக்கள் கிராமங்களின் உயிர்த்துடிப்பான கலையாக்கமாக காலாகாலமாக இருந்து வந்திருக்கின்றன.

இக்கூத்துக்கள் சமகாலத்தில் இரண்டு பாங்காக ஆடப்பட்டு வருவதை அவதானிக்கலாம். ஒன்று, பழைய மரபுக் கூத்துக்களை மாற்றம் ஏதும் இன்றி அப்படியே ஆடுதல்; மற்றது உள்ளடக்கம், அரங்கு இரண்டிலும் மாற்றத்தைச் செய்து ஆடுதல்; இந்த இரண்டாவது வகையில் சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி நவீன அரங்கியல், நுட்பங்கள், உத்திகள் ஆகியவற்றை உள்வாங்கி ஆடப்படும் கூத்துக்கள் உள்ளடங்கும்.

சங்காரம் இந்த இரண்டாவது வகை நாடகப் பாரம்பரியத்தின் தொடக்க காலகட்டத்திற்கு உரியதாகும்.

கவிஞர் முருகையனின் "கடூழியம்" நாடகப் பிரதி "மாடும் கயிறுகள் அறுக்கும்" எனும் நூலில் ஏற்கனவே எம்மால் வெளியிடப்பட்டுள்ளது.

நாடக நூல்களை வெளியிடும் எமது முயற்சியின் தொடர்ச்சியாக கலாநிதி சி. மௌனகுரு அவர்களின் "சங்காரம்" நூலை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

14, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு-6,
இலங்கை,
6-1-93.

தேசிய கலை இலக்கியப் பேரவை

பொ. பேரின்பராஜா, நா. தணிகாசலம்பிள்ளை, ப. கனகரத்தினம் ஆகியோருடன் நானும் வடமோடி ஆட்டம், பாடல் ஆகியன வற்றைப் பழகினோம். எனக்கு வடமோடி ஆட்டத்தைப் பழக்கு வதற்கு அண்ணாவியரும், மௌனகுருவும் பட்டபாடு சொல்லொ னாது. தாளத்துக்கு ஆடமுடியாத பேர்வழியாகவே நானிருந் தேன். நன்றாகப் பாடுபவன் என்ற காரணத்தால், தாளம் பிழைத் தாலும் அவையோர் கண்டுபிடிக்காதபடி சலங்கை கட்டாமல் ஆடினால் நல்லது என்ற ஆலோசனையை வித்தியானந்தனுக்கு வழங்கியவர் மௌனகுருவே, மௌனகுரு கர்ணனாகவும், நான் கிருஷ்ணராகவும் வேடமிட்டு ஆடினோம். "கர்ணன் போர்" கூத்து ஏட்டினைத் தயாரித்தவர் மௌனகுருவே பழைய மட்டக்களப்புக் கூத்து ஏட்டிலிருந்து காட்சிகளையும் பாடல்களை யும் தெரிந்தெடுத்து ஒரு மணித்தியாலம் பதினைந்து நிமிடங் களுக்குள் ஆடி முடிக்கக்கூடிய கூத்து ஏட்டினைத் தயாரித்தார்.

"கர்ணன் போர்" வெறும் மரபுவழிக் கூத்தாக அல்லாமல் (ஆடலும் பாடலுமே மரபுவழிக் கூத்துக்களில் முனைப்புப் பெற்றனவாயிருந்தன) சிறந்த கூத்துவழி நாடகமாக ஆக்குவ தற்கு வித்தியானந்தனுக்கு மௌனகுரு வழங்கிய உதவிகள் பற்றி நான் நன்கு அறிவேன். கலையுணர்வு, கூட்டுணர்வு, பொறுப் புணர்வு, பணிவு ஆகியனவெல்லாம் மௌனகுருவிடம் இருந்தமை பேராசிரியர் வித்தியானந்தனுக்கு நல்ல வாய்ப்பாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் "கர்ணன் போர்" மேடை யேறியபோது, போர்க்களத்தே வீழ்ந்த கர்ணனைப் பார்த்து குந்திதேவி "மரணமடைந்த என் மைந்தனைப் பெற்ற வழியினை சொல்லுவேன் மைந்தர்களே" என்று பாடியபொழுது பலர் கண்ணீர் விட்டதையும், "ஸ்ரீதரன் தாமோதரன் நந்தகோபன்..." என்று விருத்தம் பாடிக்கொண்டு கிருஷ்ணர் புல்லாங்குழல் பின்னொலியுடன் மங்கிய நீலப் பின்னொளியிலே மேடையிலே தோன்றியபோது பார்வையாளர் சிலர் கும்பிட்டதையும் நாங்கள் அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழுவோம்.

மௌனகுருவினுடைய கலை ஆளுமை வளர்ச்சி மென்மேலும் வளர்ச்சியுற வித்தியானந்தன் அவருக்கு "நொண்டி நாடகம், இராவணேசன் ஆகிய கூத்துக்கள் மூலம் வாய்ப்பளித்தார். நொண்டி நாடகத்தில் செட்டியாராகவும், இராவணேசனில் இராவணனாகவும் மௌனகுரு வேடம் தாங்கினார்.

நொண்டி நாடகம் மரபு வழிக்கூத்தைச் சுருக்கி அமைக்கப் பட்ட கூத்து; இராவணேசன் மரபுவழிக் கூத்துக்கியைய எழுதப் பட்டாலும் இராவணனின் குணாதிசயத்தை வெளிப்படுத்தும் கூத்து; நொண்டி நாடகத்தைச் சுருக்கி அமைத்ததுடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணேசனைப் புதிதாக எழுதியவரும் மௌனகுருவே. இராவணேசனை எழுத மௌனகுருவுக்கு கலாநிதி சு. வித்தியானந்தனும், கா. சிவத்தம்பியும் ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்தனர்.

மௌனகுருவும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் தனக்கிருந்த பட்டறிவினையும், நுணுக்க விவர அறிவினையும், உத்திகளையும், கலையறிவினையும் திறம்பட இக்கூத்துக்கள் மூலமாக வெளிக்காட்டினார். இக்கூத்துக்கள் மூலம் அவர் பெற்ற பட்டறிவு பிற்காலத்தே எமக்கொரு கலைக் கல்வியாளனைத் தந்தது. இப்பட்டறிவின் ஒரு விளைவே "சங்காரம்" என்று கூறுவது பொருத்தமாகும்.

வழக்கமாக மறத்தின் உருவாகவும், பார்வையாளரின் வெறுப்புக்குரிய பாத்திரமாகவும் அமைந்த இராவணனை வீரமுடையவனாகவும், மானத்துக்காகக் கடைசி வரை போராடி மடியும் மன்னனாகவும் மேடையிலே வெளிக்கொணர மௌன குருவின் பிரதியும் ஆட்டமும், உணர்வுப் புலப்பாடும் அங்க அசைவுகளும் பெரிதும் உதவின.

1968இல் கலாநிதி சு. வித்தியானந்தன் வாலிவதை வடமோடி நாடகத்தைப் பல்கலைக்கழகத்தில் மேடையேற்றினர். வாலிவதை நாடகத்தை எழுதியவரும் மௌனகுருவே. பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினாலும் வாலிவதையை மேடையிட மௌனகுரு கலாநிதி சு. வித்தியானந்தனுக்கு உதவியாக இருந்தார். வாலியின் குணாதிசயமே நாடகத்தின் பிரதான அம்சம் இவ்வகையில் இராவணேசனும், வாலிவதையும் பாத்திரம் குணாம்சங்களை முதன்மைப்படுத்திய கூத்துக்களாகும். கூத்துப்பாத்திரங்களின் குணாதிசயங்களைக் கூறும் நாடகமாக விரிவடைந்தது. ஒருவகையில் கூத்து நாடக நிலைப்பட்டது எனலாம். இது ஈழத்துக் கூத்து வளர்ச்சியில் பிரதான ஒரு திருப்பம் என்பதனையும் நாம் மனம் கொள்ளல் வேண்டும்.

இந்நிலையிலிருந்து இன்னொரு பாய்ச்சலை மேற்கொண்டால் என்ன என்று மௌனகுரு எண்ணியது வியக்கத்தக்க விடயமன்று. இதிகாச புராணக் கதைகள் மூலம் அறம் வெல்லும் மறம் தோற்கும் என்ற பாரம்பரியக் கூத்துப்பொருளாக நடைமுறைச் சமூகச் சிக்கல்களைக் கொண்டால் என்ன என்று மௌனகுரு எண்ணியதன் விளைவாகச் "சங்காரம்" பிறந்தது.

வடமோடி தென்மோடிக் கூத்துக்களின் நுணுக்கங்களையெல்லாம் மௌனகுரு அப்பொழுதே நன்கறிந்தார். கூத்துத் தொடர்பான அவருடைய பட்டறிவினை நான் கண்டு வியந்ததுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய கற்பனைத் திறனும், புதுமை நோக்கும், அழகியலுணர்வும் மௌனகுருவிடம் பெருமளவிருந்தன. இதனாலேதான் வித்தியானந்தன் மத்தியதர வர்க்கத்தினர்க்கு அறிமுகஞ் செய்துவைத்து மட்டக்களப்பு கூத்து வடிவத்தின் மூலம் வழக்கமான புராண இதிகாசக் கதைகளைக் கூறுவதை விடுத்து, மானிட நேயமிக்க, மானிட மேம்பாட்டிற்கான பொருளை அதன்மூலம் புலப்படுத்தலாம் என மௌனகுரு எண்ணி. "சங்காரம்" என்னும் நாடகத்தை 1969இல் மேடையேற்றினார். கூத்தின் உள்ளடக்கத்திலே மாற்றம் ஏற்படுத்த முயன்ற மௌனகுரு அவ்வுள்ளடக்கத்துக்கேற்றபடி உருவத்திலும் சிற்சில மாற்றங்களை மேற்கொண்டதும் தவிர்க்க முடியாத தொன்றே. அந்த உருவச் செம்மையுடன் 1980இல் வீரசிங்கம் மண்டபத்தில் சங்காரம் மீண்டும் மேடையேறியது. பெருவியப்பையும் மகிழ்ச்சியையும் எமக்குத் தந்த மேடையேற்றம் அது. அந்த மேடையேற்றத்தின் பின்னணியில் நாடக அரங்கக் கல்லூரியும், யாழ்ப்பாணத்தின் பெரும் கலைஞர்களின் கடினமான உழைப்பும் இருந்தன. மௌனகுரு அந்நாடகத்தில் நடித்ததுடன் நடிகர்கட்கு ஆட்டப் பயிற்சி கொடுத்து நெறியாளராகவும் இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் 1980இல் சங்காரம் மேடையேற்றப்பட்டபோதுதான் அந்நாடகத்தின் பொருள் தொடர்பான சிக்கல்களை திரு. மு. புஷ்பராஜனும், திரு. ஏ. ஜே. கனகரத்தினாவும் சுட்டிக் காட்டினர். மௌனகுருவின் சங்காரம் நாடகப் பொருளை நியாயப்படுத்தி கலாநிதி என். சண்முகரத்தினம் தினகரனிலும், 'சமுத்திரன்' என்ற புனைபெயரில் 'லங்கா கார்டியன்' (Lanka Guardian) சஞ்சிகையிலும் எழுதியிருந்தார். பிறர் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தன் தவறுகளைத் திருத்துவதிலும் மௌனகுரு எப்பொழுதுமே பின்னிற்பதில்லை. சுட்டப்பட்ட நியாயமான தவறுகளை நேராக்கி, மௌனகுரு சங்காரத்தைப் புதுப்பித்தார், இப்பொழுது நூல் வடிவம் பெறும் 'சங்காரம், சுடப்பட்ட பொன்னாக அமைகின்றது என்பதனைச் சுவைஞர்கள் உணர்வர் என நம்புகிறேன்.

ஒரு நாடகத்தை அவைக்கு வழங்கும்போது, அதனைப் பார்த்த சுவைஞர்கள் திறனாய்வாளர் என்ன கருதுகின்றனர் என்பதை அறிவதன் மூலம் அந்நாடகத்தின் அவைக்காற்றுகையினையும் தாக்கத்தினையும் யாவரும் உணரமுடியும். இதற்கு வழிசெய்வதுபோல மௌனகுரு இந்நூலிலே நாடகத்தினையும் அது தொடர்பாக வெளிவந்த எழுத்துக்களையும் ஒருங்கு சேர அச்சிடுகிறார். மௌனகுரு ஒரு கலைஞன் மட்டுமல்ல; ஓர் ஆய்வாளன்; ஒரு திறனாய்வாளன்; நல்ல கல்வியாளன்; சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைமிக்கோன். இதனாலேதான் இத்தகைய ஒரு நூல்வடிவினை எமக்கு அவராலே அளிக்க முடிகின்றது. யப்பானில் ஒரு நூல் வெளிவரும்போது, அந்நூற்பொருளுடன் தொடர்புடைய இரு நுண்ணாய்வாளர்களுடைய எதிரெதிர் கருத்துக்கள் கொண்ட எழுத்துக்களையும் பெரும்பாலும் ஒருங்கு சேர்த்து வெளியிடுவது வழக்கம். இவ்வழக்கத்தினை நேரிலே அறியக்கூடிய வாய்ப்பு எமக்கிருந்ததால் கே. டானியலுடைய "அடிமைகள்" நாவல் வெளிவந்தபோது சண்முகதாஸ் மனோன்மணியின் கருத்துரையினையும் மு. கேசவனின் கருத்துரையினையும் ஒன்றாகச் சேர்த்து வெளியிடும்படி நாம் கூறிய ஆலோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டது. மனோன்மணியும் நானும் எழுதிய 'ஆற்றங்கரையான்' நூலிலும் பேராசிரியர்கள் ஆ. வேலுப்பிள்ளை, கா. சிவத்தம்பி ஆகியோருடைய கருத்துரைகளைச் சேர்த்து வெளியிட்டோம். அவற்றிலே நூலின் நிறைகளும் குறைகளும் தெளிவாகச் சுட்டப் பட்டன. இந்தவகையில் குறைநிறைகளைச் சுட்டும் எழுத்துக் களுடன் முதன்முதலாக வெளிவரும் ஈழத்து நாடக நூல் கலாநிதி சி. மௌனகுருவினுடைய இந்நூலே ஆகும்.

மௌனகுருவின் சங்காரம், அவைக்காற்றுகையும் தாக்கமும் என்றும் இந்நூல் ஈழத்துத் தமிழ்த்திறனாய்வு மிக உயர்ந்த நிலையிலே இருக்கின்றது என்பதைத் தமிழருக்குப் பறைசாற்ற வல்லது. ஈழத் தமிழ்த்தாயின் இலக்கியச் செருக்கினை எடுத் தியம்பும் இன்னொரு ஆக்கமாக இந்நூல் வெளிவருவதையிட்டு நாம் பெருமைப்படலாம். இத்தகைய நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியுமா?

தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
9-10-1992

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

சங்காரத்திற்கு மூன்று பிறப்புகள் உண்டு

முதற் பிறந்தது 1969இல்

1969இல் யாழ்ப்பாணத்திலே தீண்டாமைக்கு எதிரான போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அதனை முன்னின்று நடத்தியது. வெகுஜன இயக்கத்திற்கு ஆதரவு தரும் நோக்குடன் கொழும்பிலே லும்பினி அரங்கில் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மறைந்த கி. லக்ஷ்மண ஐயர் தலைமையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒன்றாகச் சங்காரம் மேடையேறியது.

அன்று சங்காரம் நாடகத்தை எழுதும்படி தூண்டியவர் இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரியும் நண்பர் கந்தசாமி அவர்கள். (இன்றும் அப்பகுதியில் நாடகத்தை வளர்க்க அவர் எடுக்கும் முயற்சிகள் அதிகம்). ஆரம்பத்தில் இந்நாடகத்தை எழுதிமுடித்து இதற்கு நான் இட்ட பெயர் 'சாதி அரக்கனைச் சாய்த்த கதை' என்பதாகும். சாதியை அரக்கனாக உருவகித்து தொழிலாளர் விவசாயிகள் இணைந்து அவ்வரக்கனை ஒழிப்பதால் அந்நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது. கையெழுத்துப் பிரதியை வாசித்து ஆலோசனைகள் பல தந்து செம்மை செய்தவர், பாடசாலையில் உடன் ஆசிரியராக இருந்த கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள். அப்போது நான் பாடசாலையில் ஆசிரியராக இருந்தேன். பிரதியைப் படித்துப் பார்த்து இதற்கு 'சங்காரம்' என்று நாமகரணம் செய்தவர் கவிஞர் முருகையன்.

1969இல் மட்டக்களப்பில் மட்டக்களப்பு நாடக சபா என்றொரு அமைப்பை நிறுவி பழைய கூத்துக் கலைஞர்களையும், புதிய தலைமுறை இளைஞர்களையும் இணைத்து வந்தாறுமூலை. க. செல்லையாவை அண்ணாவியராக வைத்துப் பழகிப் பெரும்பாலும் மரபு முறைமைகளுக்கியைய மட்டக்களப்பின் வடமோடி நாடகப் பாணியில் 1969இல் லும்பினி அரங்கில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. மறைந்தவர்களான கவிஞர் சுபத்திரனும் (க. தங்கவடிவேல்) சி. வடிவேலுவும் மட்டக்களப்பு நாடக சபாவின் இயக்கு சக்திகளாயிருந்தனர். சங்காரத்தின் முதற் பிறப்பு இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை நிரம்பி வழிந்த சனக் கூட்டத்தின் கரகோஷம், ஊக்கமளிப்பு, என்பன 23 வருடங்களின் பின்பு இப்போதும் மனத்திரையில் திரைப்படமென ஓடுகின்றது. காட்சிக்குக் காட்சி மக்கள் தந்த உற்சாகம் முன்பு நான் நடித்த நாடகங்களில் நான் காணாத ஒன்று. அன்றைய போராட்டப் பின்னணி பார்வையாளர்களின் உற்சாகமான பங்களிப்புக்கு ஒரு காரணமாயிருந்திருக்கலாம். கலை மக்களுக்காகவே என்ற கோட்பாட்டின் மிகத் தீவிரமான ஆதரவாளனாக நான் இருந்த காலம் அது.

அன்று வெளிவந்து கொண்டிருந்த 'தொழிலாளி' பத்திரிகையில் லும்பினி அரங்கில் மேடையேறிய சங்காரம் பற்றி தொழிற் சங்கவாதியான என் சண்முகதாசன் ஒரு குறிப்பு எழுதியிருந்தார். கைலாசபதி பாராட்டிச் சென்றார். நண்பர்கள் புகழாரம் சூட்டினர். எனக்கு உற்சாகமாக இருந்தது.

கொழும்பிலிருந்த எங்கள் குழு என்ற அமைப்பினர் இந்நாடகத்தை மட்டக்களப்பிலிருந்து தருவித்து லும்பினியில் மீண்டும் மேடையிட்டனர்.

நாடக ஆக்கத்தைப் பொறுத்தவரை பழைய மரபுகளிலின்று அதிகம் மாறுபடாது, பேராசிரியர் வித்தியானந்தன் பாணியைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்ட நாடகமே 1969ஆம் ஆண்டு மேடையேறிய சங்காரமாகும். சங்காரத்தின் முதற் பிறப்பின் வரலாறு இது.

II

1970—1974வரை கொழும்பிலே பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் நடிகர் ஒன்றியம் நிறுவப்பட்டது. தாசீசியஸின் கூத்தாடிகள் குழுவும், நா. சுந்தரலிங்கத்தின் எங்கள் குழுவும் இளைய பத்மநாதனின் நெல்லியடி அம்பலத்தாடிகள் குழுவும், எங்களது மட்டக்களப்பு நாடக சபாவும் ஒன்றாயின, நான் கினதும் இணைப்பில் நடிகர் ஒன்றியம் உருவானது. இதன் நோக்கம் தீவிர நாடகமாடிகள் ஒன்றிணைவதும், காத்திரமான நாடகங்களை மேடையிடுவதும் ஆகும்.

நடிகர் ஒன்றியத்தின் ஆதரவில் முதன் முதல் நண்பர் அ. தாசீசியஸ் கந்தன் கருணையை நெறியாள்கை செய்தார். கந்தனாக அதில் நான் நடித்தேன். தாசீசியஸ் நெறியாள்கையின் கீழ் அவரின் நாடக ஆக்க நுட்ப முறைகளை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. சுந்தரலிங்கம், தாசீசியஸ் கொழும்பின் சிங்கள நாடகத் தொடர்புகள் நவீன நாடகங்களை அறியும் வாய்ப்பைத் தந்தன. நாடகம் பற்றிய பிரக்ஞையும் உருவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகர் ஒன்றியம் முருகையன், (கடூழியம்) சுந்தரலிங்கம் விழிப்பு) இ. சிவானந்தன் (காலம் சிவக்கிறது) சி. மௌனகுரு (சங்காரம்) ஆகியோரின் நான்கு நாடகங்களை வெளியிட எண்ணியது. நூலுக்காகப் பழைய சங்காரத்தில் சில மாற்றங் களை மேற்கொண்டேன். கூத்துப் பாணியிலிருந்து அது சற்றுமாறுபடுத்தப்பட்டது. எடுத்துரைஞர்கள் கதை நடத்துபவர் களாக அறிமுகம் செய்யப்பட்டனர். சாதி அரக்கனுக்குப் பதிலாக வர்க்க அரக்கன் பிரதானப்படுத்தப்பட்டான். நவீன நாடகம் பற்றிப் புதிதாக நான் பெற்ற அறிவு, அனுபவம் என்பன எனக்குத் துணையாயின. எழுத்துருவில் இரண்டாவது தடவை யாக 1975இல் சங்காரம் மீண்டும் ஜனித்தது.

1980இல் யாழ்ப்பாணத்தில் நாடகம் நான்கு நூல் வெளியா யிற்று. யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரியும், அவைக் காற்று கலைக் கழகமும் தீவிரமாகச் செயற்பட்ட காலம் அது. இரு அமைப்புகளுக்குமிடையே நிலவிய போட்டியினால் லாபம் அடைந்தோர் நாடக இரசிகர்களே. அக்காலத்தில் "நாடகம் நான்கு" வெளியீட்டு விழாவன்று யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த மாணாக்கரான பாலசுகுமாரன், தம்பையா, எட்வேட்பீரிஸ் கனகரத்தினம் ஆகியோரைக் கொண்டு வட்டக்களரியில் இரண்டாம் பிறப்பெடுத்த சங்காரத் தின் ஆரம்பக் காட்சிகள் சிலவற்றை யாழ்; றிம்மர் மண்டபத்தில் நிகழ்த்திக் காட்டினோம். (அந்த மண்டபம் அனர்த்தத்தில் இன்று தரைமட்டமாகிவிட்டது.) இது சங்காரத்தின் இரண்டாம் பிறப்பின் வரலாறு.

III

1980இல் நாடக அரங்கக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் நாடகப் பயிற்சிகளை நடத்திக் கொண்டிருந்தது. வடமோடி நாடகமொன்றை மேடையிட விரும்பிய கல்லூரி தமக்காகச் சங்காரத்தைத் தயாரிக்கும்படி என்னை வேண்டியது. குழந்தை ம. சண்முகலிங்கம் பெரும் துணையாக அமைந்தார். சிதம்பர நாதன், பிரான்சுஸ் ஜெனம், ருத்ரேஸ்வரன், அரசையா, ஏ. ரி. பொன்னுத்துரை, கனகரத்தினம், வீ. எம் குகராஜா, ஜெயகுமார், தேவராஜா போன்ற திறமையான நாடகக் கலைஞர்களின் தொடர்பும் கிடைத்தது. நாடகக் களப் பயிற்சி யினூடாகச் சங்காரம் உருப்பெற்றது. அதற்கான பிரதி நூலில் வெளிவந்தது, இரண்டாம் பிறப்பானதுமான பிரதியிலிருந்து இன்னும் மாறுபட்டது. மேடையையும், நிகழ்த்திக் காட்டலை யும், புதிய பரிசோதனைகளையும் மையப்படுத்தி நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டது. அரங்கக் கல்லூரிக் களப் பயிற்சி நெறிகள் தந்த தாக்கத்தின் விளைவு அது.

1980இன் கடைசிப் பகுதியில் சங்காரம் யாய்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது. (அம்மண்டபமும் இன்று தரைமட்டமாகிவிட்டது.) அத்தோடு பல தடவைகளுக்கு மேல் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும், கொழும்பிலும், பேராதனையிலும் சங்காரம் மேடையேறியது. இது சங்காரத்தின் மூன்றாம் பிறப்பின் வரலாறு.

IV

1969இல் முதற் பிறப்பு, 1975இல் இரண்டாம் பிறப்பு, 1980இல் மூன்றாம் பிறப்பு, ஒன்று போல் ஒன்றில்லை. பிரதியிலும்தான், அலைக்காற்றும் முறையிலும்தான். 1980இன் மூன்றாம் பிறப்புதான் இப்போது நூல் வடிவில் வெளியிடப் படுகிறது. பத்து வருடங்கட்குப் பின் இன்று இதனை வெளியிடுகையில் இடைப்பட்ட காலத்தில் பெற்ற நாடக அறிவு அனுபவங்களின் பின்னணியில் இன்னுமொருதரம் சங்காரத்தைப் புதிதாகப் பெற்றெடுக்கலாம் போலத் தெரிகிறது.

1980களில் சங்காரம் நூலுருப் பெற்றபோதும், பின்னர் அது மாற்றம் பெற்று மேடையேறியபோதும் சங்காரம் பற்றிப் பல விமர்சனங்கள் வந்தன. அவ்விமர்சனங்கள் அன்றைய நாடக சர்ச்சையின் பிரதிபலிப்புக்களாயிருந்தன.

சங்காரத்தை மையமாக வைத்து ஈழத்தின் பிரபல விமர்சகர் களான ஏ. ஜே. கனகரத்தினாவும், சமுத்திரனும் Lanka guardian என்ற ஆங்கில இதழிற் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டனர்; மோதிக்கொண்டனர்.

அன்றைய சிறு பத்திரிகைகளான 'அலை'யும் 'புதுசு'ம் தம் அபிப்பிராயங்களை எழுதின.

இவ்வகையில் ஒரு இலக்கிய சர்ச்சைக்குக் காலாக இந்நாடகம் அமைந்ததையிட்டு மகிழ்வடைகிறேன்.

இவ்விமர்சனங்கள் நாடக ஆக்கம் பற்றிய விமர்சனமாக அமையாது; நாடகத்தின் உள்ளடக்கம் பற்றிய விமர்சனங்களாக அமைந்தது துரதிஷ்டமானது.

எல்லோரும் நாடகத்தை ஏற்கிறார்களா என்பதைவிட எல்லோரும் அதற்கு response பண்ணுகிறார்களா என்பதே முக்கிய விடயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சகர்களும், நண்பர்களும் நான் மேலும் வளர உதவினர்.

சங்காரத்தின் உள்ளடக்கம்பற்றி எழுதியோரின் கருத்துக்கள் பற்றி எனக்கும் சில கருத்துக்கள் உண்டு. அவைபற்றி நான் இங்கு எழுதவில்லை. சங்காரம்பற்றி எழுதியோரின் கருத்துக்கள் மாத்திரமே தாக்கம் என்ற பகுதியில் தரப்படுகின்றன.

நாடகம் ஓர் அவைக்காற்றுக் கலையாகும். மேடையிலேதான் நாடகம் முழுமை பெறுகிறது. பிரதி அதன் ஒருபகுதி மாத்திரமே. இப்பிரதியின் இடையிடையே வரும் நெறிமுறைக் குறிப்புகளும் நாடக மேடையேற்றம் பற்றிய செய்திகளும், மேடையேற்றத்தின் போது வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களும், மேடையேற்றம் பற்றிய விமர்சனக் குறிப்புகளும் இந்நாடகத்தின் அவைக்காற்றுத் தன்மை பற்றிய சிறு விளக்கத்தை உங்களுக்குத் தரக்கூடும். நாடக ஆய்வாளர்கட்கு உறுதுணை புரியும் வகையில் 'சங்காரம்' பற்றிய தகவல்களைத் தருவதும் இந்நூலின் இன்னொரு நோக்கமாகும். இந்நோக்கம் ஒரு சிறிதளவாவது நிறைவேறின் மகிழ்ச்சியடைவேன்.

சங்காரத்தின் அவைக்காற்றுகையையும் தாக்கத்தையும் இந்நூல் காட்டும்.

இந்நூலுக்கு முன்னுரை தந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி. இந்நூலை வெளியிட முன் வந்த தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும், நண்பர் சட்டத் தரணி சோ. தேவராஜாவுக்கும் (இவர் இந்நாடகத்தில் நடித்தவர்) என் நன்றி.

சி. மௌனகுரு

நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
50 புதிய வீதி
மட்டக்களப்பு
31-12-1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம்

அவைக்காற்றுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி-1

(வாத்தியங்கள் ஒலிக்க ஆரம்பிக்கின்றன. மண்டபத்தில் விளக்குகள் அணைந்து திரை விலகுவதற்கு முன்னர், எடுத்துரைஞர் தலைவன் மேடையின் வலதுபக்கப் படிக்கட்டினால் ஏறி மேடையின் மத்திய பகுதிக்கு வருகின்றான். நிதானமாக சபையை நோட்டமிடுகின்றான். வாத்தியக்காரர்களை அமைதியாக இருக்கும்படி சைகையினால் வேண்டுகிறான். தம்பூராவின் சுருதி மாத்திரம் கேட்டுக் கொண்டிருக்க ஏனைய வாத்தியங்கள் அமைதியாகின்றன. பேசத் தொடங்குகின்றான். எடுத்துரைஞன் பேசத் தொடங்கும்போது மெல்ல மெல்ல மண்டப விளக்குகள் அணைய ஆரம்பிக்கின்றன. ஒளிப்பொட்டினுள் (ஸ்பொட் லைட்) நின்று எடுத்துரைஞன் உரையாற்றுகிறான்.)

எடுத்துரைஞர் தலைவன்;

அமைதி கொள்க! அமைதி கொள்க!
எல்லோரும் அமைதியாய் இருங்கள்.
(கவிதை நடையில்)

நாங்கள் ஒரு நாடகத்தை
நடிக்க இங்கு வந்துள்ளோம்.
நடிகர் குழு பின்பக்கம்
ஒப்பனையில் நிற்கிறது.
ஒப்பனை முடியும் வரை
உங்களுடன் சில வார்த்தை.

மனித குல வரலாற்றை
நடிக்க நாம் வந்துள்ளோம்.

சூரியனில் இருந்து
துண்டுகள் பறந்ததுவும்,
துண்டுகளில் ஒரு துண்டு
பூமியாய்க் குளிர்ந்ததுவும்,
குளிர்ந்த அந்தப் பூமியிலே
உயிரினங்கள் தோன்றியதும்,
உயிரினத்தின் இறுதியிலே
மனித குலம் வந்ததுவும்,
ஆதியிலே மனித குலம்
வேட்டையிலே வாழ்ந்ததுவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை செய்கையிலே
பிரிவினைகள் தோன்றியதும்
பிரிவினைகள் மனிதனை
அநாகரிகமாக்கியதும்,
சிந்தனை வளர்ச்சியிலே
மனிதகுலம் திரண்டதுவும்,
திரட்சியிலே புது உலகம்
தோற்றுவிக்க எண்ணியதும்,
நாடகமாய் உங்கள் முன்
நடிக்க நாம் வந்துள்ளோம்.

குறியீடு, பாவனைகள்,
கூத்து முறை, பாடல் வகை
அத்தனையின் துணைகொண்டும்
அளிக்கின்ற இக்கலையை
இரசிப்பதற்குக் கற்பனையை
அகலித்துக் கொள்ளுங்கள்.

இதோ,

திரை விலகப் போகிறது;
சூரியன் முதல் வருவான்.
துண்டுகள் பின் சிதறும்.
பூமி அதன் பின் தோன்றும்.
புல் பூண்டு, உயிர் அரும்பும்.
மனிதன்; அதன் பின் எழுவான்.
வாழ்க்கைக்காய்ப் போரிடுவான்.
தடைகள் வரும், எதிர்த்திடுவான்.
சங்காரம் தான் செய்வான்.
ஆம்
நாடகத்தின் பெயர் அதுதான்
சங்காரம்

(சங்கொலி எழுகிறது,
சங்காரம் சங்காரம் சங்காரம்
என்ற ஒலி மண்டபத்தை நிறைக்கிறது)

(மென்மையான குரலில்)

அந்த மானிடனைச் சந்திப்போமா?

(திரை மெல்ல மெல்ல விலகுகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மந்திர உச்சாடன இசையில்)

மானுடம் வளர்ந்த வாற்றை
மக்களுக்குரைக்க வந்தோம்
மானுடம் வரலாறிங்கே
மாபெரும் வரலாறாகும்.

மானிடம் வளர்ந்தவாற்றை
மக்களுக்குரைக்க வந்தோம்
மானிடம் வரலாறிங்கே
மாபெரும் வரலாறாகும்.

அண்டத்தின் வெளிப்பரப்பில்
அலைந்த பல் அணுக் கூட்டங்கள்
ஒன்றாகத் திரண்டுருண்டு
ஒளியுடை ஞாயிறாய்ச்சு.

அண்டத்தின் வெளிப்பரப்பில்
ஆகாயவெளியில் நின்று
வெந்தழல் பருதி தானும்
வேகமாய்ச் சுழலலானான்

(மேற்சொன்ன மூன்று பாடல்களுக்கும் மேடையில் காட்சி நிகழ்கிறது. ஆரம்பத்தில் நடிகர்கள் ஒவ்வொருவரும் தம் இரு கைகளாலும் ஆளுக்கொரு அகல்விளக்கு தாங்கிய வண்ணம் ஒருவர் பின் ஒருவராக, வரிசையாக மேடையில் வலப்பக்கம் படிக்கட்டினால் ஏறி, மேடையில் அரைவட்ட வடிவில் நிற்கிறார்கள்.

பின் வட்டவடிவமாகி சூரியன் போன்ற அமைப்பை உருவாக்குகிறார்கள். அதன்பின் மேடையின் இடப்புறமாக வரிசையாக அசைந்து மேடையின் முன்புற ஓரத்தில் வலதுபக்க மேடை தொடக்கம் இடதுபக்க மேடைவரை வரிசையாகத் தம் கைகளில் வைத்திருந்த அகல்விளக்குகளை வைத்த பின்னர் மேடையின் இடதுபக்கப் படிக்கட்டினால் வரிசையாக இறங்கி வெளியேறுகிறார்கள்.)

ஞாயிறு; ஒளியோன்; வெய்யோன்;
பகலவன்; பருதி; பாஸ்கர்;
சூரியன்; ரவி; அருணன்;
சுடரவன்; சோதி; என்ற
பல்வேறு பெயர்கள் பெற்ற
பகலவன் சுழலலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்தின் வெளிப்பரப்பில்
ஆகாய வெளியில் நின்று
பிண்டமாய் ஒளிப்பிழம்பாய்
சூரியன் சுழலலானான்

(சூரியன் சுழலலானான் என்ற வரிகள் உரத்த தொனியில் உச்சாடனம் செய்யப்படுகின்றன.

நடிகர்கள் இடப்பக்கப் படிக்கட்டினால் மேடைக்குள் வந்து நடுமேடையில் ஒருவர் பின் ஒருவராக வட்டவடிவமைப்பில் மெதுவான வேகத்தில் ஓடுகிறார்கள். சூரியனின் சுழற்சியை அதுகாட்டுவதாக அமைகிறது.

அகண்ட வடிவமைப்பு ஓட்ட வேகத்தில் சுருங்கிச் சுருங்கி சிறிய வட்டமாக மாறுகிறது.)

(எடுத்துரைஞன் துரித கதியில் பாடுகிறான்.)

சுழன்று வந்த சூரியனின்
துண்டு பறந்ததுவே

(குழுமி சிறிய வட்டமாக இறுகியவர்கள் பாய்ந்து தனித் தனியே சிதறுகிறார்கள். பரந்து நின்ற இடத்தில் நின்றவாறே தம்மைத்தாமே சுற்றிச் சுழல்கிறார்கள்.)

துண்டு சுழற்சியிலே
தொடர்ந்து குளிர்ந்ததுவே

(வேகமாகச் சுழன்றவர்கள் மெல்ல மெல்ல வேகம் குறைகிறார்கள்.)

குளிர்ந்து குளிர்ந்து அது
குவலயமாய் ஆனதுவே

(பின்னணி இசைப்போரால் குவலயமாய் ஆனதுவே என்று பல தடவைகள் கூறப்பட, நடிகர்கள் மெல்ல மெல்ல சுழன்ற இடத்திலேயே அமர்கிறார்கள்.)

பூமி குளிர அதில்
புல்பூண்டெழும்பினவே

(இருந்தவர்கள் மெல்ல மெல்ல எழுந்து கைகளை, உடல்களை அசைத்து புல்பூண்டு வளர்வது போல அபிநயிக்கிறார்கள்.)

புல்பூண்டெழும்பியபின்
புத்துயிர்கள் தோன்றினவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இருந்த இடத்தில் இருந்தபடி பெரிதாக மூச்சுவிட்டு ஜடப்பொருள் உயிர்பெற்றதை முழுஉடலாலும் அபிநயிக்கிறார்கள்)

உயிரினத்தின் இறுதியிலே
உம்முன்னோன் தோன்றினான்

(பின்னணியினரின் இசையுடனும் ஒலியுடனும் உட்கார்ந்திருந்த மனிதக் கூட்டம் மெல்ல எழுகிறது. காலைத் தூக்கி இருந்த இடத்தில் நின்று கூனிய முதுகுடன் இரு கைகளையும் கீழே தொங்க விட்டபடி உடம்பை மெல்ல மெல்ல ஆட்டத்திற்குள் கொண்டு வருகிறது. குரங்கு மனிதர் போல அபிநயம் நடைபெறுகிறது.

குரங்கு மனிதன் எழுந்ததும் தகிட தகிட தீம் என்ற தாளக்கட்டு பின்னணியினராய் இசைக்கப்படுகிறது. குரங்கு நிலையில் கூனிய முதுகுடன் மேடையில் ஒருவர் பின் ஒருவராக வட்டவடிவமைப்பில் ஆட்டம் நிகழ்கிறது.

குரங்கு மனிதன் ஒருவன் மேடையின் முன்புறம் வந்து மெல்ல மெல்ல முதுகை நிமிர்த்தி கைகளை உயர்த்தி குரங்கு மனித நிலையினின்று மனிதனிலைக்கு மனிதகுலம் மாறியதை அபிநயிக்கின்றான். அவன் முகத்தில் மகிழ்ச்சி. கைகளைப் பாவிக்கின்றான். கையின் முக்கியத்துவம் சைகைகளால் உணர்த்தப்படுகிறது. நடிகர் ஒவ்வொருவரும் இவ்வண்ணம் அபிநயிக்கிறார்கள். பின்வரும் பாடலை எடுத்துரைஞர் பாட நிமிர்ந்த நிலையில் ஆட்டத்தை நடிகர்கள் நிகழ்த்துகிறார்கள்.)

(பாடல்)

அந்த நாளிலே இந்த மனிதர்கள்
அனைவரும் சமமுடன் வாழ்ந்தனரே.
அப்பொருள் எனது இப்பொருள் உனது
சண்டைகள் ஏதும் தோன்றவில்லை.
பெரியவன் சிறியவன் வறியவன் உள்ளவன்
உரியவன் இல்லான் பேதமில்லை.
இது புராதன காலம்;
ஆதியில் மனிதன் பொதுமையாய் வாழ்ந்த
புராதன காலம்—ஆம்
புராதன காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல் முடிய தகிட தகிட தீம் தகிட தகிட தீம் என்ற தாளக் கட்டு ஒலிக்கப்படுகிறது. ஆட்டம் முடிந்த மனிதக் கூட்டம் ஆட்டலயத்துடன் மேடையை விட்டு வெளியேறுகிறது. பாடல் தொடர்ந்து ஒலிக்கிறது)

காட்சி – 2

(மேடை வெறுமையாய் உள்ளது. மேடையின் வலதுபக்க மூலையில் அமர்ந்திருந்த எடுத்துரைஞர் தலைவன் மேடையின் நடுப்பகுதிக்கு வந்து பாடுகிறான்.)

எடுத்துரைஞன் / விருத்தம்

இப்பொருள் என்னது அப்பொருள் உன்னது
என்றவொரு பேதமற்று
பொது இந்த உலகம் உலகத்தில் பொருள் யாவும்
யாவர்க்கும் உரிமை என்றே
வர்க்க பேதங்கள் அதிலே முளைத்திட்ட
வர்ண இனமத பேதங்கள்
இவையாவும் இல்லாது எம்முடைய முன்னோர்கள்
இருந்த ஒரு காலமுண்டு
அக்காலம் வாழ்ந்திட்ட சமுதாயம் வருகிறது
அமைதியாய் இருந்து பாரீர்!

(கடைசி இரண்டு அடிகளும் அழுத்திக் கூறப்படுகின்றன. வலது பக்கத்தின் மேடையின் பின்புற மூலையினின்று சமுதாயம் வருகிறது. சமுதாயத்தை வரவேற்கும் பாணியில் ஒருவர் மேளமடிப்பதுபோல பாவனைசெய்ய ஒருவர் கொம்பூதுவது போல பாவனை செய்ய, ஒருவர் நடமாடுவதுபோல பாவனை செய்ய, ஒருவர் வரவேற்பதுபோல பாவனைசெய்ய சமுதாயம் வரவேற்புகளுடன் மேடையை ஒரு முறை வலம் வந்த பின்னர் மேடையின் மத்திக்கு வருகிறது. வரவேற்றோர் தத்தம் நிலைகளில் நிற்கிறார்கள் சமுதாயம் பாடி ஆடுகிறது,)

சமுதாயம்

(பாடல்)

மனித சமுதாயம் நானேதான்
சபைக்கு வந்தேன்
மனித சமுதாயம் நானேதான்
மனித சமுதாயம் நானே மக்கள் எல்லாம் இங்கு சமமே
புனிதம் நான் எந்தனிடையே போட்டி பூசல் ஏதும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சமுதாயம் ஆடியபடி சென்று மேடையின் வலது பக்க மூலையில் உறைநிலையில் நிற்கிறது. எடுத்துரைஞர் தலைவன் மேடைக்கு வருகிறான். மேடையில் நின்ற நடிகர்கள் கைகோத்து ஆடுகின்றனர். ஆட்டத்தை அவதானித்தபின் எடுத்துரைஞர் தலைவன் பாடுகிறான்)

எடுத்துரைஞர் தலைவன் I (இராகத்துடன் வசனம்)

இதனுள்ளே வாழும் மாந்தர்கள் அனைவரும்
இரத்த உறவினர் ஆவர்
இவர்களுக்குள்ளே ஏற்றமோ இறக்கமோ
எள்ளளவேனும் இங்கில்லை

(ஆடினோர் உறைநிலையில் நிற்க சமுதாயம் பாடி ஆடுகிறது)

சமுதாயம் (பாடல்)

சாதிபேதம் இங்கு கிடையாதே
மனிதர்களை வாட்டும்
வர்ணபேதம் கூடக்கிடையாதே
சொர்க்கமான வாழ்க்கை ஈதே சோம்பலற்ற வாழ்வும் ஈதே
இப்படியாய் வாழும் நானே இவ்வுலகின் ஜீவஜோதி.

(சமுதாயம் மேடையின் வலதுபக்க மூலைக்குச் சென்று உறைநிலையில் நிற்க மனிதர்கள் தம் வேலைகளைத் தொடர்கின்றனர். எடுத்துரைஞன் மீண்டும் வந்து அவற்றைப் பார்த்துப் பாடுகிறான்)

எடுத்துரைஞன் (இராகவசனம்)

உயர்ந்தவர் இல்லை தாழ்ந்தவர் இல்லை
உழைக்கின்றார் அனைவரும் சமமாய்
உன்னதமான இச் சமுதாயம்
உலகிற்கோர் புதுமையே புதுமை

(வேலை செய்தோர் உறைநிலையில் நிற்க சமுதாயம் பாடி ஆட தொடங்குகிறது)

சமுதாயம் (பாடல்)

வானத்தில் ஏறி வலம் வருவேன்
சுதந்திரமாய்
வையகமெல்லாம் சுற்றிப் பறந்திடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே தனியாள் எனக்கிங்காரும் எஜமானர்களில்லை
வானே என்வீடு இந்த வையகம் என்முற்றம் இன்பம்

(மனிதர்கள் உறைநிலையினின்று விடபட்டுச் சமுதாயத்துடன் சேர்ந்து ஆடுகின்றனர். ஆடியபடி அனைவரும் மேடையை விட்டு வெளியேறுகின்றனர்.)

காட்சி - 3

(மேடையின் அடிப்பாகத்தில் அரைவட்டமாக மனிதர்கள் நிற்கிறார்கள் நிழலுருவங்களாக அவை தெரிகின்றன. மேடையின் வலதுபக்க மூலையில் நின்ற எடுத்துரைஞன் இராக வசனத்தில் கூறுகின்றான்.)

எடுத்துரைஞன் 2

அக்காலச் சமுதாயம் வாழ்ந்திட்ட வாழ்வினை
அவையோருக்கெடுத்துச் சொல்க.

(எடுத்துரைஞன் 2 மேடையின் நடுப்பகுதிக்கு வருகிறான்.)

எடுத்துரைஞன் 2

வேட்டையாடி வேட்டையாடி சமூகம் வாழ்ந்தது—அன்று
வேறு எண்ணம் ஏதும் இன்றிச் சமூகம் வாழ்ந்தது.
கொண்டுவந்த பொருள்கள் யாவும் புதுமையானது—அவற்றை
கூடியிருந்து உண்டு வாழ்ந்து சமூகம் வாழ்ந்தது.
கருவி யாவும் புதுமையாக அன்றிருந்தது—எனவே
கவலையற்றுப் பயங்களற்றுச் சமூகம் வாழ்ந்தது.
வர்க்கபேதம் ஏதுமற்றுச் சமூகம் வாழ்ந்தது—மற்றும்
வர்ணபேதம் ஏதுமற்றுச் சமூகம் வாழ்ந்தது.

(ஆரம்பத்தில் வசனமாகக் கூறிப் பின்னர் பாட்டாகப் பாடுகிறான். பாடல் ஆரம்பித்ததும் மேடையில் அரைவட்ட வடிவமாக உறைநிலையினின்ற மனிதக் கூட்டத்தாருள் ஒருவன் பாய்ந்து வந்து வில்லைத்தூக்கி அம்பைப் பூட்டி, மிருகம் ஒன்றினைத் தாக்க ஆயத்தமாவதுபோல பாவனை செய்கிறான். மிருகத்தைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி அவன் முகங்களில். சூழநின்ற ஏனையோரும் மிருகத்தைத் தாக்க, கம்பு தடிகளைத் தூக்கி ஆயத்தமாகுவதுபோல பாவனை புரிகிறார்கள். மிருகம் ஒன்று பாய்ந்துவருகிறது. வேட்டை நடக்கிறது. வேகமான ஆட்டம்; மிருகம் தாக்கப்படுகிறது. அனைவரின் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் மிருகம் வீழ்கிறது. வீழ்ந்த மிருகத்தின் அருகில் மெல்லச்சென்று மனிதக்கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்துடன் தொட்டுப்பார்க்கிறது. அது இறந்துவிட்டது என்று கண்ட மகிழ்ச்சியில் மிருகத்தைச்சுற்றி மனிதக்கூட்டம் ஒரு மகிழ்ச்சி ஆட்டம் நடத்துகிறது.)

எடுத்துரைஞன் 2 (பாடல்)

கொண்டுவந்த பொருள்கள் யாவும்
பொதுமையானது—அவற்றைக்
கூட இருந்து உண்டு வாழ்ந்து
சமூகம் வாழ்ந்தது.

(மிருகத்தை அனைவரும் தூக்கிக் கொண்டு ஓர் இடத்திற் கிடத்துகிறார்கள். புராதன மனிதர்களைப்போல மிருகத்தின் இறைச்சியைப் பிய்த்தும், கடித்தும், குத்திஎடுத்தும் ஆவலோடு சாப்பிடுகிறார்கள். சிலர் நின்று சாப்பிடுகிறார்கள்; சிலர் மிருகம் மீது விழுந்து கடித்துச் சாப்பிடுகிறார்கள்.)

எடுத்துரைஞன் 2 (பாடல்)

கருவியாவும் பொதுமையாக
அன்றிருந்தது — எனவே
கவலையற்றுப் பயங்களற்றுச்
சமூகம் வாழ்ந்தது.

(கருவியாவும் பொதுமையாக அன்றிருந்தது என்று மீண்டும் பாடிவிட்டு)

* எடுத்துரைஞன் கை என்கிறான். கை என்ற குரல் அரங்கம் முழுவதும் எதிரொலிக்கிறது. தன் கைகளை ஆயுதங்களாகக் காட்டியபடி ஒரு மனிதன் இடதுபக்க மூலைக்கு வருகிறான்.

* எடுத்துரைஞன் கல் என்கிறான். கல் என்ற குரல் அரங்கம் முழுவதும் எதிரொலிக்கிறது. கல்லைத் தூக்கிக் கொண்டு தாக்கும் பாவனையில் ஒருவன் இடதுபக்க மூலையில் முன்னவனுக்கு அருகில் வருகிறான்.

* எடுத்துரைஞன் வில் என்கிறான். வில் என்ற குரல் அரங்கம் முழுவதும் எதிரொலிக்கிறது. வில்தூக்கி அம்பு பூட்டிய பாவனையில் வேட்டையாடும் அசைவுகளோடு ஒருவன் வருகிறான்.

* எடுத்துரைஞன் வேல் என்கிறான். வேல் என்ற குரல் அரங்கம் முழுவதும் எதிரொலிக்கிறது. வேல் தூக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகத்தை எய்யும் பாவனையில் ஒருவன் வருகிறான். இடதுபக்க மூலையில் நால்வரும் அணிவகுக்கின்றனர்.

* கை, கல், வில், வேல் என்று இரண்டு மூன்று தடவை கூறி எடுத்துரைஞன் கருவியாவும் என்ற பாடலை மீண்டும் பாடுகின்றான், பாடலுக்குத்தக்க அணிவகுத்த நால்வரும் தம் ஆயுதங்களால் ஒரு பெரும் மிருகத்தை வீழ்த்துவது போலவும், வீழ்ந்த மிருகத்தை எடுக்க ஓடுவதுபோலவும் அபிநயிக்கிறார்கள். பின் பாடலுக்குத் தக்க வளைந்து வளைந்து ஆடியபடி மேடையை விட்டு வெளியேறுகிறார் கள்)

எடுத்துரைஞன் 2 (பாடல்)

வர்க்க பேதம் ஏதுமற்றுச்
சமூகம் வாழ்ந்தது—மற்றும்
வர்ணபேதம் ஏதுமற்றுச்
சமூகம் வாழ்ந்தது.

(வேட்டையாடி வேட்டையாடி என்ற பாடலைப் பாடியபடி எடுத்துரைஞர்கள் மேடையினின்று வெளியேறுகிறார்கள்.)

காட்சி - 4

(மேடையின் மத்திய பகுதியில் சமுதாயம் நிற்கிறது. சமுதாயத்தின் பின்னால் மனிதர்கள் வரிசையாக நிற்கிறார்கள். மேடையின் அடிபாகத்தில் சபைக்குத் தம் பின்புறத்தைக் காட்டிய வண்ணம் வர்க்க, இன, நிற, சாதி பேத அரக்கர்கள் நிற்கிறார்கள். மேடையின் இடதுபக்க மூலையில் சூரியனாகத் தன்னைப் பாவித்து தன்னைத்தானே சுற்றும் பாவனையில் ஒருவர் நிற்க இன்னொருவர் பூமியாகத் தன்னைப்பாவித்து முன்னவரைச் சுற்றும் பாவனையில் உறை நிலையில் நிற்கிறார். கீழ் வருவதை வசனமாக முதலில் எடுத்துரைஞன் கூறுகிறான். பின்னர் பின்னணியினருடன் சேர்ந்து அதனைப் பாட்டாக இசைக்கிறான்.)

எடுத்துரைஞன் 1

ஞாலம் சுழன்றது ஞாலம் சுழன்றது
நாட்கள் பல சென்றன.
காலம் சுழன்றது காலம் சுழன்றது
மாற்றங்கள் உண்டாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பாடல் தொடங்க மேடையின் இடதுபக்க மூலையில் சூரியனாக அபிநயித்து நின்றவர் தன்னைத்தானே சுற்ற பூமியாக அபிநயித்து நின்றவர் அவரைச்சுற்றி தொங்கு ஓட்டத்தில் தாளத்திற்கு சுற்றி ஓடுகிறார். பாடல் முடிய மீண்டும் உறைநிலையில் நிற்கிறார்கள்.)

எடுத்துரைஞன் 1

உற்பத்தி செய்கின்ற கருவிகள் தொகையாக
உருவாகலான தாங்கே
உழைக்கின்ற சக்தியால் பொருள்களும் மீந்துமே
உபரியாய் ஆனதங்கே.
மற்றவர் கூட்டம் இக்கூட்டத்தைத் தாக்கியதால்
மனிதர்கள் அடிமையானார்.
அடிமைகள் உழைப்பிலே பொருள் பண்டம் பெருகின
ஆள்பவர்கள் அதிகரித்தார்.

(பாடல் தொடங்க மேடையின் மத்தியில் நின்ற சமுதாயம் இடதுபக்க மேடையின் முன்புறம் நகர்கிறது, மேடையில் சமுதாயத்தின் பின் நின்றவர்களுள் ஒருவர் மண்வெட்டியைத் தோளில் வைப்பதுபோல அபிநயிக்கிறார். பின் வரம்பு சமைக்கிறார். இன்னொருவர் மாடுகளைக் கொண்டு வயலை உழுகிறார். மற்றொருவர் நெல்லு விதைக்கிறார். கதிர் முற்றி நிற்பதை அனைவரும் ரசிக்கின்றனர். அரிவாள் தூக்கி அருவி வெட்டுகிறார்கள். கூட்டிக்கட்டுகிறார்கள். உப்பட்டி அடிக்கிறார்கள். நெல்லைத் தூற்றி உமியை அகற்றுகிறார்கள். நெல்லை மூட்டையில் கட்டுகிறார்கள். மேடையில் இடதுபக்க மூலையில் நெல் மூட்டை குவிபடுகிறது.)

எடுத்துரைஞன் 2

உற்பத்தி செய்கின்ற கருவிகள் தொகையாக
உருவாகலான தாங்கே.
உழைக்கின்ற சக்தியால் பொருள்களும் மீந்துமே
உபரியாய் ஆனதங்கே.

(சிறிது நிறுத்தி மேடையில் பின்புறத்தின் இடது பக்க மூலையைச் சுட்டிக் காட்டி 'மற்றவர்' கூட்டம் என்ற சொல் அரங்கு முழுவதும் எதிரொலிக்கிறது. பெருத்த ஆரவாரத்துடன் இடது பக்க மூலையிலிருந்து பணக்காரத் தோற்றத்துடன் ஒருவர் வருகிறார். அவரைக் கண்டதும் வேலை செய்வோர் திடுக்கிடுகின்றனர். பின் தம் வேலைகளைத் தொடர்கின்றனர். வந்தவர் மேடையின் எல்லாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குகளுக்கும் சென்று வேலையாளரை வேலை செய்யும்படி ஏவுகிறார். வேலைசெய்பவர்களுள் ஒருவர் வேலை செய்வோரை விட்டு மெல்ல மெல்லப் பிரிந்து வந்து பணக்காரனுக்கு சாமரை வீசுகிறான். இன்னொருவர் முன்னவரைப் போல பிரிந்து வந்து பணக்காரனுக்குக் கைகால் பிடிக்கிறார். இன்னொருவர் பிரிந்துவந்து கை கட்டி வாய் பொத்தி நிற்கிறார். இப்பரிவாரங்கள் புடைசூழப் பணக்காரன் வேலைசெய்யும் வேலையாளரைச் சுற்றி வலம் வருகிறான்.)

எடுத்துரைஞன் 2

மற்றவர் கூட்டம் இக்கூட்டத்தைத் தாக்கியதால்
மனிதர் பலர் அடிமையானார்.
அடிமைகள் உழைப்பிலே பொருள் பண்டம் பெருகின
ஆள்பவர்கள் அதிகரித்தார்.

(மேடையின் மத்திய பகுதிக்கு வருகிறான். வேலைசெய்யபவர்களையும் அவர்களைச்சுற்றி வந்து வேலைவாங்கும் எஜமானனையும், பணியாட்களையும் சுட்டிக்காட்டிப் பாடுகிறான்)

ஒன்றாக வாழ்ந்திட்ட உரிமைப்பிணைப்பிங்கு
ஓ! கொடுமை சிதறுகிறதே
வர்க்கப்பிரிவினைகள் வரலாற்றில் முதலாக சமூகத்தில் தோன்றலாச்சே.
உழைக்கின்ற பல பேர்கள் உறிஞ்சுகிற சிலபேர்கள்
என வர்க்கப் பிரிவுமாச்சு
உறிஞ்சுகிற சில பேர்கள் பலபேதம் உண்டாக்கி
தொடர்ந்துமே உறிஞ்சலானார்.

எடுத்துரைஞர் அனைவரும்

ஞாலம் சுழன்றது ஞாலம் சுழன்றது
நாட்கள் பல சென்றன.
காலம் சுழன்றது காலம் சுழன்றது
மாற்றங்கள் உண்டாயின.

(மேடையின் முன்புறத்தில் இடதுபக்க மூலையில் சூரியனாகவும் பூமியாகவும் அபிநயித்து நின்றவர்கள் இயங்க ஆரம்பிக்கிறார்கள் மேடை முழுதும் மனித இயக்கம் நடைபெறுகிறது. (பின் மெல்ல மெல்ல மேடையைவிட்டு அனைவரும் நீங்குகின்றனர். எடுத்துரைஞன் மேடையின் மத்திய பகுதிக்கு வருகிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞன் 2

ஆதியிற் சமுதாயம் வர்க்க பேதம் என்ற
அநியாயத்துட் படாது
நீதியாய் அனைவரும் சமம் என்ற நோக்கிலே
நேர்மையாய் வாழும்போது
ஆதியாம் சமுதாய எண்ணங்கள் தம்மையே
அகிலத்தை விட்டு ஓட்டி
பாதியிற் சமுதாயம் தன்னையே தேடியே
பறக்கப் பிடித்திழுத்து
ஓதவே எம்முடைய பணம்படைத்தெஜமானர்
உத்தரவு தலைமேற் கொண்டு
வர்க்க, நிற, சாதி, இன, மத பேத விலங்கினை
வகையாக மாட்டவென்று
வர்க்க, நிற, சாதி, மத, இன பேத அரக்கர்தாம்
வருகின்றார் வருகின்றாரே.

(வர்க்க, நிற, சாதி, மத, இன,பேத அரக்கர்கள் என்ற வரிகள் மந்திர உச்சாடன ஒலிபோல அரங்கு முழுவதும் எதிரொலிக் கிறது. வேலையாட்களை வேலைவாங்கிய எஜமானன் மேடை யின் அடிப்பாகம் சென்று அங்கு உறைநிலையில் நின்ற வர்க்க, நிற, சாதி, மத, இன, பேத அரக்கர்கட்கு உருவேற்றுகிறான். உடுக்கொலி கேட்கிறது. அரக்கர்கள் உயிர் பெறுகிறார்கள். பின்னர் தாளக்கட்டுகளுக்கு ஏற்ப ஆட்டம் ஆரம்பிக்கிறார் கள். பலவித ஆட்டக்கோலங்கள் புரிகிறார்கள்)

எடுத்துரைஞன்

தந்தத் தகிர்தத் தகிர்தத்தாம்
திந்தத் திகிர்தத் திகிர்தத்தெய்
தந்தத் தகிர்தத் தகிர்தத்தாம்
திந்தத் திகிர்தத் திகிர்தத்தெய்

வர்க்க அரக்கன்

ஆதி மனித சமுதாயம் கையில்
அடிமை விலங்கு பூட்டவே
வர்க்கபேத அரக்கர் நாங்கள்
வருகின்றோமே உலகுக்கு

சாதி அரக்கன்

பேதம் இல்லை எமக்குள் என்று
பிதற்றித்திரியும் சமூகத்தை
நாசமாக்க விலங்கு கொண்டு
நாடி ஓடி வருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனபேத அரக்கன்
எம்மை ஆட்டும் எஜமானர்களின்
இதயம் குளிர வைக்கவே
நன்மை கொடுக்கும் சமுதாயத்தினை
நாசம் செய்ய வருகின்றோம்.

நிறபேத அரக்கன்
தேடிப்பிடித்து அதனின் காலில்
சிறந்த விலங்கு பூட்டுவோம்
ஓடிவாரும் நண்பர்காள் இவ்
உலகம் இனிமேல் நம்கையில்.

எடுத்துரைஞன்
சமுதாயம் தன்னைத்தேடி
அரக்கர்கள் திரிகின்றார்கள்

(நான்கு அரக்கர்களும் சமுதாயத்தைத் தேடும் பாவனையில் மேடையில் அலைகிறார்கள். காணவில்லை என்று கை விரிக்கிறார்கள். மீண்டும் மேடையின் அடிபாகத்தில் கூடுகிறார்கள். வர்க்க அரக்கன் பாடிக்கொண்டு முன்னே வருகின்றான்.)

வர்க்கபேத அரக்கன்
தேடிவருவோம் வாருங்கள்—சமுதாயத்தைத்
தேடி வருவோம் வாருங்கள்.
தேடித் தேடியதனைத் தேடிப்பிடித்திழுத்து
நாடி விலங்கு பூட்டி நம்பக்கம் சேர்ப்போமே.

சாதிபேத அரக்கன்
வர்க்க அரக்கனே கேள் சமுதாயம்
வளமாக வாழுதப்பா
மோதியதையுடைத்து முழுச்சாதிபேதமூட்டி
பேதித்துயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமுண்டாக்கிடுவோம்

இனபேத அரக்கன்
அடிமை விலங்கு பூட்டுவோம்—சமுதாயத்தில்
ஆண்டான் அடிமை நாட்டுவோம்
இனபேதச் சமமின்மை எங்குமே தூவுவோம்
என்னரும் நண்பர்காள் எங்கே சமுதாயம்.

நிறபேத அரக்கன்
வெள்ளை கறுப்பன் என்ற விலங்கினைச்
சமுதாயம் கையிலிடுவோம்
கொள்ளை அடிப்போம் குழப்பம் விளைவிப்போம்
பிள்ளைச் சமூகத்தைப் பிடித்தே அடிமை கொள்வோம்.

(ஆடிக்கொண்டே சமுதாயத்தைத் தேடிய பாவனையில் வெளியேறுகிறார்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி - 5

(மனித சமுதாயம் நானேதான் என்ற பாடல் பின்னணியில் ஒலிக்கிறது. சமுதாயம் மகிழ்ச்சிகரமாக மேடையில் ஆடிவருகிறது. பின்மேடையின் வலதுபக்க மூலையில் சென்று அசைந்தபடி நிற்கிறது.)

எடுத்துரைஞன்
ஆதியில் உலகில் வாழ்ந்த சமுதாயம் தன்னைக்கண்டு
அடிமையாய் அதனை ஆக்க அரக்கர்கள் தேடி வந்தார்.
சமுதாயம் தனைப்பிடிக்க தாவியே வந்த அரக்கர்
அமைதியாய் அங்கு வாழ்ந்த சமுதாயம் தன்னைக் கண்டார்.

(அரக்கர்கள் வருகிறார்கள், தேடுகிறார்கள், சமுதாயத்தைக் கண்டபாவனை)

சாதிபேத அரக்கன்
என்னரும் வர்க்க பேதம் எனப்பெயர்
கொண்டு வாழும்
நண்பனே சாற்றக்கேளாய்
நாம் அதோ தேடிவந்த
பன்னரும் சமுதாயம்தான்
பார் அதோ ஓடி ஆடி
மண்ணிலே வாழுதேடா
வா, அதைப் பிடித்துச்செல்வோம்!

(முன்சென்ற சாதிபேத அரக்கனை தடுத்து நிறுத்தி வர்க்க பேத அரக்கன் தானே முன்வந்து சமுதாயத்தைச் சுற்றி நடந்து வருகிறான். பின் பாடுகிறான்)

வர்க்கபேத அரக்கன்
வர்க்க பேதங்கள் மற்றும் வர்ணபேதங்கள் அற்று
சொர்க்கமாய் மக்கள் வாழ்ந்து சுகம் காண வைத்திருக்கும்
ஆதிச்சமுதாயம் என்ற அவ்வுரு நீதானா சொல்
தேடியே இங்கு வந்தோம் நாடியே விலங்கு மாட்ட

சமுதாயம் (பாட்டு)

என்ன குற்றம் நான் செய்தேன்
எனக்கு விலங்கு மாட்ட—ஐயா
வண்ண உலகில் இங்கு
பேதமின்றி வாழ்வதும் தீதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கபேத அரக்கன் (பாடல்)

வர்க்கப் பிரிவினைகள் இன்னும்
வளரவே இல்லை இங்கு இல்லை—அடி
வர்க்கம் தனை வளர்த்து
வர்க்கம் தனை வளர்த்து - இரு
வர்க்கமாய் ஆக்கவே
வந்தோம் நாங்கள் வந்தோம்.

சமுதாயம் (பாடல்)

வர்க்கப் பிரிவினைகள் வளர்த்தாலே
தீமைகள் சேரும்—இந்த
சொர்க்கத்தைக் கெடுக்காதீர்
வர்க்கத்தை ஆக்காதீர்—ஐயா

சாதிபேத அரக்கன் (பாடல்)

சாதிச்சண்டை உன்னிடத்தில்
சற்றேனும் இல்லையே போ போ
நீயும் போ போ—அடி
மோதியுனையுடைத்து
மோதியுனை யுடைத்து
சாதிச்சண்டை பரப்ப வந்தோம்
நாங்கள் வந்தோம்

சமுதாயம் (பாடல்)

சாதியாற் சண்டைகள் சமுதாயத்தில்
நடத்தல் சரியோ—இது
நீதியோ தர்மமோ
நேர்மையான ஞாயம் தானோ

இனபேத அரக்கன்

இனபேதம் சிறிதேனும் இல்லாதுலகிருக்கலாமோ?
இருக்கலாமோ?—அடி
எங்கள் எஜமானர்
எங்கள் எஜமானர்
எங்களை ஏவினார் வந்தோம்
நாங்கள் வந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் (பாடல்)

இனபேதம் சிறிதேனும்
இல்லாமல் வாழ்வதிங்கு தீதோ?—இதை
ஏனழித்திட வந்தீர் இது பிழை
ஏகுவீர்கள் ஐயா!

நிறபேத
அரக்கன் (பாடல்)

நிறபேதம் இல்லாமல் நீயிங்கிருப்பது
பிழையே—மெத்தப் பிழையே—அடி
நிறபேதம் உண்டாக்கி
நிறபேதம் உண்டாக்கி
உன்னை அடிமை நாம்
கொள்வோம்—விலங்கிடுவோம்

சமுதாயம் (பாடல்)

நிறபேதம் இல்லாமல்
நிம்மதியாய் இருத்தல் பிழையோ?
நீர் எம்மைக்கெடுக்காதீர்
நிம்மதி தந்து செல்வீரே.

(ஒவ்வோர் அரக்கரும் சமுதாயத்தைக் குற்றம் சாட்டும் பாவனையில் பாடியபடி சமுதாயத்தைச் சூழ்கிறார்கள்.)

வர்க்கபேத
அரக்கன்

வர்க்கப் பிரிவினைகள் இன்னும் வளரவேயில்லை
இங்கு இல்லை.

சாதிபேத
அரக்கன்

சாதிச்சண்டை உன்னிடத்தில் சற்றேனும் இல்லையே
போ போ நீயும் போ போ

இனபேத
அரக்கன்

இனபேதம் சிறிதேனும் இல்லாது உலகு
இருக்கலாமோ? இருக்கலாமோ?

நிறபேத
அரக்கன்

நிறபேதம் இல்லாமல் நிம்மதியாய் இருத்தல்
பிழையே—மெத்தப் பிழையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கபேத அரக்கன்
வர்க்க பேதம உண்டாக்கி
வர்க்கபேதம் உண்டாக்கி

சாதிபேத அரக்கன்
சாதிபேதம் உண்டாக்கி
சாதிபேதம் உண்டாக்கி

இனபேத அரக்கன்
இனபேதம் உண்டாக்கி
இனபேதம் உண்டாக்கி

நிறபேத அரக்கன்
நிறபேதம் உண்டாக்கி
நிறபேதம் உண்டாக்கி

அனைத்துபேத அரக்கர்களும்
உன்னை அடிமை நாம் கொள்வோம்
விலங்கிடுவோம்

(சுற்றி ஆடியபடி மேடையின் அடிப்பாகத்திற்கு வருகிறார்கள்)

வர்க்க அரக்கன்
என்னரும் நண்பர்மார்களே இனி
என்ன பேச்சடா இதனுடன்
இன்னமும் கதை தேவையோ நமக்கு
இட்ட கட்டளை உண்டலோ
நம்மை ஆக்கியே விட்டவர் மனம்
நாளும் மகிழ்ந்திட விலங்கினை
நண்பனே எடு, நான் பிடித்ததை
நாளிகை தனித் தருகிறேன்.

(எடுத்துரைஞர்கள் பின்வரும் தாளக்கட்டினை மெதுவாகக் கூறத்தொடங்கி மெல்ல மெல்ல விரைவாகக் கூறுகிறார்கள். அதற்குத்தக மேடையைச்சுற்றிச் சமுதாயம் தப்பிஓட அரக்கர் துரத்துகின்றனர். தாளக்கட்டுகள் கூறப்படுகையில் சமுதாயம் ஓட, அரக்கர் துரத்துகின்றனர். பாடல் பாடப் படுகையில் அனைவரும் உறைநிலையில் நிற்கின்றனர்.)
(தாளக்கட்டு)

எடுத்துரைஞன்
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞன் (பாடல்)

அடிமையாக்கிடச் சமுதாயத்தினை
அரக்கர்கள் துரத்தினர் துரத்தினரே
ஐயோ என்று அலறியபடியே
அருமைச் சமுதாயம் ஓடியதே

எடுத்துரைஞன் (தாளக்கட்டு)

தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட

எடுத்துரைஞன் (பாடல்)

விட்டோமா பார் சமுதாயத்தில்
விதைப்போம் பேத விதைகளையே
கட்டுவோம் என்று கனவேகத்துடன்
கையில் விலங்குடன் துரத்தினரே.

எடுத்துரைஞன் (தாளக்கட்டு)

தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட

எடுத்துரைஞன் (பாடல்)

ஞாலம் சுழன்றது ஞாலம் சுழன்றது
நாட்கள் பல சென்றன
காலம் சுழன்றது காலம் சுழன்றது
மாற்றங்கள் உண்டாயின

எடுத்துரைஞன் (தாளக்கட்டு)

தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட
தாகிட தரிகிட தத்திமி தரிகிட

(அரக்கர் உறைநிலையில் நிற்க சமுதாயம் பின்வரும் பாடலுக்கு அபிநயிக்கிறது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வளர்ச்சியில் சமுதாயத்தின்
தனித்துவம் பேண முடியவில்லை
ஓடிய சமூகம் இளைத்தது; நின்றது
உறுதி குலைந்து வீழ்ந்ததுவே.

(அரக்கர் பின்வரும் அடிகளுக்கு அபிநயிக்கிறார்கள்)

எடுத்துரைஞன் (பாடல்)

அரக்கர் பிடித்தனர் சமுதாயத்தினை
அரக்கர் பிடித்தனர் சமுதாயத்தினை
அரக்கர் பிடித்தனர் சமுதாயத்தினை
அடடா விலங்கினை மாட்டினரே
அடடா விலங்கினை மாட்டினரே
அடடா விலங்கினை மாட்டினரே

(அரக்கர் சமுதாயத்திற்கு விலங்கிடுகிறார்கள்.)

சமுதாயம் (பாடல்)

என்ன செய்வேன் ஏது செய்வேன்
என் தலைவிதியிதுவோ?
சாதிபேத வர்க்க அரக்கர்
தந்திரமாய் எனைப்பிடித்து
மோதி வீழ்த்தி அடிமையாக்கி
மூழ்கடித்து விட்டனரே
பேதம் ஏதும் இன்றி வாழ்ந்தேன்
பேதம் இன்று பிடித்ததையோ

உழைத்து வாழும் மக்காள் உங்கள்
உருக்குப் போன்ற கரம்தான் எங்கே?
அடிமை சின்னம் விலங்கறுக்க
அருமை மக்கள் எழுவீர் இங்கே

[redacted](அரக்கர்கள் சமுதாயத்தைக் கட்டி இழுத்துச் செல்கிறார்கள்)

(எடுத்துரைஞர் மெல்ல மெல்ல அசைந்தபடி மேடையின் மத்திய பகுதிக்கு வந்து சபையோரை நோக்கிப் பாடுகிறார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞன் (பாடல்)

வர்க்க அரக்கர் சமுதாயத்தின்
காலில் விலங்கினை மாட்டினரே

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள்
சரமாரியாகப் பெருகியதே

அடிமையானதே சமுதாயம்
ஐயோ கொடுமை நிகழ்ந்ததுவே

என்று மாறுமோ இந்த நிலை?
என்று விடுதலை இது பெறுமோ?

(பின்னணியில் சவ ஊர்வலத்துக்குரிய பறை ஒலி கேட்கிறது. எடுத்துரைஞர் மேடையை விட்டு அகல்கின்றனர் திரை மூடுகிறது)

(இடைவேளை)

காட்சி - 6

(திரை திறபடுகிறது. மேடையின் வலதுபக்க மூலையில் எடுத்துரைஞர்கள் நிற்கிறார்கள்)

எடுத்துரைஞன் ஞாலம் சுழன்றது ஞாலம் சுழன்றது.
நாட்கள் பல சென்றன.
காலம் சுழன்றது காலம் சுழன்றது
மாற்றங்கள் உண்டாயின.

(சூரியன் சுழல்வது போன்றதும் பூமி சுற்றுவது போன்றது மான அபிநயம் மேடையின் வலதுபக்க மூலையில் நடைபெறுகிறது)

(மேடையின் இடதுபக்க மூலையினின்று வலதுபக்க மூலையை நோக்கி அரக்கர் சமுதாயத்தை விலங்கிட்டு அழைத்தபடி மெதுவாக அசைகின்றனர். பின்னால் மனிதர்கள் அடிமை நிலையில் கைகள் பிணைக்கப்பட்டவாறு இரு வரிசையாகத் தொடர்கின்றனர். அனைவர் முகத்திலும் துயரம், சோகம் நீண்டதொரு துயரமான அடிமைப் பயணத்தைப் பிரதிபலிப்பதாக அவ்வசைவுகள் அமைகின்றன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞன் ஹோ! ஹோ! ஹொஹ் ஹொஹ்ஹோ!
ஹோ! ஹோ! ஹொஹ் ஹொஹ்ஹோ!
ஹோ! ஹோ! ஹொஹ்ஹொஹொஹ்ஹோ!

ஞாலம் சுழன்றது ஞாலம் சுழன்றது.
நாட்கள் பல சென்றன.
காலம் சுழன்றது காலம் சுழன்றது.
மாற்றங்கள் உண்டாயின.

ஹோ ஹோ ஹொஹ் ஹொஹ்ஹோ. (4 தடவை)

காலம் காலம் சென்றது சமூகம்
கண்ணீர் வடித்து நின்றதுவே
அடிமைப்பட்டது சமுதாயம் அதன்
விலங்கினை அறுப்பவர் யாரும் இல்லை.

(அரக்கர் சமுதாயத்தை இழுத்துச் செல்கின்றனர்.)

உழைப்பினை உறிஞ்சிக் கொழுத்தவர் பலபேர்
உண்மையை மறைத்தனர் மக்களிடம்
உழைக்கும் மக்கள் உலகம் புரியாது
உழைத்து உழைத்து மாய்ந்தனரே

(பணக்காரன் அடியாட்கள் புடைசூழ மேடையின் குறுக்காகச் செல்கிறான்)

ஹோ! ஹோ! ஹெஹ்ஹெஹ்ஹோ! (4 தடவை)

(மக்களின் பயணம் நிற்கிறது. நடந்து சென்றோருள் ஐவர் மாத்திரம் மேடையில் எஞ்சுகிறார்கள். மேடையில் ஐவரும் பரந்து நிற்கிறார்கள்.)

* இருவர் கதிர் அறுக்கும் பாவனையில்
* மற்றவர் சுத்தியலால் இரும்படிக்கு பாவணையில்ம்
* இன்னொருவர் மூட்டை தூக்கும் பாவனையில்
* ஒருவர் எழுதிப்படிக்கும் பாவனையில் நிற்கிறார்கள்.

(சமுதாயம் மேடையின் இடதுபக்க மூலையில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் பாடலுக்குத் தக மேடையில் நிற்போர் மெல்லிய அசைவுகளுக்கூடத் தமது வேலைகளை வெளிப்படுத்துகிறார்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் பேதம் ஏதும் இன்றி வாழ்ந்தேன்
பேதம் இன்று பிணைத்ததையோ
உழைத்து வாழும் மக்கள் உங்கள்
உருக்குப் போன்ற கரம்தான் எங்கே
அடிமைச் சின்மை விலங்கறுக்க
அருமை மக்காள் எழுவீர் இன்றே.

(வேலை செய்து கொண்டிருந்தவர்களுள் ஒருவன் சமுதாயத்தின் குரலினால் ஈர்க்கப்படுகின்றான். சமுதாயத்தின் குரலைக் கேட்கிறான். அவதானிக்கிறான், தேடுகிறான், உணர்கிறான், பின் பாடுகிறான்.)

தொழிலாளி—1 **விருத்தம்**

சாதியுடன் வர்க்க, நிற, மதபேத அரக்கர்தாம் தாவியே ஓடிவந்து
சமுதாயம் கைகாலில் விலங்குதனை மாட்டியே
தான் கொண்டு செல்கின்றாரே.

(சமுதாயம் வாடும், 'உழைத்து வாழும் மக்காள்' என்ற பாடல் அடிகள் கேட்கின்றது. தொழிலாளரும் புத்திஜீவியும் தம் கரங்களைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டபின், மீண்டும் தத்தம் வேலைகளிலீடுபடுகின்றனர். அவர்களைப் பார்த்துச் சலித்துவிட்டு தொழிலாளி 1 மீண்டும் பாடுகின்றான்.)

ஆவியே துடித்ததோ சமுதாயம் கூவுகிற
அவலமாம் குரல் நும்காதில்
மோதவே இல்லையா மக்களே விழியுங்கள்
முறிப்போமே அடிமை விலங்கை.

(அவனின் குரலைக் கவனியாது அனைவரும் தத்தம் வேலைகளிலீடுபடுகின்றனர். அவன் மக்களைச் சுற்றி வருகிறான். அவதானிக்கிறான். பின் ஒவ்வொருத்தராகத் தொட்டுத் தொட்டு உசுப்பிப் பாடுகிறான்.)

உழுபவனைப் பார்த்து ஏரைக் கொண்டு நிலத்தை உழுதிடும்
என்னரும் தோழனே கேள்.
எம்முடை சமூக ஏக்கக் குரல்தான்
இன்னும் விழவில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லனைப் பார்த்து

இரும்பை உருக்கிக் காய்ச்சிப் புதுப்பொருள்
ஏற்றிடும் தொழிலாளி
ஏனோ உந்தன் கரங்கள் இன்னும்
இப்படி இருக்கிறதே?

மூட்டை சுமப்பவனைப் பார்த்து

மூட்டை சுமந்து முதுகை உடைத்திடும்
முதுபெரும் தோழனே கேள்
வாட்டம் தீர்ப்போம் வல்லமை கொள்வாய்
வாடா நீ வெளியே.

புத்திஜீவியைப் பார்த்து

எழுதிப் படித்து உழைத்துமாழும்
என்னரும் தோழனே கேள்
அழுது புலம்பும் சமூகம் மீட்க இவ்
அணியில் நீயும் சேர்.

(அனைவரும் கவனியாமல் தத்தம் வேலையிலீடுபடுகிறார்கள். தொழிலாளி 1 ஆத்திரமடைகிறான். வேகமாக ஆட்டம் ஒன்று அவர்களைச் சுற்றி ஆடுகிறான். பின் பாடுகிறான்.)

மக்கள் உலகம் மாழுதடா பார்.
வர்க்க அரக்கரினால்
மாய்ப்போம் வர்க்கப் பேயை மக்காள்
எழுவர் இன்றெழுவீர்.

(தொழிலாளரும் புத்திஜீவியும் அசைக்கப்படுகிறார்கள். மெல்ல நிமிர்கிறார்கள். ஒன்று சேர்கிறார்கள். தொழிலாளி 1 தலைமையில் அணிவகுப்புப் பாணியில் வரிசையாக நிற்கிறார்கள்.)

எடுத்துரைஞன்

உழைப்போர் அனைவரும்
ஒன்றாய் நிற்கும்
ஒருகாலம் உருவானதுவே
ஒருவரை ஒருவர் புரிந்துகொண்ட
ஒருகாலம் உருவானதுவே
அது இக்காலம்—ஆம்
அது இக்காலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞர் அனைவரும் (தாளக்கட்டு)

தத்தித்தாம் தெய்ய தித்தித் தெய்யா தெய்ய
தத்தித்தாம் தெய்ய தித்தித் தெய்யா தெய்ய

(தாளக்கட்டுக்கு அனைவரும் ஆட்டக்கோலம் புரிகிறார்கள். மக்களின் உணர்வை, திரள்வை ஒற்றுமையை, புலப்படுத்துவதாக ஆட்டம் அமைகிறது.)

தொழிலாளி 1 (பாடல்)

பேத அரக்கரை சாய்த்திடவே—இங்கு
வீரர் பலம் எழுந்தோமே இன்று
சாதி நிற வர்க்க அரக்கரைச் சாய்த்திட
நீதி வழியில் ஒன்றாயினம் நாமுமே
மோதி அவரை விரட்டித் துரத்தி
விலங்கொடித்துச் சமுதாயம் காப்பாற்றிட

தொழிலாளி 2 (விருத்தம்)

இது நாளும் அறியாத சமுதாய எண்ணத்தை
எங்களுக்கூட்டிவிட்ட
மதிப்பான எங்கள் தலைவரே ஒரு வார்த்தை
மன்னிக்க வேண்டுமையா
எங்களின் எஜமானன் எங்களுக்குதவுவான்
இது உண்மை உனக்குச் சொன்னேன்
அங்கு அவர் வீட்டுக்குச் சென்று நாம் அறிவித்தால்
அவர் உதவி கிடைக்குமையா

தொழிலாளி (பாடல்)

எஜமானன் நமக்குத்தான் எப்படி உதவுவான்
இதனை நீ அறியாயா எனது தோழா
எம்மை நசுக்கியே எழிலாக வாழ்பவர்
எம் குறை தீர்ப்பாரோ

தொழிலாளி 2 (பாடல்)

என்றாலும் ஒருதரம் எஜமானனிடம் சென்று
எம்குறை சொல்வோமே வருவீர்கள்
நன்றாகச் சொல்கிறேன் நம்பக்கம் நின்றுமே
நல்லது சொல்வாரப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி | (பாடல்)

உழைப்பவர்க்கெதிரிகள் உறிஞ்சுபவரே என்ற
உண்மையை உணர்ந்துகொள் நீ எனது தோழா
உறிஞ்சும் கூட்டத்தோடு உடன்பாடு காணுதல்
ஒரு நாளும் நடவாது.

புத்திஜீவி (பாடல்)

என்றாலும் ஒருதரம் எஜமானனிடம் சென்று
எம்குறை சொல்வோமே வருவீர்கள்
நன்றாகச் சொல்கிறேன் நம்பக்கம் நின்றுமே
நல்லது சொல்வாரப்பா.

தொழிலாளி | (விருத்தம்)

என்னரும் தோழர்காள் இனி எங்கள் விழிப்புக்கு
இடையூறாய் இங்கு எவர் வரினும்
அன்னவர் தோல்வி அடைவது நிஜமே
ஆட்சேபம் எனக்கில்லை செல்வோம்.

(அனைவரும் மேடையை விட்டுச் செல்கிறார்கள்.)

காட்சி - 7

எடுத்துரைஞன் | அன்றுதொட்டின்று வரை சமுதாயம் கைகாலில்
விலங்குதனை மாட்டி வைத்து
தங்களுடை பொருள் பண்டம் தம்மையே பெருக்கி வாழ்
தனியுடைமைக் கூட்டத்தாரின்
தொன்று தொட்டேவந்த சுகமான வாரிசவர்
தோற்றத்தை சிறிது பாரீர்.
நன்று இவர் பெருமை தன்னை நாவால் உரைத்திடுவார்
நாங்கள் இதை இருந்து பார்ப்போம்.

(ஓர் அடிமை தாளத்திற்கு ஆடி வந்து வீதிகூட்டிப் பெருக்கு கிறான். கூட்டிய இடத்தில் பன்னீர் தெளித்துச் சுத்தம் செய்கிறான். அலுவல் முடிய பவ்வியமாக ஓரிடத்தில் நிற்கிறான். இன்னோர் அடிமை துணிமூட்டை சுமந்து வந்து கீழே வைத்துவிட்டு அதனைப் பிரித்து நீலப்பாவாடை எடுத்து எஜமானன் வரும் வழியில் விரிக்கிறான். இன்னும் இருவர் காவற்காரர் கட்டியம் கூறுவதுபோல வந்து நிற்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். எல்லாம் பாவனையில் நடைபெறுகிறது. ஒருவன் குடைபிடிக்க, இன்னொருவன் ஆலவட்டம் சுமக்க, இன்னொருவன் இருப்பதற்கான ஆசனம் தாங்கிவர, எஜமானன் மேடையில் பிரவேசம் செய்கிறான்.)

எஜமானன் (விருத்தம்)

சிறந்த நற்சாராயம் தான்
தினம் தினம் போட்டுக்கொண்டு
நிறைந்ததோர் பணத்தை எல்லாம்
நிதம் நிதம் தேடிவைத்து
புவியினிற் பேர்தான் ஓங்கப்
புகழோடு வாழுகின்ற
நனிமிகச் சிறந்த எஜமான்
நான் இதோ சபைக்கு வந்தேன்.

எடுத்துரைஞன் (தாளக்கட்டு)

தாதெய்யா தெய்தெய்ய
தாதெய்யத்தோம் தருகிட
தாதெய்யா தெய்தெய்ய
தாதெய்யத்தோம் தருகிட

(எஜமான் தாளக்கட்டுக்கு ஆடக் கோலங்கள் புரிந்து மேடைக்கு முன் வந்து தாளம் தீர்த்த பின் பாடுகிறான்)

வந்தான் பாரீர் எஜமானன்
வாறான் பாரீர்!
வந்தான் எஜமானன் வண்டி தடவிக்கொண்டு
சிந்தை மகிழ்ந்திட மண்டை கிறங்கிட

பணம் மிகப் படைத்தோன்—உலகில்
இணையாவார் எவரோ?
நானே கடவுளடா நாய்கள் அடிமைகள்தான்
தானே தனிமுதல்வன் சபையிலிதோ வந்தேன்

(மேடையின் வலதுபக்க மூலையில் அடிமை வைத்த ஆசனத்தில் எஜமான் அமர்கிறான்—குடை ஆலவட்டம் தாங்கியோர் பின்னால் நிற்கின்றனர் மேடையின் இடது பக்கத்திலிருந்து தொழிலாளர் வரிசையாக வருகிறார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி 1 (பாடல்)

ஐயா நமஸ்காரம் எங்களுடைய
ஆண்டவா நமஸ்காரம்
மெய்யனே உம் உதவி எங்களுக்கு
வேண்டுமையா வேண்டும்.

எஜமானன் (பாடல்)

என்ன உதவியடா வேண்டும் உமக்கு
எடுத்துச் சொல்வீர் எம்முன்னே
தின்னச் சோறா சேலையா அடிமைகளே
செப்பிடுவீர் கெதியில்.

தொழிலாளி 2 (பாடல்)

எமது சமுதாயத்தைப் பேத அரக்கன்
இழுத்துக் கொண்டோடுகிறான்.
விடுதலை தரவேண்டும் சமுதாயத்தின்
விலங்கொடித்திட வேண்டும்.

எஜமானன் (பாடல்)

சமுதாயம் போனால் என்ன சாதி சனங்கள்
தானாய்ப்பிரிந்தால் என்ன?
அமைவாக வேலை செய்வீர்—அடிமைகளே
அதைப்பற்றி ஏன் கவலை!

தொழிலாளி 1 (கவி)

இப்படி நீங்கள் எமக்கிங்கு உரைத்தால்
எவ்விதம் ஞாயமே ஆகும்
உங்களுக்காக நாளெலாம் உழைக்கிறோம்
உதவியே எங்களுக்கிலையா?

எஜமானன் (கவி)

உழைப்பதற்காக ஊதியம் தருகிறேன்
உதவியும் செய்திடல் சரியோ?
உழைப்பதே உங்கள் உன்னத கடமையாம்
ஊர்வேலை பார்ப்பது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திஜீவி (கவி)

ஊர்வேலை பார்க்க உங்களைப்போல
உள்ளோர்கள் வராவிடில் ஐயா
ஆர் வேறு உள்ளார் ஆதலால் நாங்கள்
ஐக்கியப்பட்டிங்கு வந்தோம்

எஜமானன் (கவி)

நாளெலாம் உழைக்கும் நீங்களா என்முன்
ஞாயங்கள் பேசவும் வந்தீர்?

தொழிலாளி 3 (கவி)

ஞாயங்கள் பேசிட நாள்தோறும் எங்கள்
நாக்குகள் சுழலுதல் பிழையோ?

எஜமானன் (கவி)

ஞாயங்கள் பேச உம் நாக்குகள் சுழலுமேல்
நசுக்குவேன் ஜாக்கிரதை செல்க.

தொழிலாளி 4 (கவி)

செல்ல நாம் இங்கு வரவில்லை ஐயா
உம்மையும் சேர்க்கவே வந்தோம்

எஜமானன் (கவி)

உம்முடன் கூட நான் சரிசமமாய்
உலா வரவும் இங்கு ஆச்சோ?

தொழிலாளி 1 (கவி)

அப்படியாயின் நீங்கள் இங்கமர்க
நாங்கள் தனியாகவே செல்வோம்.

(மக்கள் போகத் திரும்புகிறார்கள் அவர்கள் முகங்களில் ஏமாற்றமும் கோபமும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஜமானன் செல்லக்கூடா
நீங்கள் செல்லவா?
தனியே செல்லவா?
செல்லக்கூடா
உரிமைக் காரன் இங்கே இருக்க
அடிமைகள் நீங்கள் தனியே செல்லவா
செல்லக்கூடா

தொழிலாளர் அனைவரும் செல்வோம்! செல்வோம்!!

எஜமானன் போகக்கூடா!

தொழிலாளர் போவோம்! போவோம்!!

எஜமானன் அசையக்கூடா!

தொழிலாளர் அனைவரும் அசைவோம்! அசைவோம்!!

(கோபத்துடன் அங்கும் இங்கும் அசைந்தபடி அதே வசனங் களை எஜமானன் உச்சரிக்கின்றான். தொழிலாளர் அதே மறுமொழி தருகிறார்கள். எஜமானன் மேடை மீது கிடக்கும் ஒரு நீண்ட கயிறைக் கயிறு இழுக்கும் பாவனையில் தூக்கு கிறான். தொழிலாளரும் அதே பாவனையில் தூக்குகிறார்கள்.

எஜமானனைச் சாந்த அடியாட்கள் எஜமானன் வெற்றி பெற உற்சாக மூட்டுகிறார்கள். எஜமானனுக்கும் தொழிலாளர் கட்குமிடையே கயிறுழுத்தல் போட்டி நடைபெறுகிறது.

செல்லக்கூடா, செல்வோம்! செல்வோம்! என்ற அடிகளை எஜமானனும் தொழிலாளரும் மாறி மாறிக் கூறியபடி இழுக்கிறார்கள். கடும் போட்டியின் பின் தொழிலாளர் வென்று விடுகிறார்கள். கீழே சரிந்த எஜமானன் எழுந்து அங்கும் இங்கும் உலாவுகின்றான். பின் மிகக்கோபத்துடன் கூறுகிறான்.)

எஜமானன் எந்தன் உப்பையே நாளும் உண்டுமே
வாழ்ந்து வந்திடும் அடிமைகாள்
இந்த வார்த்தைகள் இங்குரைத்திட
எண்ணம் வந்தது எப்படி?
(ஆவேசத்துடன்)
செல்லக்கூடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் செல்வோம்! செல்வோம்!!

எஜமானன் (மிகுந்த கோபத்துடன்)

ஆ..................

குண்டர்காள் மெய்த்தொண்டர்காள் இக்
குரல் எழுப்புவோர் தம்மையே
அண்டியே சென்றடக்குவீர் சில
அடிகள் போடுவீர் ஆணையே.

(குண்டர்கள் திரள்கிறார்கள். தொழிலாளர்கள், புத்திஜீவி அனைவரும் அடிபட்டு வீழ்கிறார்கள். வீழ்ந்து கிடக்கும் அனைவரையும் அலட்சியமாகப் பார்த்தபடி அவர்களைக் கடந்து எஜமானன் தன் அடியாட்களுடன் செல்கின்றான்)

(எடுத்துரைஞர்கள் வீழ்ந்து கிடக்கும் மக்களை நோக்கிக் கூறுகிறார்கள்.)

எடுத்துரைஞர் சாதி, நிற, வர்க்க, இன அரக்கர்களின் விலங்குதனைத்
தான் ஒடித் தெறிந்து இங்கே
நீதியை நிலைநாட்ட எஜமானன் வரமாட்டான்
நீங்கள் இதை அறிந்து கொள்வீர்!

(வீழ்ந்து கிடக்கும் மக்கள் காதில் இவ்வரிகள் மந்திரச்சொற்களாய்ப் பாய்கின்றன. தொழிலாளி 1 பின்வரும் வரிகளை மந்திர உச்சாடனம் சொல்வதுபோலச் சொல்கிறான் விழுந்தவர்கள் மெல்ல மெல்ல எழுகிறார்கள்.)

தொழிலாளர் 1 உழைக்கின்ற மக்கள் நாம் உலகிலே இனிமேல்
பிறரையே நாம் நம்பமாட்டோம்.
இழுப்பதற்கிங்கு எதுவுமே இல்லை
பெறுவதற்குலகமுண்டு.

இது நாள்வரையும் இவ்வுலகில் நாம் பட்ட
துயரத்தின் மீது ஆணை!
ஏழைகள் எங்கள் பெருமூச்சு மீதாணை!
இல்லாமை மீது ஆணை!
எழுவீர்கள்! எழுவீர்கள்! அடங்கிய கூட்டமே
எழுவீர்கள்!!! வேகமாக.

(மந்திர உச்சாடனத்திற்கு ஏறப வீழ்ந்து கிடந்தவர்கள் மெல்ல மெல்ல எழுகிறார்கள்; ஆளை ஆள் அர்த்தத்துடனும் உறுதியுடனும் பார்க்கிறார்கள்; கைகோர்க்கிறார்கள்; உற்சாகமுறுகிறார்கள்; அணி திரள்கிறார்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி / (பாடல்)

சாதி, நிற, இன அரக்கரைச் சாய்த்திடுவோம்
சங்காரம் செய்வோம்
சாதி, நிற அரக்கரைச் சாய்த்திடுவோம்
மோதி அவருடன் அடிமை விலங்கறுப்போம்
வாரீர்! வாரீர்! வாரீர்! எம் தோழர்காள்

சமுதாயம் தன்னைக் காத்திடவே
சகலரும் எழுவோம்
சமுதாயம் தன்னைக் காத்திடவே
எம் சமுதாயத்தின் விலங்கினை ஒடித்திட
எழுவீர்! எழுவீர்! எழுவீர்! எம் தோழர்காள்

பழையதோர் சிந்தனை செயல்களையே
பாரைவிட்டோட்டிட
பழையதோர் சிந்தனை செயல்களையே
புதியதோர் உலகினைப் புவியினில் நாட்டிட
புறப்படு! புறப்படு!! புறப்படு!!! வீரனே.

(வேகமான ஆட்டம் மேடையை விட்டுச் செல்கிறார்கள் எடுத்துரைஞர்கள மேடையின் வலதுபக்க மூலையில் எழுந்து நின்று கூறுகிறார்கள்.

எடுத்துரைஞன் உழைக்கும் மக்கள் யாவரும் இங்கே
ஒன்றாய் ஆகி எழுந்தார்கள்
உலகில் வாழும் மக்கள் அனைவரும்
ஒன்றாய் ஆகி எழுந்தார்கள்
அடிமைப்பட்ட சமுதாயம் தனை
அவசியமீட்க வேண்டுமென

எடுத்துரைஞர் அனைவரும் உழைக்கும் மக்கள் யாவரும் இங்கே
ஒன்றாய் ஆகி எழுந்தார்கள்

எடுத்துரைஞன் தங்கள் கரத்தை தங்கள் பலத்தை
தங்கள் பிணைப்பை முன் வைத்தே

எடுத்துரைஞர் அனைவரும் உழைக்கும் மக்கள் யாவரும் இங்கே
ஒன்றாய் ஆகி எழுந்தார்கள்

(மேடையின் அடிப்பாகத்தில் மக்கள் அணிவகுத்துப் பெரும் தொகையாகச் செல்லும் காட்சி நிழலுருவங்களாகத் தெரிகின்றன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையாக்கிச் சமுதாயத்தை
அடித்து வருத்திச் சிறைவைத்த
அரக்கர் இருக்கும் திசையினை நோக்கி
உழைக்கும் மக்கள் செல்கின்றார்.

(நடைமாற்றி)

காடுகள் பல கடந்து செல்கிறார்
கடல்கள் எத்தனை பாய்ந்து செல்கிறார்.
ஆறு பற்பல நீந்திச் செல்கிறார்
அரிய வழிபல கடந்து செல்கிறார்.

மலைகள் ஆயிரம் ஏறிச்செல்கிறார்
தடைகள் ஆயிரம் தாண்டிச் செல்கிறார்.

நாட்கள் தாண்டியே செல்கிறார்
நன் மாதம் தாண்டியே செல்கிறார்
வருஷம் பற்பல தாண்டியே புது
வாழ்க்கை தேடியே செல்கிறார்.

எடுத்துரைஞர் அனைவரும்
நீண்டு செல்கிற பயணமே இது
நீண்ட பயணமே பயணமே
செல்கிறார் அவர் செல்கிறார் மிக
வேகமாகவே செல்கிறார்.

காட்சி - 8

(மேடையின் இடதுபக்க மூலையில் சமுதாயம் ஒரு கூட்டுக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கிறது வர்க்க, சாதி, மத, நிற, இன பேதஅரக்கர்கள் அதனைச்சூழ நிற்கிறார்கள். பின் கூட்டைத் திறந்து அதனை வெளியே எடுக்கிறார்கள். சவுக்கினால் அதற்கு அடிக்கிறார்கள். இதனை அவதானித்த எடுத்துரைஞன் பாடுகிறான்.)

எடுத்துரைஞன்
சாதியோடு வர்க்க, நிற, மத பேதமுடை
அரக்கர்கள் சமுதாயத்தை
வீதியில் நிறுத்தியே சவுக்கெடுத்ததன் மீது
வீசினார் வீசும்போது
ஆவியே உருகியே சமுதாயம் ஐயையோ
அலறியே துடிதுடித்து
மேவியே எனைக்காரும் மக்களே என்றுமே
மேதினியைப் பார்த்தழுதாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைஞன் (அரக்கர்களின் சவுக்கடியின் பின்னணியில் வேதனை யுடன் சமுதாயம் பாடுகிறது)

சமுதாயம் என்ன செய்வேன் எந்தன் மக்காள்
என் தலைவிதி இதுவே
முன்னே என்னைப் பிடித்தோர் தாமும்
முட் சவுக்கால் அடிக்கின்றாரே
என்னுடலின் இரத்தம் தன்னை
இவர் உறிஞ்சிக் குடிக்கின்றாரே
என்னைக் காக்கும் கரமே இந்த
இகத்திற்தானும் இலையோ ஐயோ

(சமுதாயத்தை அடிக்கும் வேகம் கூடுகிறது. வர்க்க அரக்கன் சென்று அதன் குரல்வளையை நெரித்து அதன் இரத்தம் முழுவதையும் உறிஞ்சுவதுபோல பாவனை புரிகிறான். சமுதாயம் உயிருக்காகப் போராடுகிறது. அதன் தற்காப்பு போராட்டம் உச்சக்கட்டம்அடைகிறது. மக்கள் மேடைக்குள் பாய்கிறார்கள்.)

தொழிலாளி I (விருத்தம்)

நிறுத்தடா நிறுத்தடா வர்க்கம் எனும் அரக்கனே
நீசனே எம்மை நீர்பார்
அறுக்கவே அடிமை எனும் விலங்கினை இங்கு நாம்
ஆயிரவர் கூடிவிட்டோம்.
பொறுத்திட்டோம் இதுநாளும் இனிமேலும் முடியாது
பொங்கி நாம் இங்கு வந்தோம்
நொறுக்குவோம் எலும்பெலாம் நும்முடைய கூட்டத்தை

மக்கள் (பாடல்)

அழித்திடவே வந்தோம் பாரடா
அடடா அரக்கா
ஒழித்திட நாம் திரண்டோம் கேளடா
வர்க்க அரக்கரை வதை செய்ய வந்திட்டோம்
வதை படுமுன்னமே கதை கூறாதோடுவீர்.

வர்க்க அரக்கன் (விருத்தம்)

பொதுமக்கள் நீங்களா போங்கடா கேளுங்கள்
புத்தி நான் ஒன்று சொல்வேன்.
இது என்ன புதினம் நீர் எம்மையே அழித்திட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமா ஓடிப்போங்கள்
உழைக்கின்ற மக்கள்தாம் ஒன்றாகக் கூடியே
உலகத்தின் விலங்கொடித்த
சரித்திரம் எங்காலும் கேட்டதுண்டோ போ

அரக்கர் (பாடல்)

தர்மத்தை நாங்கள் அழிப்போம்
தலைவனே கேள்
கர்மத்தை நாங்கள் முடிப்போம்
எங்களை வென்றிட வந்த எலும்புகளே
உங்களுக்கிறுதி உண்டிங்கு அறிகுவீர்!

(அரக்கர்களும் மக்களும் எதிர் எதிராக நின்று சமருக்காக வியூகம் அமைக்கும் பாணியில் பல வித ஆட்டக் கோலங்கள் புரிகிறார்கள்.)

சாதிபேத அரக்கன் சாதிபேதம் என்பவன் நானடா — இங்கு
சரி நிகர் சமம் எனக்காரடா
சாதிபேதம் சமுதாயத்திற் சரியடா
ஓதுகிறேன் இதை ஓடுவீர் ஓடுவீர்!

தொழிலாளி 1 சாதியே உனை இங்கு மாய்த்திட—நாங்கள்
சாதிபேதம் இன்றித் திரண்டிட்டோம்
நீதி நிறை உலகை உருவாக்கிட
சாதியேஉன்சிரம் சங்காரம் செய்கிறோம்.

(கடுமையான சண்டை நடைபெறுகிறது. வேகமான ஆட்ட முடிவில் சாதிபேத அரக்கனை தொழிலார் தம் வியூகத்துள் இழுத்து விடுகிறார்கள். அகப்பட்டுக்கொண்டு சாதிபேத அரக்கனை அடித்துக் கலைக்கிறார்கள். கலைத்த பின்னர் ஏனைய அரக்கர்கட்கு எதிராக அணிவகுக்கின்றார்கள்.)

இனபேத அரக்கன் இனபேதம் என்பவன் நானடா—அடா
இங்கெனக்கெதிரியும் யாரடா
அனைவரும் சமமில்லை. ஆகவும் முடியாது.
அடித்து நான் சொல்லுவேன் அப்பாலே செல்லுவீர்!

தொழிலாளி 2 இனபேத அரக்கனை மாய்த்திட—இங்கு
எழுந்தோமே உழைக்கின்ற மக்கள் நாம்
இனபேத அரக்கனே இதோ உந்தன் உடலது
ஏகுது ஏகுது ஏகுது அறிகுவாய்

(சாதிபேத அரக்கன் சிறைபட்டுக் கலைக்கப்பட்ட முறையில் இவ்வரக்கனும் கலைக்கப்படுகிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறபேத, மதபேத அரக்கர்கள் நிற, மதபேதங்கள் நாமடா—இங்கு
நிகர் எமக்குள்ளவர் யாரடா.
நிற, மத வெறிகளே நிலத்தில் வேண்டுமடா
நீசர்கள் அறிந்துமே நிற்காது ஓடுவீர்!

தொழிலாளி 3 நிறமத அரக்கரை மாய்த்திட—இங்கு
நேரிலே பொதுமக்கள் வந்தோமே.
அறுத்திட விலங்கினை அறுப்போம் உமதுசிரம்
அறுத்திட்டோம் உம் ஆவிபோகுது அறிகுவீர்.

(முன்னைய அரக்கர் போல இவர்களும் சிறைபட்டுக் கலை படுகிறார்கள். வர்க்க அரக்கன் தனித்து நிற்கிறான். அங்கும் இங்கும் அலைகிறான். கைகளைப் பிசைகிறான். பின்னர் மக்கள் முன் வந்து நின்று கூறுகிறான்.)

வர்க்க அரக்கன் (விருத்தம்)

எவரை நீர் வென்றாலும் எனை வெல்ல முடியாது
இதனை நீர் அறியமாட்டீர்
உமையெல்லாம் பொடியாக்கி ஊதுவேன் ஜாக்கிரதை
உயிர்தப்பிப் பிழைத்துப்போங்கள்
இதுவரையும் எனைக்கொல்ல இவ்வுலகில் எத்தனைபேர்
இருந்தார்கள் தெரியுமோடா?
எதிர்த்தவர்கள் அழிந்தார்கள் அழியாத சக்தி நான்
இன்றும்மை நான் அழிப்பேன்

தொழிலாளி 1 (பாடல்)

வர்க்க ஒழுங்கினை ஒடிக்க நாம் வந்தோம்
அரக்கனே நீ
வாவடா வெளியே அழிய
இனிமேல் இங்கு

சமுதாய ஒழுங்கினைத் தானொடித்திடுவது
எமது கடமையடா இதனை நீ அறிகுவாய்
பொல்லா வர்க்க இன பேதங்கள் போக்கியே
பூமியை விடுதலை செய்யப் புறப்பட்டோம்
அடிமை விலங்கறுத்து அதை நாம் காப்போம்
துடிக்கும் கரமே துணை நீ அறிவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கஅரக்கன் (பாடல்)

என்ன வார்த்தைகள் இங்குபேச வந்தீர்
பொதுமக்களே
ஏகுவீர் உமை ஏங்க வைத்திடுவேன்
சமுதாயம் தான்
எமது கையினின்று என்னடா செய்குவீர்
எம்மால் முடியுமோ ஒடிக்கவும் விலங்கினை
வெகுஜனங்களே நீர் வீரர்போல் வருகிறீர்

அருமை அருமையடா அழிப்பேன் உங்களை
திறமைகள் அறியீரோ தெரியீரே—இன்னும்
சிரமது அறுமுனம் சீக்கிரம் செல்வீர்.

(வர்க்க அரக்கன் சமுதாயத்திடம் செல்கிறான். அதன் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து மீண்டும் பலம் பெறுகிறான் முன் வந்து நிற்கிறான். தொழிலாளி 1 பொதுமக்களிடம் பலம் பெறுகிறான் முன்வந்து நிற்கிறான்.

வர்க்கபேத அரக்கனுக்கும், தொழிலாளி 1க்குமிடையில் கடுமையான சண்டை நடைபெறுகிறது. இறுதியில் அனைத்து மக்களும் சூழ்ந்துநின்று வர்க்க அரக்கனைத் தாக்குகிறார்கள். வர்க்க அரக்கனுக்குத் துணை போல தூரத்தில் கலைபட்ட ஏனைய அரக்கர்களும் வந்து சேர்கின்றனர். வர்க்க அரக்கன் மேடையின் நடுப்பகுதியில் அடிப்பாகத்தில் மலைபோல் சரிந்து வீழ்கிறான். தூரத்தில் நின்ற ஏனைய அரக்கர்கள் மறைந்து விடுகிறார்கள். அவனை வீழ்த்திய மகிழ்ச்சியில் சமுதாயத்திடம் மக்கள் வருகிறார்கள். பாட்டுக்குத்தக சமுதாயத்தின் விலங்கினை உடைக்கிறார்கள்)

எடுத்துரைஞன் அடிமை விலங்கறுத்தார்—சமுதாயத்தின்
அடிமை விலங்கறுத்தார்.
சாதிமத பேதச் சமமின்மை தகர்த்தார்கள்
ஓதினார் இதுமக்கள் உலகென்று அனைவரும்

புதிய உலகமடா—இவர்கள் கையில்
புதிய உலகமடா
பொன்கொழித்திடச்செய்வார் புதுவாழ்வு காணுவார்
எம் சமுதாயம் இனி இங்கு வாழுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அனைவரும் சமுதாயமே வருக எங்களின் பின்னே
சரியாய் வழி நடத்துவோம்
எழிலாக வாழுவாய் இது உண்மை அறிகுவாய்
இனி உலகெம்கையில் எஜமானர் நாங்களே

(பழையபடி, ஒருவர் சங்கு ஊத, இன்னுமொருவர் மேளம் தாளம் வாசிக்க, மற்றொருவர் பூதூவ, இன்னொருவர் நடனமாட கோலாகலமாக சமுதாயத்தை அழைத்துக் கொண்டு மேடையை வலம் வந்து, மேடையின் நடுப்பகுதியில் அரைவட்டத்தில் நிற்கிறார்கள்)

எடுத்துரைஞர் உழைப்பவர்கள் வெற்றி பெற்றார்
உலகம் அவர் பக்கம் இன்று
ஒன்றானார் ஒன்றானார்
உலகத்தை வென்றானார்.

எடுத்துரைஞர்

இழப்பதற்கு ஏதுமற்ற
ஏழைகளின் கூட்டம் இன்று
பெற்றதடா பெற்றதடா
பேதமற்ற நல்லுலகம்

உழைப்பவன் பணிந்து வாழ்ந்த
காலமே மாறி இங்கு
உழைப்பவன் தலைமை தாங்க
ஓடுதே சமூகம் பின்னால்

எடுத்துரைஞர் அதர்மம் அழிந்தது
அநீதி ஒழிந்தது
தர்மம் தழைத்தது
சமாதானம் வென்றது
சமாதானம் வென்றது

(மங்கள வாத்திய இசை முழக்கம் சங்கு, கோயில் மணி, வீணை, இசைகள் கேட்கின்றன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969

சங்காரம்

முதல் மேடையேற்றம்

காலம்	:	1969-04-01
இடம்	:	கொழும்பு, ஹவ்லொக் நகர் லும்பினி அரங்கு
தயாரிப்பு	:	மட்டக்களப்பு நாடகசபா
நெறியாட்சி	:	சி. மௌனகுரு

நடிகர் :	சமுதாயம்	வி. வத்சலாதேவி
	வர்க்க அரக்கன்	எஸ். பற்குணம்
	சாதி அரக்கன்	எஸ். புத்திரசிகாமணி
	இனபேத அரக்கன்	க. இன்பம்
	நிறபேத அரக்கன்	சி. வடிவேல்
	தொழிலாளர் தலைவன்	சி. மௌனகுரு
	தொழிலாளி	என். யே. அமிர்தநாயகம்
	உழவன்	செ. வசந்தராசன்
	மூட்டை சுமப்பவன்	சி. இராஜேந்திரன்
	பணக்காரன்	க. சிவராசா
	எடுத்துரைஞர்	எம். மயில்வாகனம்
		க. தர்மகுலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 சங்காரம் மேடையேற்றத்தின்போது
நாடக அரங்கக் கல்லூரி வெளியிட்ட துண்டு.

நாடக, அரங்கக் கல்லூரி
ரசிகர் அவைக்காகத்
தயாரித்தளிக்கும்

சி. மௌனகுருவின்,

"சங்காரம்"

வீரசிங்கம் மண்டபம்
15-11-80 மாலை 6-45 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் பற்றி...

சங்காரம் ஆடலும் பாடலும் இணைந்த நாடகம். இதில் வரும் ஆடல், பாடல்கள் யாவும் ஈழத்துத் தமிழருக்கேயுரிய பாரம்பரிய இசை, நடன வடிவங்களாகும். சிறப்பாக வடமோடி மரபு சார்ந்தனவாகும். இன்று நகரம்வாழ் "உயர் குழாத்தினரின்" கடைக்கண்பார்வை தானுமற்று கிராமிய மட்டங்களிலே செறிந்து கிடக்கும் இக்கூத்து வடிவத்தை ஊடுபாவாகக் கொண்டே சங்காரம் நெய்யப்பட்டது.

வடமோடி நாடக வடிவம் பேராசிரியர் வித்தியானந்தனாற் செழுமைப்படுத்தப்பட்டதையடுத்து சமூக உள்ளடக்கத்தை இவ்வடிவத்திற் பாய்ச்சிய முதல் நாடகமாக அன்று இது கருதப் பட்டது. சங்காரம் மனித சமூகத்தின் வளர்ச்சிப் படிகளையும், வளர்ச்சி நிலைகளில் மனிதன் வாழ்க்கைக்காகப் போராடிய வரலாற்றையும் உள்ளடக்கமாகக் கொண்டது.

கூத்துக்குரிய அரங்கமுறை வட்டக்களரியாகும். வட்டக்களரி யிலேயே கூத்து தனது முழுமையைப் பெறும். கூத்தின் அடியாகப் பிறந்த சங்காரமும் வட்டக்களரியில் ஆடப்படவேண்டியதே. ஆனால், நடைமுறைப் பிரச்சினைகளால் இந்நாடகத்தை இன்று 'படச் சட்ட மேடையில்' ஆடவேண்டி நிர்ப்பந்திக்கப்பட் டுள்ளோம்.

1969இல் முதன் முறையாகக் கொழும்பில் லும்பினி அரங்கில் மேடையேறிய இந்நாடகம் 1980இல் அச்சில் வந்துள்ளது.

எமது நாடக மரபின் ஊற்றுக்கண் எமது பாரம்பரியக் கூத்தேயாகும். அந்த ஊற்றுக்கண் வழியாக தேசிய நாடக மரபைக் கட்டி எழுப்பும் முயற்சியில் சங்காரமும் தன் பங்கைச் செலுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 சங்கார நடிகர்களும், உதவியாளர்களும்

மேடை மீது

க. சிதம்பரநாதன்
எஸ். ஜெயகுமார்
எம். ஜீவதாஸ்
எஸ். மார்க்கண்டு
வி. அமரநாதன்
கே. தயாளன்
சி. செல்வநாயகம்
நாக. பாஸ்கரன்
எஸ். விக்டர் இம்மனுவேல்
எஸ். மரியதாஸ்
பி. எம். கனகரத்தினம்
பி. அன்ரன் செல்வராஜ்
எஸ். தேவராஜா
கலாலஷ்மி தேவராஜா
ஜி. பி. பேர்மினஸ்
அ. பிரான்சிஸ் ஜெனம்
ஏ. ஆர். விஜயன்
எஸ். உருத்திரேஸ்வரன்
கே. தனபாலசிங்கம்
எல். எம். றேமன்
சி. மௌனகுரு
ஏ. ரி. பொன்னுத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையின் பின்

மேடை நிர்வாகம் :
செல்வ. பத்மநாதன்

ஒளி :
ந. தவமணிநாயகம்
க. தில்லையம்பலம்

ஒளி நிர்வாகம் :
வீ. எம். குகராஜா

இசை :
எம். கண்ணன்

உதவி :
எஸ். தேவகுருபரன்

உடை, அலங்காரம், ஒப்பனை :
அரசர்

மண்டப நிர்வாகம் :
பொ. கோவிந்தசாமி
சிசு. நாகேந்திரா
ரி. எஸ். லோகநாதன்

பின்னணி இசைப்போர் :

கருணேஸ்வரி ஐயம்பிள்ளை
பொன்மலர் கனகசபாபதி
மரகதவல்லி பூபாலபிள்ளை
மகாலட்சுமி கணேஸ்
சொர்ணஜெயந்தி செல்வநாயகம்
சுமத்திரி சிவசுப்பிரமணியம்
ச. முத்துலிங்கம்

நடன அமைப்பு, நெறியாட்சி :
சி. மௌனகுரு

தயாரிப்பு :

நாடக, அரங்கக் கல்லூரிக்காக
குழந்தை கே. எம். சண்முகலிங்கம்
சி. மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
30-11-1980

மீண்டும் 'சங்காரம்'

நாடக, அரங்க கல்லூரி தயாரித்து 15-11-80இல் வீரசிங்கம் மண்டபத்தில் ரசிகர் அவைக்காக மேடையேறிய சி. மௌன குருவின் ''சங்காரம்'' என்னும் மட்டக்களப்பு வடமோடிக் கூத்துச்சார்ந்த நவீன நாடகம் மீண்டும் (30-11-80] இன்று மாலை 6-45க்கு வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறுகிறது.

சி. மௌனகுரு எழுதி நெறிப்படுத்தும் இந்த நாடகம் ஈழத்தின் தமிழ் நாடக வரலாற்றில் முக்கியமானதோர் திருப்பு முனையாக முன்பே அமைந்துவிட்டது, அது மீண்டும் நாடக அரங்கக் கல்லூரியால் மேடையேற்றப்படுவது அனைவரும் விரும்பத்தக்கதாகும். காத்திரமான நாடக வளர்ச்சியில் தீவிர மாக உழைத்துவரும் நாடக, அரங்கக் கல்லூரியின் பணிக்குப் பொதுமக்கள் ஆதரவு இருந்து வருவதையும் நன்கு அவதானிக் கக் கூடியதாய் இருக்கிறது.

''சங்காரம்'' நாட்கத்துக்கு இலங்கையின் பிரபல மெல்லிசைக் கலைஞர் கண்ணன் இசை அமைத்துள்ளார், ''பொறுத்தது போதும்'' உட்பட நாடக அரங்கக் கல்லூரியின் நாடகங்கள் அனைத்துக்கும் 'கண்ணனே' இசை அமைத்து வருகிறார். கண்ணன் போன்ற திறமைமிக்க முன்னணிக் கலைஞர்கள் இத்தகைய முயற்சிகளுக்கு உதவுவது அவர்களின் ஆர்வத்தையும் நாடகத்தின்பால் அவர்களுக்குள்ள பற்றுதலையும் காட்டு கிறது.

ஓர் அன்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக, அரங்கக் கல்லூரி
தயாரித்தளிக்கும்
சி. மௌனகுருவின்
"சங்காரம்"

வீரசிங்கம் மண்டபம்
30-11-80 மாலை 6-45 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் ஆடலும் பாடலும் இணைந்த நாடகம். இதில் வரும் ஆடல் பாடல்கள் யாவும் ஈழத்துத் தமிழருக்கேயுரிய பாரம்பரிய இசை நடன வடிவங்களாகும். சிறப்பாக வடமோடி மரபு சார்ந்தனவாகும். இன்று நகரம்வாழ் 'உயர்குழாத்தினரின்' கடைக்கண்பார்வைதானுமற்று கிராமிய மட்டங்களிலே செறிந்துகிடக்கும் இக்கூத்து வடிவத்தை ஊடுபாவாகக் கொண்டே சங்காரம் நெய்யப்பட்டது.

வடமோடி நாடக வடிவம் பேராசிரியர் வித்தியானந்தனாற் செழுமைப்பட்டதையடுத்து சமூக உள்ளடக்கத்தை இவ் வடிவத்திற் பாய்ச்சிய முதல் நாடகமாக அன்று இது கருதப் பட்டது. சங்காரம் மனித சமூகத்தின் வளர்ச்சிப் படிகளையும், வளர்ச்சி நிலைகளில் மனிதன் வாழ்க்கைக்காகப் போராடிய வரலாற்றையும் உள்ளடக்கமாகக் கொண்டது.

கூத்துக்குரிய அரங்கமுறை வட்டக்களரியாகும் வட்டக்களரி யிலேயே கூத்து தனது முழுமையைப்பெறும். கூத்தின் அடியாகப் பிறந்த சங்காரமும் வட்டக்களரியில் ஆடப்படவேண்டியதே. ஆனால் நடைமுறைப் பிரச்சினைகளால் இந்நாடகந்தை இன்று 'படச் சட்ட மேடையில்' ஆடவேண்டி நிர்பந்திக்கப்பட்டுள் ளோம்.

1969இல் முதன் முறையாகக் கொழும்பில் லும்பினி அரங் கில் மேடையேறிய இந்த நாடகம் 1980இல் அச்சில் வந்துள் ளது

எமது நாடக மரபின் ஊற்றுக்கண் எமது பாரம்பரியக் கூத்தேயாகும். அந்த ஊற்றுக்கண் வழியாக தேசிய நாடக மரபைக் கட்டி எழுப்பும் முயற்சியில் சங்காரமும் தன் பங்கைச் செலுத்துகின்றது.

நாடக, அரங்கக் கல்லூரி தனது ரசிகர் அவைக்காக இந் நாடகத்தை 15--11-80இல் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற் றியது. அன்று நாடக ரசிகர்களால் மண்டபம் நிறைந்திருந்தது, பலருக்குக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. மக்களின் பாரம்பரியத்துடன் பின்னிப் பிணைந்த முறையில் கலைவடிவங் களைக் காலத்துக்கேற்ற உத்திமுறைகளுடன் தயாரித்தளித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்பதற்கு அன்று மண்டபத்தில் கூடியிருந்த ரசிகர்களின் எண்ணிக்கையும் உற்சாகமும் சான்று பகர்வதாக இருந்தது.

அன்று பல ரசிகர்கள் சங்காரத்தைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாது போனதையிட்டுத் தங்கள் கவலையைத் தெரிவித்ததன் பேரிலேயே, நாம் பல சிரமங்களுக்கு மத்தியிலும் இதனை இக் குறுகிய காலத்துள் மீண்டும் மேடையேற்றுகிறோம்.

ஜனாதிபதி விருதுபெற்ற அ. தாசீசியசின் ''பொறுத்தது போதும்'' நாடகத்தைப் போன்று சி. மௌனகுருவின் 'சங்காரத்தையும்' நாம் கிராமந்தோறும் மேடையேற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். இவ்விரு நாடகங்களையும் தங்கள் பகுதிகளில் மேடையேற்றுமாறு பலர் கேட்டு வருகின்றனர். இலங்கைத் தமிழரின் தேசிய நாடக மரபினை கட்டிக்காத்து வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நாடக, அரங்கக் கல்லூரி நல்ல பல கலைஞர்களின் ஆதரவுடன் இதுபோன்ற பல நாடங்களைத் தயாரித்தளிப்பதில் தீவிரங்கொண்டுள்ளது. நாளுக்கு நாள் ரசிகரின் ஆதரவு பெருகி வருவது கண்டு பெருமைப்படுகிறது.

எமது தேசியக் கலைகளின் தனித்துவத்தைப் பாதுகாத்து வளர்த்து வருங்காலச் சந்ததியினருக்கு நாம் அளிக்கும் அருஞ் செல்வமாக, தனித்துவம் மிக்க தமிழ் நாடகம் விளங்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளோம். அயராது உழைக்கத் திடசங்கற்பம் செய்துவிட்டோம்.

நல்லதை நயக்கத் தெரிந்தோர் அவையில் மலிந்திருக்க நாம் அரங்கில் பொலிந்திருக்கத்தயங்கோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982இல் நாடக, அரங்கக்கல்லூரி விழாவின் இறுதி நாள் நாடகமாக சங்காரம் மீண்டும் மேடையேறுகிறது.

நாடக, அரங்கக் கல்லூரியின்

நாடக விழா

(வைகாசி 29, ஆனி 11, 20, 27ஆம் திகதிகளில்)

மகாகவியின்

கோடை

அ. தாசீசியஸின்

பொறுத்தது போதும்

நா. சுந்தரலிங்கத்தின்

அபசுரம்

ஞானியின்

குருக்ஷேத்திரோபதேசம்

சி. மௌனகுருவின்

சங்காரம்

யாழ். வீரசிங்கம் மண்டபம்

மாலை 6-30

1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக விழாவில் நாடக, அரங்கக் கல்லூரி வெளியிட்ட இதழில் சங்காரம் பற்றிய குறிப்புகள்

27-6-82

திசா ரெரய்ஸ் ஸ்தாபன ஆதரவில்

சி. மௌனகுருவின்

சங்காரம்

எமது ஆதிக்கலை வடிவமாக உள்ள கூத்து பூரணமான பொலிவுடன் மட்டக்களப்புப் பிரதேசத்தில்தான் இன்றுவரை பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்தப் புராதனக்கலைவடிவமான கூத்தின் வடமோடி ஆட்டங்கள், பாடல்கள் ஆகியவற்றை உருவமாக ஏற்றுக் கொண்டு, புதிய யுத்தி முறைகளையும் கையாண்டு, அப்பாரம்பரியமான உருவத்துள் புதிய, சமகால, தேவைக்குகந்த உள்ளடக்கத்தை பொதிந்து மௌனகுரு சங்காரத்தைச் செய்துள்ளார். இதனால் எமது பாரம்பரியம் புதுப்பொலிவு பெறுவதுடன் நவீன கலைகளும் செழுமைபெறும் வாய்ப்பினைப் பெறுகின்றன. ' நாமும் ஒரு நலியாக் கலையுடையோம்' என்ற மகாகவியின் கூற்று மெய்ப்பிக்கப்படுகிறது, பிறநாட்டவருக்கு 'எமது' என்று எடுத்துக்காட்டி இறுமாப்புடன் தலைநிமிர்ந்து நிற்கவும் உதவுகிறது

அழகிய ஆட்டங்கள், இனிய பாடல்கள், கவர்ச்சியான வேடங்கள் புனைந்த பாத்திரங்கள் ஆகியவற்றினூடாக, மனித வரலாற்றையும், அவ்வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும், சமூகச் சிக்கல்களையும், பேதங்களையும், அனர்தங்களையும், அங்கலாய்ப்புக்களையும், அருவருப்புகளையும் எடுத்துக் கூறும்போது நாடகத்தின் கலைத்துவம் மெருகேறி, புனிதம் பாதுகாக்கப்பட்டு, அழகு பேணப்பட்டுப் பார்வையாளர் உள்ளத்தில் சிந்தனையும், ரசானுபவமும் ஏற்படுகிறது.

பாரம்பரியக் கூத்துமுறையின் இயல்பு கெடாமல் உலகின் தீமைகள் யாவும் சங்காரம் செய்யப்பட்டு புதியதோர் சமுதாய அமைப்பு நிலைநிறுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கருத்துக்களுக்காகக் கூத்தின் மரபுகள் பலியாக்கப் படாமல், மேலும் பாதுகாத்துப் பேணப்பட்டுள்ளமை சங்காரத்தின் சிறப்பம்சமாகும்

மேடை மீது

க. சிதம்பரநாதன்
சி. மௌனகுரு
எல். எம். றேமன்
எஸ். தேவராஜா
ஏ. ஆர். விஜயன்
ஜி. பி. பேர்மினஸ்
எஸ். மரியதாஸ்
பி. எம். கனகரத்தினம்
எஸ். உருத்திரேஸ்வரன்
கே. தனபாலசிங்கம்
சி. செல்வநாயகம்
ஏ. ரி. பொன்னுத்துரை
கலாலக்ஷ்மி தேவராஜா
எஸ். ஜெயகுமார்
எம். ஜீவதாஸ்
எஸ். மார்க்கண்டு
வி. அமரநாதன்
கே. தயாளன்
சி. செல்வநாயகம்
நாக. பாஸ்கரன்

மேடையின் பின்

மேடை நிர்வாகம்:- செல்வ. பத்மநாதன்
ஒளி:- தவமணிநாயகம், தில்லையம்பலம்
ஒளி நிர்வாகம்:- வீ. எம். குகராஜா
இசை:- எம். கண்ணன்
உதவி:- எஸ். தேவகுருபரன்
உடை அலங்காரம், ஒப்பனை:- அரசர்
மண்டப நிர்வாகம்:- பொ. கோவிந்தசாமி
சிசு. நாகேந்திரா
ரி. எஸ். லோகநாதன்
பின்னணி இசைப்போர்:- கருணேஸ்வரி ஐயம்பிள்ளை
பொன்மலர் கனகசபாபதி
மகாலட்சுமி கணேஸ்
பத்மினி சிதம்பரநாதன்
ச. முத்துலிங்கம்
நடன அமைப்பு, நெறியாட்சி:- சி. மௌனகுரு
தயாரிப்பு:- நாடக அரங்கக் கல்லூரிக்காக
ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம்

தாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புக் கூத்து

என். சண்முகதாசன்

மட்டக்களப்பிலிருந்து கொண்டுவரப்பட்ட வடமோடிக் கூத்தில் அவர்கள் எடுத்துள்ள முயற்சி புதுமையானது. இவ் வகையான ஒரு முயற்சியை நான் இதுவரை காணவில்லை. இக்கூத்தில் சரித்திரவியல் பொருள் முதல்வாதத்தின் கருத்துக் களைத் திறமையாக எடுத்துக் கையாண்டுள்ளார்கள். அவர்கள் தாளத்திற்கேற்ப ஆடிய ஆட்டத்தைச் சபையோர் நன்கு ரஸித் துக் கரகோஷம் செய்தனர். சமுதாயம் சுதந்திரமாகவே தோன் றியது. பின்பு அடிமைப்படுத்தப்பட்டது. அதனைத் தொழிலா ளிகளும் விவசாயிகளும் சேர்ந்து விடுவிடுத்தனர் என்பதுதான் கதை. சில திருத்தங்கள் தேவைப்படினும் அவை பிரமாதமாய் இருந்தன என்று சொல்லலாம். இதனைப் பார்க்கத் தவறியவர் கள் ஒரு நல்ல கலை விருந்தைத் தவறவிட்டவர்களாவார்கள். இது மேலும் திருத்தப்பட்டு மேடையெற்றப்டுமென நம்பு கிறேன்.

தொழிலாளி 1969

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் பற்றி பேராசிரியர் கைலாசபதி

1968ஆம் வருடத்திலும் அதனையடுத்த காலப்பகுதியிலும் இலங்கையில் தமிழ்நாடகத் துறையில் குறிப்பாக அரங்கியல் துறையில் பின்பு விளைவுச் செறிவு வாய்ந்த, போற்றத்தக்க மாற்றங்களைச் செய்தோர் ஒரு சிலராயினும் அவர்கள் காலத்தின் தேவைகளை உணர்ந்து பிரக்ஞையோடு இயங்கினர் என்பது நினைந்து கொள்ளவேண்டிய செய்தியாகும். தேசிய, சர்வதேசிய நிகழ்வுகளும் அவர்களுக்குத் தூண்டுதல் கொடுப்பவையாயமைந்தன.

இலங்கையிற் பொதுவாக சமூக முரண்பாடுகள் கூர்மையடையத் தொடங்கியிருந்தன. வடபதியில் சாதியடக்குமுறைக்கு எதிரான போராட்டம் உக்கிரமடைந்திருந்தது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வெற்றிகரமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது. அவ்வியக்கத்தின் முதலாவது மகாநாட்டை ஒட்டி கொழும்பில் நிகழ்ந்த கலை நிகழ்ச்சிகளில், ஒன்றாகவே மௌனகுருவின் சங்காரம் முதன் முதலில் ஹவ்லொக்நகர் லும்பினி அரங்கில் மேடையேறியது. சாதியொழிப்புப் போராட்டத்தின் உந்துதலினால் உருவாகிய இந்நாடகம் மனுக்குலத்தின் கதையையே—வாழ்க்கைப் போராட்டத்தின் வரலாற்றையே உருவகமாகச் சித்தரிக்கிறது.

நாடகம் நான்கு முன்னுரையில் 1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனகுருவின் சங்காரம்

கலாநிதி என். சண்முகரத்தினம

இசைப்பா செய்யுள் வடிவில் அமைந்திருக்கும் மௌனகுருவின் சங்காரம் ஒரு திடீர்த் தோன்றலல்ல. நவீன தமிழ் நாடக மரபினுடைய அபிவிருத்திப் போக்கின் ஓர் அழகான மரபுவழிக் கூத்தின் மறுமலர்ச்சிப் பரிமாணத்தினுடைய ஒரு தன்மைசார் மாற்றத்தைக் குறிக்கின்ற இந்நாடகத்தினுடைய பூர்வபாதங்களின் தர்க்க ரீதியான வளர்ச்சியினைச் சற்றுப் பார்த்தல் அவசியம்.

மரபுவழிக் கூத்தினுடைய மறுமலர்ச்சியின் ஒரு முக்கிய காலம் 1960 களின் முற்பகுதியாகும். இந்தக் காலத்திலேதான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நாட்டுக் கூத்தில் கைதேர்ந்த வந்தாறுமூலை க. செல்லையா அண்ணாவியார் போன்ற கலைஞர்களுடன் ஒன்றிணைந்து கர்ணன் போர் (1962), நொண்டி நாடகம் (1963), இராவணேசன் (1964), வாலிவதை (1968) ஆகிய கூத்துக்களைத் தயாரித்தளித்தார். இவ்வாறு பேராசிரியர் நாட்டுக்கூத்தைப் புனருத்தாரணம் செய்யுமுன் மரபுவழிக்கூத்து முற்றாக அழிந்திருந்தது என்று கொள்ளுதல் தவறாகும். காலனித்துவ இடைக்காலத்தில் இன்றும் எமக்குப் பெயர் தெரியாத பல கலைஞர்கள் மரபுவழிக் கூத்துக்களை ஒதுக்கித் தள்ளும் சமூகப் போக்குகளை எதிர்த்து நீச்சல் போட்டு இந்த மக்கள் கலையை புதிய நாகரீகம் பரவாத மூலை முடுக்குகளில் கிராமிய மக்களின் ஆதரவுடன் உயிருடன் வைத்திருந்தார்கள்.

பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோரின் முயற்சிகள் வெற்றிபெற இரண்டு முக்கிய காரணிகள் உதவின. ஒன்று. நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள செல்லையா அண்ணாவியார் போன்றவர்களின் சேவையாகும், மற்றது 1956ஆம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட சுயமொழிக் கல்வித் திட்டமும் கிராமப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சியும், 1960களில் பல கிராமப்புற மாணவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றமையுமாகும். நாட்டுக் கூத்தில் ஒரு கேந்திர ஸ்தானமான மட்டக்களப்பின் கிராமப்புறத்தைச் சேர்ந்த மௌனகுரு போன்ற கூத்தினை இயல்பாயறிந்த பலர், பட்டதாரி மாணவர்களானார்கள். இந்த இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினரையும் இணைத்து மரபு வழிக்கூத்தைப் பேராசிரியர் வித்தியானந்தன் புனரமைத்தார் என்றால் மிகையாகாது.

கர்ணன் போரிலும், நொண்டி நாடகத்திலும் இராவணேச னிலும் மௌனகுரு பிரதான நடிகராயிருந்தார். மரபுவழிக் கூத் துக்களின் மறுமலர்ச்சிகான உந்து சக்திகளின் ஒரு அங்கமாக இருந்த மௌனகுரு பல்கலைக்கழக சோசலிச மாணவர் சங்கத் தின் அங்கத்தவராயிருந்தார். கர்ணன் போரும் நொண்டி நாட கமும் ஏற்கனவே ஏட்டிலிருந்த பழைய நாடகங்கள். இவற் றைத் தொடர்ந்து மூன்றாவது நாடகமாக வந்த இராவணே சன் வடமோடிக் கூத்தாகப் புதிதாக எழுதித் தயாரிக்கப் பட்டது. இ. சிவானந்தன் குறிபிட்டுள்ளது போல "இதன் மூலம் நாட்டுகூத்தினை அறிமுக நிலையிலிருந்து பரிசோதனை முறையிலான ஆக்கநிலைக்கு உயர்த்தினர்". மிகவும் குறுகிய காலத்தில் ஏற்பட்ட இந்த ஆக்கப்பூர்வமான அபிவிருத்திப் போக்கினை மௌனகுரு தன் முயற்சியால் சங்காரம் மூலம் முற் றிலும் புதியதொரு கட்டத்தை நோக்கிய வளர்ச்சிக்கு வித்திட் டார். சங்காரத்தின் கலைத்துவ பிற்புலத்தை—இங்கும் சமூக அரசியல் ஆகர்சத்தை—யாழ்ப்பாணத்து தீண்டாமை எதிர்ப்பு வெகுஜனப் போராட்டத்திலும் காண்கிறோம். இவை இரண்டும் மௌனகுரு என்ற அரசியல் கலை—இலக்கிய கர்த்தாவால் சேதன ரீதியில் ஒருங்கிணைக்கப்படுகின்றன சங்காரத்தில்.

ஓர் இலக்கியப் படைப்பு

சங்காரத்தை ஓர் இலக்கியப் படைப்பாய்ப் படிக்கும்போது மேடையில் கண்ட அதன் வீரியம் கொண்ட பிரதிபலிப்பு மனக்கண் முன் தோன்றுவதைத் தடுக்க முடியவில்லை. சங்காரம் மரபு வழக்கத்தில் அமைந்திருந்த போதும் அதன் புதிய உள்ளடக்கத்தின் அடிப்படையில் பார்க்கும் போது கூத்துருவம் கனதிமிக்க வடிவமாகிறது. சமகால நிலைமைகளின் தாக்கத்தால் உருவான சங்காரத்தின் கரு, வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் அமைந்த வர்க்கப் போராட்டம் பற்றியதாகும்.

மானிடம் வளர்ந்த வாற்றை
மக்களுக்கு உரைக்க வந்தோம்
மானிடன் வரலாறிங்கே
மாபெரும் வரலாறாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு நவீன உள்ளடக்கம் மரபுவழிக் கூத்திற்கே புதிதான ஒன்று. ஒரு சில பாத்திரங்களுக்கூடாக உலகினை, வர்க்கங்களை, சமூகங்களை, சரித்திர மாற்றங்களை கலைத்துவமாகப் பிரதிபலிக்க முயலும் இந்தக் கரு பழமையான உருவத்திற்குத் தவிர்க்க முடியாத புதுமைகளைச் சேர்த்துள்ளது. யாழ்ப்பாணத்து வெகுஜன இயக்கத்தின் ஆகர்ஷம் சங்காரம் தோன்ற முக்கிய காரணமாயிருந்தபோதும் அந்த நாடகத்தில் ஓர் உலகளாவிய பொதுத்தன்மை காணப்படுகின்றது. முக்கிய பகுதிகள் பொதுப்படையாகப் பிரதிபலிக்கப்படும் அதே வேளையில், மனித நாகரிகத்தின் ஒரு வரலாற்று மாதிரியாகவும் சங்காரம் அமைந்துள்ளது. இந்தப் பொதுமைப்படுத்தல் இந்நாடகப் பிரதிக்குச் சர்வ வியாபகத் தன்மை கொண்ட இலக்கிய அந்தஸ்தைக் கொடுக்கிறது. அதே வேளை, இந்தப் பொதுமைப்படுத்தலையே இந்த நாடகத்தின் இலக்கியக் கலைத்துவக் குறைபாடெனவும் கருத இடமுண்டு. எனது அபிப்பிராயத்தில் அத்தகைய பார்வை நாடகத்தின் ஆரம்பத்திலேயே தெளிவாக்கப்பட்டிருக்கும் நோக்கத்தைப் புறக்கணிக்கும் ஒன்றாகும். சங்காரத்தின் இந்தச் சர்வ வியாபக இலக்கியத் தன்மையைக் கடூழியமும் பகிர்ந்து கொள்கிறது. இந்நாடகங்கள் தந்துள்ள பொதுமைப்படுத்தப்பட்ட உள்ளடக்கங்களிடமிருந்து துல்லியமாக, தேசிய, பிரதேச தனித்தன்மைகளைக் கொண்ட குறிப்பான யதார்த்தங்களின் வெளிப்பாடுகளை மரபுவழிக் கூத்து வடிவில் அம்பலத்தடிகளின் கந்தன் கருணை, முருகையனின் கோபுரவாசல் போன்ற நாடகங்களை தந்தன.

எடுத்துரைஞர்கள் பங்கு

சங்காரத்தைப் படிக்கும்போது அரங்கியல் சம்பந்தப்பட்ட சில முக்கியமான விடயங்கள் தெரியவருகின்றன. இந்நாடகத்தில் வரும் கட்டியகாரனின் பங்கினை இந்தக் குழு செய்கிறது. நாடகத்தை எடுத்துரைஞர் தலைவன் இப்படித்தான் ஆரம்பித்து வைக்கிறான்.

> "அமைதியாயிருங்கள் அனைவருக்கும் வணக்கம். நாங்கள் உங்களுக்கு ஒரு நாடகத்தை நடித்துக் காட்ட வந்திருக்கிறோம். இம்மக்கள் வரலாறுதான் நாடகத்தின் கருப்பொருள். குறியீடுகளின் துணை கொண்டு மனித வளர்ச்சியினையும் முரண்பாடுகளையும் சித்தரிக்க எண்ணியுள்ளோம். ஆயத்தமாகுங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மரபுவழிக் கூத்தினது ஆரம்பம் பார்வையாளர்கட்கு, அவர்கள் நாடகம் பார்க்கவே வந்திருக்கிறார்கள் என்பதை நினைவூட்டுகிறது. இது பார்வையாளனுக்கும் அரங்கினருக்கு மிடையே உணர்வுபூர்வமான ஓர் அழகியல் தூரத்தை வைத்துக் கொள்ள உதவுகிறது. மேலும்' பாத்திரங்களோடு உணர்ச்சிவசப் பட்டு இனங்கண்டு கொள்வதை இது குறைத்து மேடையில் சித்தரிக்கப்படும் சம்பவங்கள், கிளப்பும் கேள்விகள், நியாயங்கள் சார்ந்த உணர்வுகளுக்குக் கூடுதலாக இடத்தைக் கொடுக்க வழிவகுக்கிறது, பிரக்டின் காவிய அரங்குக் கோட்பாடு கூறும் அந்நியப்படுத்தல் இத்தகைய மேடை பார்வையாளன் உறவினைக் கொண்டதே.

காவிய அரங்குக் கோட்பாடு பற்றிக் குறிப்பிடும்போது சங்காரத்தின் வேறோர் அம்சமும் ஒப்பீட்டு முக்கியத்துவம் பெறுகின்றது. சம்பவங்களின் ஒழுங்காக்கலாலும், வர்க்கப்பார் வையின் அடி படையிலமைந்த உள்ளடக்க நெறியாக்கலாலும் நவீனத்துவமடைந்துள்ள கதையின் பாத்திரங்களோ மக்களுக்குப் பழக்கமானவை. சாதி, இன, நிற, வர்க்க பேதங்களின் பிரதி நிதிகளை அரக்கர்களாகக் காட்டும் விதம் இந்தப் புதிய கதைக்குக் கூட ஒருவித பழமையைக் கொடுத்து உதவுகிறது. இதுவும் அழகியல் தூரத்தைக் காப்பாற்ற உதவுகிறது இத்தகைய பண்புகள் முருகையனின் கடுழியத்திலும் காணப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகளை நாடகாசிரியர்கள் கையாண்டிருக்கும் விதம்—குறிப்பாகப் பிரதி ஆக்கத்தைப் பொறுத்தவரையில்— இவர்களின் சுய ஆற்றல்களை நன்றாகப் புலப்படுத்துகின்றன. இவர்களிருவருமே கைவந்த கவிஞர்கள். அவர்களின் கவித்துவ நடைமுறைக்கு அரங்கம் ஓர் ஊடகமாக அமைகிறது.

சங்காரத்தின் கதை உலகின் தோற்றத்தோடு ஆரம்பித்துப் பாட்டாளி வர்கப்புரட்சியோடு முடிவடைகிறது. ஒரு மாபெரும் வரலாற்றுக் கால வெளியிடையே சஞ்சரித்து இரண்டு மனித் தியாலங்கள் நடைபெறும். கூத்துக்கூடான இக்கலைப் பிரயாணம்

ஒன்றானார் ஒன்றானார்
உலகத்தை வென்றானார்
இழப்பதற்கு ஏதுமற்ற
ஏழைகளின் கூட்டமிங்கு
பெற்றதடா பெற்றதடா
பேதமற்ற நல்லுலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வெற்றிப் பிரவாகத்துடன் முடிவடைகிறது. பேராசிரியர் வித்தியானந்தன் கர்ணன்போர், நொண்டி நாடகம் இராவணேசன், வாலி வதை என்று நகர்ந்த வேளையில் இந்த நகர்ச்சியின் ஆரம்ப உள்ளணியின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக இருந்த மௌனகுரு இராவணேசனுக்குப் பின் முற்றிலும் புதிய தன்மையிலான மாற்றமுள்ள ஒரு கட்டத்திற்கு மரபுவழிக் கூத்தைச் சங்காரம் மூலம் எடுத்துச் சென்றார். அவரின் சுய ஆற்றலை வெளிப்படுத்த உதவிய நிலைமைகளை ஏற்கனவே விளக்கி விட்டேன். சங்காரம் போன்ற புதிய முயற்சிகளுக்கு முன் மரபு வழிக் கூத்தின் நிலைமையை பேராசிரியர் கைலாசபதி காத்தான் கூத்தும் பாணியிலமைந்த கந்தன் கருணை நூலுக்கு எழுதியுள்ள முகவுரையில் வரும் ஒரு கருத்தின் மூலம் விளக்கிவிடலாம்.

> "மரபு வழி வரும் இக்கூத்து முறையைப் பேணுவதோ, அப்படியே இயங்க வைப்பதோ நாடக வளர்ச்சிக்கு உதவும் என்று நான் கூறவில்லை. ஆனால் நாடகம் என்ற வரம்புக்கு அப்பால் அது, இதுகாலவரை நிறுத்தப்பட்டமையால் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் காலத்திற்கேற்ற மாற்றம் பெறும் வாய்ப்பினை இழந்தது என்பதே நாம் இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டிய தொன்றாகும்."

தினகரன் —1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் - நாடக விமர்சனம்

எஸ். பத்மநாதன் (பி.ஏ.ஆனர்ஸ்)

சென்ற வாரம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ் நாடக அரங்கக் ககல்லூரியினர் சி. மௌனகுருவின் சங்காரத்தை ரசிகர் அவைக்காகத் தயாரித்து மேடையிட்டனர். வழக்கமான நாடகங்களினின்று முற்றிலும் மாறுபட்டு ஆடலும், பாடலும் நிறைந்து புதுமையான முறையில் அமைந்திருந்த இந்நாடகம் பூரணமான ஒரு கலா அனுபவத்தினையும் நிறைந்த காத்திரமான ஒரு கருத்துணர்வையும் ஏற்படுத்தியது.

1960 களிலே பேராசிரியர் வித்தியானந்தன் தமிழரின் தேசியச் சொத்தான கூத்துகளைப் பேணிப் பாதுகாக்க முன்னின்று உழைத்தார். நமது மரபின் மூலக்கூறுகளை நமக்கு இனம் காட்டினார். அதன் விளைவாகவே இராவணேசன், நொண்டி நாடகம், கர்ணன் போர் போன்ற நாடகங்கள் உருவாயின. அந்நாடகங்கள் பழைய கூத்து முறைகளை அப்படியே பேணின.

பேராசிரியர் வித்தியானந்தனுக்குப் பக்கபலமாக நின்று இந்நாடகங்கள் உருவாக அவரிடம் பயிற்சியும் பெற்றவரான அவர் மாணாக்கர் மௌனகுரு இக்கூத்தினை நவீன நாடகத்திற்கு பயன்படுத்தியுள்ளார்.

நாளைய உலகம் ஒன்றினுக்காக நாடக வடிவமொன்றினை தெரிந்து சோதனை முறையிலும் வெற்றி கண்டுள்ளார் என்றே நாம் கூற வேண்டியுள்ளது.

மீண்டும் மீண்டும் புராணக் கதைகளை கூறுகின்ற பழைய மரபுகளை மாற்றி இக்காலச் சமுதாயத்துக்கு ஏற்பப் புதுமைக் கொள்கைகளை வலியுறுத்துகின்ற மானுடத்தின் குரலான கருவொன்றினைச் சங்காரம் கூறுகின்றது.

சங்காரத்தின் மிகச் சுருக்கமான உள்ளடக்கம் மனித சமூகத்தின் வளர்ச்சிப்படிகளும் வளர்ச்சி நிலைகளிலே மனிதன் வாழ்க்கைக்காகப் போராடிய முறைகளும் ஆகும்.

மேடையில் கதை கூறுபவன் தோன்றுகிறான். உரத்த தொனியில் மனித வரலாற்றைக் கூறுகிறான். நாமும் நாடகம் பார்க்க தயாராகின்றோம். நம் மரபுக்குரிய கட்டியகாரனை இவன் நினைவுபடுத்துகின்றான். கதை கூறுபவனாகத் தோன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. சிதம்பரநாதன் எடுத்த எடுப்பிலேயே எல்லோரையும் கவர்ந்து விடுகின்றார். நாடகம் ஆரம்பிக்கின்றது மந்திர உச்சாடனம் போன்ற இசையின் பின்னணியில் சூரியன் பிறக்கின்றது. சுழல் கின்றது, சிதறி வெடிக்கிறது, கிரகங்கள் தோன்றுகின்றன. பூமி கிரகம் உருவாகிறது. உயிரினங்கள் தோன்றுகின்றன. குரங்கு இனம் தோன்றுகின்றது. மனிதன் உருவாகின்றான். ஆதிமனிதக் கூட்டம் பேதங்களின்றி ஒற்றுமையாக வாழ்கின்றது. அந்நாளிலே இந்த மனிதர்கள் அனைவரும் சமமுடன் வாழ்ந்தனரே என்ற பாடலும் அதற்கு ஆக இலாவகமான ஆடல் அசைவுகளும் மனதை வெகுவாக வருடிச் செல்கின்றன.

மேடையில் இத்தனை அம்சங்களையும் நடிகர்களைமாத்திரம் வைத்துக்கொண்டு ஆடல், பாடல், ஒலி, இசை மூலம் கொணர்ந்த உத்திமுறையினை பாராட்டாமலிருக்க முடியாது. நெறியாளர் களின் கற்பனைத் திறனை இங்கு தரிசிக்க முடிந்தது.

ஆதிமனித சமூகம் உழைத்துக் கஷ்டப்பட்டு வாழ்ந்த காலம், வேட்டையாடிய காலம் வேளாண்மை விளைவித்த காலங்கள் யாவும் நுண்ணியதாகச் சித்தரிக்கப்படுகின்றன வேட்டைக் காட்சி நம்மைப் புராதன காலத்திற்கு இழுத்துச் செல்கின்றது. நடிகர்களின் நடிப்பும் அவர்களின் அசைவுகளும் பழங்கால மனிதர்களை நம்முள் கொணர்கின்றன. சிறப்பாக வேட்டைக் காரனாயும் மிருகமாகவும் வந்த ஜெயக்குமார், அமரநாதன் ஆகியோரின் பாவனைகளும் அசைவுகளும் சிறப்பானவை.

விவசாயச் சமூகச் சித்தரிப்புப் பாராட்டப்பட வேண்டியதே. வரப்பு கட்டுபவனும், விதைப்பவனும், உழவனும், மாடுகளு மாக நடிகர்கள் மாறி மாறி அசைவது நம் கற்பனையைத் தட்டு கின்றது. அவர்களுள் ஒருவனாக நின்ற ஒருவன் பரிந்து சென்று மாறுகிறான் என்பதை முகமூடி மூலம் உணர்த்துவது சிறப்பான யுத்தி. அடங்கிக் கிடந்த பேத அரக்கர்களைப் பேய் எழுப்புவது போல எழுப்பி சமூகத்தின் மீது ஏவுவதும் நல்ல கற்பனை. பணக் காரனாகத் தோன்றிய பேர்மினஸ்சின் கம்பீரமான நடை கண் முன் தோன்றுகின்றது.

அரக்கர்களின் வருகையுடன் நாடகம் இன்னொரு வேகத்தை பெறுகின்றது. அவர்களின் தோற்றமும், அசைவுகளும், ஆட்டங் களும் நகை கலந்த வியப்பினை ரசிகர்களுக்கு ஏற்படுத்துகின்றது. ரசிகர்களை இவ்வரக்கர்கள் வெகுவாகக் கவர்ந்து விட்டனர். அரக்கர்களுள் வர்க்க அரக்கனான அ. பிரான்ஸிஸ் ஜெனம் தனியாகக் குறிப்பிடத்தக்கவர். அட்டகாசமான அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையும், முனைப்பான அவருடைய பார்வையும், மிடுக்கான அவரது நடிப்பும் அப்பாத்திரத்திற்கேற்ப ஒரு தனிக்கவர்ச்சியை ஏற்படுத்தின. சாதி அரக்கனாக வந்த விஜயனின் தோற்றமும் ஆடலும் கவர்ச்சியாக இருந்தன. இன அரக்கனாக வந்த உருத்திரேஸ்வரனின் தோற்றமும் பொலிவும் மிடுக்கும்குறிப் பிடத்தக்கன. நிற அரக்கர்களான தனபாலசிங்கமும், றேமனும் சோடைபோகாது நடந்தனர்.

சமுதாயம்

சமுதாயம் ஒரு குறியீடாக இதில் காட்டப்பட்டிருக்கிறது. சமுதாயத்திற்கு ஒரு பெண் நடித்தது பொருத்தமானதாக இருந் தது. 22 பேர் பங்கு கொண்ட இந்நாடகத்தின் ஒரேயொரு பெண் பாத்திரம் இவரே. துணிவுடன் மேடையேறியமை மாத்திரமன்றி சிறப்பாக நடித்தமைக்காகவும் இவர் பாராட்டப்பட வேண்டிய வரே. அரக்கர்களின் கொடுமையும் அகோரத்தைத் தன் நடிப்பின் மூலம் வெளிக்கொணர்ந்த கலா தேவராஜா தமிழ் நாடக மேடைக்குக் கிடைத்த இன்னொரு நடிகையாகும்.

புதிய யுகத்தின் பணக்காரராக வந்த ஏ. ரி. பொன்னுத்துரை தனது அனுபவமான நடிப்பின்மூலம் மிடுக்கும் திமிரும் நிறைந்த ஒரு பாத்திரத்தை மேடையிற் கொணர்ந்தார். தொழிலாளர் களும் அவருமாகச் சேர்ந்து போட்டிக்கு கயிறு இழுக்கும் காட்சி யும் கற்பனை நயம் நிறைந்த ஒரு காட்சியாகும். கயிறு இழுத்தல் ஒரு குறியீடு, பலப்பரீட்சையில் தோற்றதும் ஆத்திரப்பட்டு "எட எந்தன் உப்பையே" என்று அவர் கேட்ட வரிகள் இன்னும் காதில் ஒலிக்கின்றன.

அவர் வருமுன்னர் பன்னீர் தெளிப்பவனாகவும் பாவாடை விரிப்பவனாகவும் வந்த கனகரத்தினமும் தயாளனும் மிகக் குறைந்த நேரம் தோன்றினாலும் மனதில் நிறைந்த இடத்தைப் பெற்று வருகின்றனர். பன்னீர் தெளித்த கனகரெத்தினம் தனியாக மேடை முழுவதையும் நிறைத்தார்.

அரக்கர்களிடமிருந்து சமூகத்தை விடுவிக்கும் தொழிலாளர் களாகத் தோன்றியவர்களும் தம் பாகத்தைச் சிறப்பாகச் செய்தனர். சி. மௌனகுரு, அ. ஜெயக்குமார் ஆகியோரின் நடிப்பு குறிப்பிடத்தக்கது. இவர்களுள் மௌனகுரு தனியாகக் குறிப்பிடத் தக்கவர். நளினமும் இலாவகமும் பொருந்திய அவருடைய ஆடலும், கம்பீரமான அவருடைய நடிப்பும் பார்வையும் தலைவனுக்கேயுரிய மிடுக்கும் சபையோரை வெகுவாகக் கவர்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க அரக்கர்கட்கும், தொழிலாளர்கட்கும் நடக்கும் யுத்தம் நாடகத்தின் உச்சக்கட்டமாகும். நமது புராணங்களில் நாம் படித்துக்கேட்ட தேவ அசுர யுத்தத்தினை அது கண்முன் கொணர்ந்தது. மேடை முழுவதையும் நிறைத்துக் கொண்டு பத்துப்பேர் ஆடும் ஆட்டம் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. இத்தகைய ஆட்டமுறைகள் எம்மிடையே உள்ளனவா என்ற வியப்பும், மகிழ்வும் எம்மைத் தலைநிமிரப் பண்ணுகின்றன.

நவீன நாடகத்துக்குக் கூத்தின் மூலக்கூறுகள் பாவிக்கப்பட்டிருப்பதும் சிறப்பான ஒரு செயலாகும். நாட்டுக்கூத்துப் பற்றித் தேர்ந்த அறிவு, மௌனகுருவுக்குண்டு. தமது கலாநிதிப்பட்ட ஆராய்ச்சிக்காகக் கிராமங்கள்தோறும் சென்று, அக்கூத்து முறைகளை நன்கு அறிந்துள்ள இவர் நவீன நாடகத் தேவைக்கு ஏற்ப இடமறிந்து அவற்றைப் புகுத்தியுமுள்ளார்.

கட்டியகாரன் கதை கூறுபவனாக ஆக்கியவிடத்தும், பாத்திரங்களுக்கு ஏற்ப ஆட்டமுறைகளை அமைந்த இடத்தும், மரபு வழிக்கூத்தில் சில மரபுகளுக்குள் மாத்திரம் கட்டுப்பட்டுக் கிடந்த தாளக்கட்டுக்களை இடம் மாறிப் பாவித்த இடத்தும், பிசாசுகளை எழுப்புதல்போல உருக்கடித்து எழுப்புதல், கயிறு இழுத்தல் போன்ற இடங்களிலும் இது நன்கு புலனாகின்றது.

மௌனகுருவின் கற்பனைச் சிறப்பினை நாடகம் முழுவதும் காண முடிகிறது. இந்நாடகத்தை எழுதியதுடன் நாடகங்களைப் பழக்கி, நடன அமைப்புக்களை வகுத்து நெறியாட்சி செய்தவரும் அவரே. நெறியாளுகையின் சிறப்பும், நடன அமைப்பின் சிறப்பும் காட்சிக்குக் காட்சி புலப்படுகின்றது.

இசைவான ஒளியமைப்பு. இந்நாடகத்தின் இன்னோர் சிறப்பம்சமாகும். இதனைப் பொறுப்பேற்ற வி. எம். குகராஜாவும் பாராட்டுக்குரியவர்.

இந்நாடகத்தின் விதந்து சொல்லக்கூடிய ஓர் அம்சம் இதன் உடை ஒப்பனையாகும். கூத்தையும், நவீன நாடகத்தையும் இணைக்கும் வகையில் கற்பனைச் சிறப்புடன் உடைகள் ஒப்பனைகள் ஆக்கப்பட்டிருந்தன. இவற்றை ஆக்கிய அரசர் பாராட்டுக்குரியவர்.

நாடக அரங்கக் கல்லூரியினர் இதனைத் தயாரித்திருந்தனர். மிகச் சுத்தமான தயாரிப்பு இது. சமீப காலமாக நாடக உலகில் காத்திரமான பணியினை இக்கல்லூரியினர் செய்து வருவது யாவரும் அறிந்ததே. கடந்த காலத்தில் கோடை, பொறுத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், உறவுகள் போன்ற சிறப்பான நாடகங்களைத் தந்தவர்கள் இவர்கள். குறிப்பிட்டபடி 6.45இக்கு நாடகம் தொடங்கியதே இவர்களின் கட்டுப்பாட்டுக்கு ஓர் உதாரணமாகும். கல்லூரியின் இயக்குனரான குழந்தை சண்முகலிங்கத்திற்கு ரசிகர் உலகம் கடமைப்பட்டுள்ளது.

சினிமாவுடனான போராட்டத்திற்கு இந்நாடகம் சவாலாக அமைகிறது. சினிமா மோகத்தினை முற்றாக முறியடிக்குமளவுக்கு ரசிகர்கள் மண்டபம் நிரம்பி வழிந்தார்கள். 'ஹவுஸ் புல்' காட்சியாக இந்நாடகம் அமைந்தமை நாடக ஆர்வலருக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

மிகச் சிறப்பாக அமைந்திருந்த இந்நாடகத்தின் பின்னணி இடைக்கிடை தெளிவின்மையாக இருந்ததும், சுருதி மாறுபாடுகள் இடைக்கிடை நேர்ந்தமையும், வெள்ளைச் சேலையில் கறுப்புப் புள்ளி போலப் பளிச்செனத் தெரித்தன. இச்சிறிய குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்.

பரிசோதனை முறையில் அமைந்த இந்நாடகம், நம்நாட்டிலும் குறிப்பாக சிங்களப் பகுதிகளிலும் பல தடவை மேடையேற்றப்பட வேண்டும்.

ஈழநாடு—வாரமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கும் அவையும்

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை

மேடைக்கு வருகிறார் உபவேந்தர்

திரை மூடுகிறது; விறுவிறுப்பாய் நடந்த நாடகமும் முடிகிறது; திரும்பவும் திரை திறக்கப்படுகிறது நடிகர்கள் எல்லோரும் ரசிகர்கள்முன் காட்சி தருகின்றனர். ரசிகப் பெருமக்கள் பலர் புன்முறுவல் பூத்து அரங்கில் ஏறுகின்றனர். நடிகர்களின் கைகுலுக்கு நயமான வார்த்தை சொல்லி கூட்டு முயற்சியை மெச்சி மகிழ்ந்தார் உபவேந்தர். கலைத்துறைத் தலைவர் கைலாசபதி, சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சண்முகதாஸ் மற்றும் நுஃமான், ஜீவா முன்னோடி நடிகர்கள் பேரம்பலம், கே. செல்வரட்ணம் உட்பட ஏராளமான ரசிகர்கள் நடிகர்களுடன் கலந்துரையாடி உந்தி நின்றனர். உள்ளத்தில் அப்பப்போ எழுந்த கருத்தை அப்படியே விமர்சித்தார்கள். நல்லதோ, கெட்டதோ, குறையோ, நிறையோ நல்ல நோக்குடன் நடிகர்க்கு கூறும் பண்பு இன்று நன்கு வளர்கிறது. வரவேற்கப்பட வேண்டிய பண்பு இது. ரசிகரவை அங்கத்தினர்களைவிட, தாமாகவே 1500ரூபா வாசலில் செலுத்தி ரிக்கட் பெற்று நாடகம் பார்க்க வந்த ஒரு நிலை எமது நாடக உலகில் நாம் கூறும் நல்ல வெற்றி போல் தெரிகிறது. இதே நாடகம் 10 நாட்களின் பின் மேடையேறியபோது '200ரூபா வாசலில் செலுத்தி நுழைவுச் சீட்டுப் பெற்றார்கள் ரசிகர்கள். புலுடா நாடகமென்றால் இந்நிலையை உருவாக்கமுடியுமா? ரசிகர்களை ஏமாற்றாமல் வல்லுநர்களின் சங்கமிப்பாக, கூடிய பயிற்சியின் முதிர்ச்சியாக, கலைப்படைப்பு அமையுமானால் இந்நிலை தொடர்ந்து வளரும், மேலே குறிப்பிட்ட நாடகம் யாழ். அரங்கக் கல்லூரி தயாரித்தளித்த மௌனகுருவின் 'சங்காரம்' என்ற நாடகம்தான்.

"நாடக நாகரிகத்தைக் கண்டேன்"

—மாவை. ஆதீனகர்த்தா

இரண்டாவது தடவை 'சங்காரம்' மேடையேறியபோது முன்வரிசையில் வீற்றிருந்து சுவைத்தார் மாவை. ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் திருப்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். மடல் ஒன்று வரைந்தார். "கருத்தைப் பொறுத்த வரை பெரிதும் வேறுபடுகிறேன். ஆனால் நாடக நாகரீகம் புனிதமாக, சிறப்பாக அமைந்திருப்பதை உளமாரப் பாராட்டு கிறேன். சமுதாயத்தைப் பெண்ணாக, பீடிக்கும் நோய்களை அரக்கர்களாக உருவாக்கி, நாடகத்தை ஆக்கி, நடிப்பித்த இயக்குநரின் கற்பனை வளத்தை மெச்சுகிறேன். சிறிய நேரம் வந்து, பன்னீர் தெளித்த நடிகர், நிலபாவாடை விரித்த நடிகர் என்போரே நினைவை விட்டகலா வண்ணம் நடித்தார்கள் என்றால், முக்கியமான பாத்திரங்கள் தாங்கியோரைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. ஆட்டத்தில் துரிதம் இன்னும் கூடியிருக்க லாம். ஒப்பனை வெகு ஜோர். ஒளிவீச்சு இன்னும் சிறப்புடன் அமையலாம்."

ஈழநாடு **28. 12. 1980**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. மௌனகுருவின் "சங்காரம்"

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
துணைவேந்தர், யாழ் - பல்கலைக்கழகம்.

நாடக அரங்கக் கல்லூரி தயாரித்து அளித்த சி. மௌனகுருவின் சங்காரம் வடமோடி நாடகமுறையை அடித்தளமாக வைத்து ஆக்கப்பட்ட நவீன நாடகமாகும். ஆடல் பாடல்களை அடிநாதமாகவும், அசைவுகளையும் ஊமங்களையும் துணையாகவும் கொண்டு ஆக்கப்பட்டிருந்த இந்நாடகம் ஏறத்தாழ இரண்டு மணிநேரம் மேடையில் நிகழ்ந்தது.

இந்நாடகத்தைப் பார்த்து முடிந்ததும் எனக்குப் பழைய ஞாபகங்கள் பல மனக்கண்முன் வந்து போயின. 1961ஆம் ஆண்டு தொடக்கம் 1968ஆம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தென்மோடி வடமோடிக்கூத்து மரபுகளை நவீனப்படுத்தி நகரப்புறங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றோம் எம்மால் தயாரிக்கப்பட்ட கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகிய நாடகங்கள் அக்காலகட்டத்திலேயே பேராதனை, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் எல்லாம் பல தடவைகளுக்குமேல் மேடையேறின. இதனை தாம் பல்கலைக் கழக மாணாக்கரைக் கொண்டு ஓர் இயக்கம் போலவே அன்று நடத்தினோம். அந்நாடகங்களிலே மௌனகுரு, சண்முகதாஸ், பேரின்பராசா, தர்மலிங்கம், ஹம்சவல்லி, சுகுணா ஆகியோரும் இன்று சமூகத்திலே உயர்பதவி வகிக்கும் பலரும் ஆடியமையும், அவ்வாட்டம் கண்டு அன்று மக்கள் உற்சாகமாக எம்முயற்சியை வரவேற்றமையும் எம் கண்முன்னே நிழற்படமென ஓடின. பல சிரமங்களுக்கு மத்தியில் நாம் அன்று அதனைச் செய்தோம். நாட்டுக் கூத்தினைக் கெடுக்கிறார்கள் என்ற பழைமைவாதிகளுக்கும், இது நாட்டுக் கூத்துத்தானே என்று கேலி பேசிய புதுமை மோகிகளுக்கும் மத்தியில் சிரமப்பட்டு நாம் கூத்தினுக்கு ஒரு செல்வாக்கினை ஏற்படுத்தினோம். அன்றைய சமூகச் சூழ்நிலை எமக்கு மிகவும் அனுசரணையாக இருந்தமையினால் அம்முயற்சியில் நாம் வெற்றியும் பெற்றோம்.

தனித்துவம் மிக்க மரபு

அம்முயற்சிகளின் தாக்கம் நாடக வரலாறு எழுதுவோர்களின் குறிப்புகளில் வருவதோடு நின்றுவிட்டது. இன்றுள்ள இளம் தலைமுறையினர் பலர் அவற்றை அறியார், அறிந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பற்றிப் பேசார். எனினும் இன்று தமிழ்நாடகம் பற்றிப் பேசுவோர் சிலராவது தமது பாரம்பரியமாகவும், மூலக்கூறாக வும் அந்நாடகங்களைப் பற்றிக் கூறுவதைக்காண மகிழ்ச்சியாக இருக்கிறது. ஈழத்துத் தமிழருக்குரிய தனித்துவம் மிக்க நாடக மரபு தேவை என்போர் இக்கூத்துக்களால் கவரப்பட்டமையும் இன்று நாடகம் ஆடுவோர் பலர் இக்கூத்து முறையில் பல அம்சங்களை தம் நாடகங்களில் எடுத்தாள்வதையும் காண் கிறோம்.

இத்தகைய மரபுவழி நாடகங்களைத் தயாரிப்பதற்கு நடை முறையில் பல சிரமங்கள் உள்ளன. இதற்கு நீண்டகாலப் பயிற்சி அவசியம். நாம் தொழில்முறை நடிகராக இன்மையினால் நேரம் ஒதுக்கி நீண்டகாலம் பழகும் சூழல் எல்லோருக்கும் இருப் பதில்லை. இத்தோடு இத்தகைய மரபுவழி ஆடல், பாடல் முறை களைப் பயிற்றுவிக்கும் கலைக்கல்லூரிகள் நம்மிடையே இன்மை யினால் இத்துறையில் பயிற்சி பெற்ற படித்தோரும் குறைவு. இதில் ஆர்வங்கொண்டு வருபவர்களைக் கொண்டே நாம் இத்தகைய நாடகங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. இத்தகைய சிரமங்கள் அன்று எமக்கு ஏற்பட்டன. இத்தகைய சிரமங்களைத் தாங்கிக்கொண்டே நாடக அரங்கக் கல்லூரியினரும் இதனைத் தயாரித்து உள்ளனர்.

நவீனமான ஒரு கருத்து

இந்நாடகத்தை எழுதியவரும் நெறிப்படுத்தியவரும் சி. மௌனகுரு ஆவர். நாம் நாடகங்கள் தயாரிக்கும்போது மௌனகுரு உற்ற துணையாக இருந்தவர். அதன் மூலம் பல அனுபவங்களையும் பெற்றவர். அவர் எழுதி நெறிப்படுத்திய சங்காரம் நாட்டுக்கூத்து மரபின் அடியாகத் தோன்றியதுடன் நவீனமானதொரு கருத்தினையும் கொடுக்கிறது. ஆரம்பத்தில் சமுதாயம் பேதங்களின்றி வாழ்கின்றது. இடையில் சமுதா யத்தைப் பேத அரக்கர்கள் சிறையிடுகிறார்கள். கால மாற்றத் தில் பொது மக்கள் ஒன்று திரண்டு பேத அரக்கரிடமிருந்து சமுதாயத்தை விடுதலை செய்கிறார்கள். சங்காரத்தின் உள்ளடக் கம் இதுதான்.

பண்டைக் கூத்துக்களின் கதைக்கான ஊற்றுக்கண் புராண, இதிகாசங்களும் மக்களிடையே வழங்கி வந்த இராஜ இராணிக் கதைகளுமேயாகும். தாமறிந்த கதையை மீண்டும் கூத்துக்களரி யிற் கண்டு மகிழ்ந்தனர். கிராமிய மக்கள். இக்கூத்து முறை யினையே நாம் அன்று மரபு கெடாது புதுமை செய்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் சில புதுமை மோகிகள் சமூக நாடகங்களைப் போல, கூத்துக்களை அமைத்து அதன் உயிரையே கெடுத்தனர். இதனால் அவற்றுள் சில பகிடிக் கூத்துக்களாகவே அமைந்து விட்டன, பாரம்பரியக் கதைகளைக் கூறும் பாரம்பரியக் கூத்தினை நவீன தேவைகளுக்குப் பயன்படுத்துவது சிக்கலான பிரச்சினையே. ஆனால் கூத்தின் மரபு தவறாது அதற்கு இயைய புதிய கதை ஒன்றினைக் கூத்து வடிவில் தருகிறார் மௌனகுரு. பண்டைக் கூத்து மரவு தவறாமல் நவீனமான உட்பொருளை அதன் தன்மை அறிந்து கலப்பதில் அவர் வெற்றி பெற்றுள் ளார் என்பதைச் சங்காரம் நிருபிக்கின்றது. இக்கூத்து மௌனகுருவால் 1969இல் எழுதப்பட்டது. 1961 தொடக்கம் 1968 வரை நாம் நடாத்திய நாடகங்களில் தீவிரமான பங்கு கொண்டவரான மௌனகுரு அந்த அனுபவங்களை வைத்து எழுதிய நாடகமே சங்காரமாகும். கூத்திலே சமகாலச் சமூக உள்ளடக்கத்தைத் தந்த முதல் நாடகமாக இதனைக் கூறுவர். இந்நாடகத்தையே நாடக அரங்கக் கல்லூரியினர் மௌனகுரு வின் நெறியாள்கையுடன் மீண்டும் மேடையேற்றியுள்ளனர்.

கையாண்ட புதுமைகள்

மரபுவழிக் கூத்திலே அரசனுடைய வரவைத் தெரிவிக்க கட்டியகாரன் வருவான். "அரசன் வரப்போகிறான் எச்சரிக்கை அமைதியாயிருங்கள்" என்பான். இந்நாடகத்திலும் ஆரம்பத் தில் கட்டியகாரன் தோன்றுகிறான். நாடகம் தொடங்கப் போகிறது அமைதியாய் இருங்கள்" என்று கூறுகிறான். பண்டைக் கூத்து கட்டியகாரன் இந்நாடகத்தில் கதை கூறுவோனாக மாற்றம் பெற்றுள்ளான். இடையிடையே கதைத் தொடர்பு களை விளக்குகிறான். கதையை முடித்தும் வைக்கிறான். கூத்து மரபுக்கட்டியகாரனின் தொழில் வேறு. இந் நாடகக் கட்டிய காரனின் தொழில் வேறு. எனினும் இக்கட்டியகாரனைக் கூத்து மரபின் அடியாக, புதுமையான கட்டியகாரனாக்கி இருப்பதில் இருந்தே மௌனகுரு இந்நாடகத்தில் கையாண்ட புதுமைகள் தெரியத் தொடங்குகின்றன.

சூரியன் சுழன்று அதினின்று பூமி வெடித்துச் சிதறுவது தொடங்கி மனித இனம் வேட்டையாடி வேளாண்மை செய்வது வரையுள்ள வளர்ச்சியினை மேடையில் கொணரும் நெறியாள ரின் கற்பனையையும் நடிகர்களின் நடிப்புத்திறனையும் பாராட்ட வேண்டும். இவையாவும் முழுக்கூத்து முறையில் அமையாது கூத்தின் சில தாளக்கட்டுகளின் பின்னணியிலும், அசைவுகளி லும், ஊமங்களிலும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்களின் வருகையுடன் கூத்து மரபின் பிரவாகம் மேடை முழுவதும் பாய்கிறது. தந்தத் தகிர்த தகிர்த தாம் என்ற தாளக் கட்டு, அரக்கர்களின் தோற்றத்தினை செவி வழியாக எமது உள்ளத்தில் பதிக்கின்றது.

சமுதாயத்தில் உறங்கிக்கிடக்கும் பேய்களான பேத அரக்கர் களை உடுக்கு அடித்து எழுப்பி விடுவதில் நாட்டார் மரபுகளை இனம் கண்டு உபயோகிக்கும் திறமை வெளிப்படுகிறது. மந்திர வாதி பில்லி, சூனியங்களைத் தன் எதிரிமீது ஏவுவது போலச் சமூகத்தில் பலம் பெற்றோர் பேதங்கள் என்ற பேய்களைச் சமூகத்தின் மீது ஏவுவதாக அமைத்திருக்கிறார் மௌனகுரு. பொதுமக்களும் அரக்கர்களும் எதிர் எதிர் நின்று சமர் புரிகை யில் இரு பாலாருக்கும் மாறி மாறித் தாளக்கட்டுகளை அமைத்து ஆடவைக்கும் முறை கூத்து மரபிற்குப் புதியது. கூத்திலிருந்து எடுத்த இத்தாளக்கட்டுகள் இச்சந்தர்ப்பத்தில் புதுமையான முறையில் உபயோகிக்கப்பட்டுள்ளன. பரத நாட்டி யத்தில் இருவர் இருவேறு ஜதிகளுக்கு ஆடுவதுபோல அமைத் திருக்கிறார் நெறியாளர்.

ஆடல், பாடல், நடிப்பு

பொதுவாக எல்லோரும் சிறப்பாக தம் பாகங்களைச் செய்தார்கள். சிறிய பாத்திரங்கள் கூட சபையோரை நெகுவாகக் கவர்ந்தன. பன்னீர் தெளித்தவர் இதற்கு உதாரணம். அரக்கர் களாக ஆடியோர்களின் ஆடல், பாடல் நடிப்பு நன்றாக அமைந்திருந்தன. அரக்கர் தலைவனாக வந்த பிரான்ஸிஸ் ஜெனத்தினுடைய ஆடல், பாடல், அசைவுகள் தனித்துவமும் சிறப்பும் மிக்கவை.

அரக்கரின் பிடியிலிருந்து சமுதாயத்தை விடுவிப்பவர்களாக வந்தோர்களின் ஆட்டங்கள் அரக்கர் அளவு அமையாதிருந்தமை இந்நாடகத்தின் குறைபாடாகும். மக்களின் தலைவனாக வந்து அரக்கருக்கு எதிராகப் போர் புரிந்த மௌனகுருவின் ஆட்டமும் நடிப்பும் தனித்துவமாக அமைந்தன. அவரைப்போல அவரது சகாக்களும் ஆடியிருப்பின் கடைசிக் காட்சி இன்னும் விறுவிறுப் பாக அமைந்திருக்கும்.

நாம் தயாரித்த இராவணேசன் நாடகத்தில் இராவணனாக மௌனகுரு நடித்திருந்தார். நாடகத்தின் இறுதிக்கட்டமான இராம இராவண யுத்தத்தில் இராவணனாக வந்த மௌனகுருவும் இராமனாக வந்த தர்மலிங்கமும் ஆடிய சுழலாட்டம் இன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பார்த்தோரால் சிலாகிக்கப்படுகிறது. அந்தளவு சங்காரத்தின் இறுதிச் சண்டைக் காட்சிகள் அமையாதது எம்போன்றோருக்கு ஏமாற்றத்தை அளித்ததாயினும் புதிதாக நாடகம் பார்த்தோர் பலர் இறுதிக் காட்சியால் கவரப்பட்டிருப்பர் என்பதும் உண்மையாகும்.

சமுதாயமாக வந்த கலாலட்சுமி தேவராஜா சிறப்பாகத் தம் பாத்திரத்தைச் செய்தார். நடிப்பதற்கு மேடைக்குப் பெண்கள் வரத் தயங்கும் இக்கால கட்டத்தில் துணிந்து கூத்து மேடையேறிய இவரைப் பாராட்ட வேண்டும்.

கலைப் பேரரசு பட்டம் வாங்கிய ஏ. ரி. பொன்னுத்துரை பணக்காரனாக வந்து நன்கு சோபித்தார். இந்த வயதிலும் இளம் தலைமுறையினருடன் இணைந்து நாடகம் ஆடியமை அவர் நாடகத்தின்பால் கொண்ட பற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

வாத்தியக் கருவிகள்

பண்டைக்கூத்து மரபில் அமைந்த இந்நாடகத்திற்கு நவீன வாத்தியக் கருவிகளை அதிகமாக உபயோகித்திருந்தனர். கண்ணன் இவ்வாத்தியப் பொறுப்பினைத் திறம்படச் செய்திருந்தார். அவர்கள் உபயோகித்த மிருதங்கத்தை விட, கூத்து மத்தளம் நாடகத்திற்கு இன்னும் வேகம் தந்திருக்கும் என்பது என் அபிப்பிராயம். நாட்டு மரபினைப் பேணுவோர் நாட்டார் வாத்தியங்களையும் பயன்படுத்த வேண்டும். பின்னணி இசை சில இடங்களில் இசையவில்லை. கட்டியகாரனின் ஆரம்பப் பேச்சினையும் கவிதையில் அமைத்தல் வேண்டும். இந்நாடகத்தை இடைவேளை விடாமல் நடத்தியிருப்பின் நாடகத்தின் வேகம் மட்டுப்படாது இருந்திருக்கும். இத்தகைய சில குறைபாடுகளைவிட மொத்தத்தில் நாடகம் நன்கு சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

மண்டபம் நிரம்பி வழிந்த சனக்கூட்டமும், நாடகத்தினிடையே சபையோர் காட்டிய உற்சாகமும் நாடகத்தின் வெற்றிக்கான சான்றுகள். அண்மையில் இரண்டாவது தடவையாக இந்நாடகம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியபோது கூட அரங்கு நிறைந்த காட்சியாக இது நடைபெற்றதாக அறிந்தேன். இது நமது நாடக வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் சேவைகள்

இதனைத் தயாரித்து அளித்த நாடக அரங்கக் கல்லூரியினர் பாராட்டுக்குரியவர்கள். நாடகப் பயிற்சிக்கு என்று ஒரு கல்லூரி அமைத்து பல சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் நாடகக் கலையை வளர்த்து வருவதை நாம் அறிவோம். சமீப காலமாக தரமான நாடகங்களை இவர்கள் யாழ் நகரில் அளித்து வருகிறார்கள். இவர்களுக்கு ஊக்கமளித்தல் நமது கடமை.

ஈழத்து தமிழர் தமக்கெனச் சில தனித்துவங்களைப் பேணவும் வளர்க்கவும் முனையும் முனைப்பான காலம் இது, ஈழத்தின் நாட்டுக்கூத்துக்கள் தமிழரின் தனித்துவம் மிக்க கலைகளாகும். எமது பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் அவற்றிலேதான் காண முடியும். இதனை நாம் பல ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். அப்பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் கட்டியெழுப்பி மலரச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் நாடக அரங்கக் கல்லூரிக்கும், மௌனகுருவுக்கும் தமிழ் மக்கள் பேராதரவு வழங்கவேண்டும்.

தினகரன், ஞாயிறு மஞ்சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் : இரு பார்வைகள்

மு. புஸ்பராஜன்

நாடக அரங்கக் கல்லூரி, ரசிகர் அவைக்காக தயாரித்து அளித்த சி. மௌனகுருவின் சங்காரம் 15-11-80இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. 69இல் முன்பு மேடையேற்றம் செய்தபோதிலும் இம்மதிப்பீடு 15-11-80இல் மேடையேற்றம் செய்யப்பட்டதைப் பற்றியதே.

இந்நாடகத்தை இருவகைப்படுத்தி விமர்சிப்பது இன்றைய சூழலில் நல்லதே.

I. அன்றைய மேடையேற்றத்தை மதிப்பிடுவது.

II. இதுவரை இந்நாடகத்தைப் பற்றிச் சொல்லப்பட்டவைகளைப் பற்றி விமர்சிப்பது.

இந்த இரண்டாவது பார்வை இன்றைய ஈழத்து இலக்கிய உலகில் மிகவும் அவசியமானதொன்றாகும். கறுப்புக் கறுப்பாய் வாந்தியெடுத்ததை காகம் காகமாய் வாந்தியெடுத்தான் என சிலர் கூறப்போய் அதைக் கேட்பவர்கள் சிந்திக்காமல் அப்படியே அதை வாய்பாடாக்குவதனால் இந்த இரண்டாவது பார்வையின் தேவை அவசியமாகின்றது.

I

1. "இதோ திரை விலகப் போகிறது சூரியன் வருவான். துண்டுகள் சிதறும், பூமி தோன்றும், புத்துயிர் அரும்பும். மனிதன் வருவான், வாழ்க்கைக்காக போராடுவான், தடைகளைச் சங்காரம் செய்வான்" என்ற எடுத்துரைஞரின் கூற்றுடன் நாடகம் ஆரம்பமாகிறது. சூரியன், பூமி, புல்பூண்டுகள், இறுதியில் மனிதன். இவைகளின் தோற்றத்தையும் இயக்கத்தையும் மேடையில் சிலர் அபிநயித்துக் காட்டுகிறார்கள். தொடர்ந்து சமுதாயம் ஒரு ராஜ மரியாதையுடன் அரங்கில் தோன்றுகிறது. ஒரு தேவ தூதனைப் போல் ஆடிப்பாடுகிறது. சாதி, இன, நிற வர்க்க அரக்கர்களின் தோற்றம் அட்டகாசங்கள். இவ் அரக்கர்கள் சமுதாயத்தைச் சிறைப்பிடித்து சீரழிக்க. தொழிலாள வர்க்கம் அடிமை விலங்கொடிக்கக் கிளர்ந்து எடுத்து நால்வகை அரக்கர்களையும் சங்காரம் செய்து சமுதாயத்தை மீட்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான கலைஞர்கள் பங்கேற்ற இந்நாடகத்தின் ஆட்ட முறைகள் மனதைக் கவர்ந்தன. அரக்கர்களாக நடித்த நால்வரும் குறிப்பாக வர்க்க அரக்கனாக அ. பிரான்சிஸ் ஜெனமும் சமுதாய மான கலாலஷ்மி தேவராஜாவும், முதலாளியாக ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர்கள் சிறப்பாகத் தம் பங்கை செய் திருந்தார்கள். மௌனகுரு மேடையில் தோன்றியபொழுது அவை யில் ஏறபட்ட சலசலப்பிற்கு ஏற்ப மேடையில் அவர் ஆட்டம் சோபிக்கவில்லையென்றே சொல்லலாம். இதற்குத் தொழிலாளர் தலைவன் பாத்திர உருவாக்கம் காரணமாயிருக்கலாம். இசை சில வேளைகளில் குறிப்பாக இரண்டாவது காட்சியில் கலைந்து சஞ்சரித்தபோதிலும் காட்சியின் உணர்வுகளுக்கு ஏற்ப தன் பங்கை செலுத்தியுள்ளது. ஒளி, உடையலங்காரம் குறிப்பிடக் கூடிய வையே. இந்நாடகம் செய்யுள் இசைப் பாவடிவில் அமைந்ததென சொல்லப்பட்டபோதிலும் கூத்து முறைக்குரிய இறுக்கமும், கவித்துவ வீச்சும் அற்றவையாகவே காணப்பட்டது. நாடகத்தின் இடையிடையே ஏற்பட்ட இராக ஒடிவிற்கும் இவையே காரண மெனலாம். சமுதாயம் மேடைக்கு வரும்வரை பாடப்பட்ட பாடல் வரிகள் கவித்துவ வீச்சிற்கு ஏனைய பாடல் வரிகள் ஈடுகொடுக்க வில்லையென்றே சொல்லலாம்.

சில கணங்கள் இந்நாடகம் பொறுத்தது போதும் என ஞாபகப்படுத்திய போதிலும், நாடகம் நிகழ்த்தப்படுவதை முதன்மையாகக்கொண்ட ஒரு அரங்கக்கலை என்ற அளவில் சிற் சில பிசிறல்களுடனும் சில அடிப்படைக் கருத்துத் தவறு களுடனும் கூட திறமையாக மேடையேற்றப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

II

“எங்கள் தாத்தாவிற்கு ஒரு யானை இருந்தது தெரியுமா? கொம்பு யானை” என்ற பாணியில் இந்த நாடகத்தை சில விமர்சகர் அவ்வப்போது தமிழிலும் ஆங்கிலத்திலும் விதந் துரைத்தார்கள். அறுபதுகளின் நடுப்பகுதியிலும், அதன் பிற்பா டும் ஏற்பட்டநாடக உத்வேகத்தின் ஒரு பெரிய பாய்ச்சல் எனும், கூத்து வடிவையும் புரட்சிகர உள்ளடக்கத்தையும் கொண்ட ஒரு நாடகம் என்றெல்லாம் கூறப்பட்டது. நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் தம்மைத்தாமே அறிமுகம் செய்வதும், சில பாடல் இராகங்கள் கூத்து முறை இசையில் இடம்பெற்ற போதிலும் இதனை முழுமையாக கூத்துவடிவம் எனக்கொள்ள முடியாது. வடமோடிக் கூத்து மரபில் மேடையில் தோன்றும் ஒரு பாத்தி ரம் வரவு கூறிய பின்பு. மேடையில் நிற்கும் பாத்திர இயக்கங் களுக்கு ஏற்ப தாளம் தவறாது அடி வைத்து ஆடிக் கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார். ஏனைய பாத்திரங்களும் அப்படியே. இத்தன்மை இந் நாடகத்தில் இல்லை. தவிர இந்நாடக விருத்தங்கள் வெறும் இழுவையாக அபஸ்வரமாக ஒலித்ததே தவிர கூத்தின் விருத்த ராகம் பேணப்படவில்லை. கூத்து மரபில் கட்டியக்காரன் பாத்திரம் மிகவும் முக்கியமானது. மேடையில் நிகழ்ந்து முடிந்த காட்சிக்கும் இனி நிகழப் போகும் காட்சிக்கும் இடையிலுள்ள இடைவெளிகளை நிரப்புவர் இவரே. ஆனால் சங்காரத்தில் வந்த எடுத்துரைஞர் காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கை யிலே அதை மறுபடியும் திருப்பி சொல்பவராக அவசியமற்று இடையூறு செய்பவராக காணப்பட்டார்.

இந்நாடகத்தில் சாதி, நிற, இனவர்க்கங்களை சமுதாயத்தி லிந்து காட்டாமல் வெளியிலிருந்து வருபவர்களாக காட்டுவது விஞ்ஞான பூர்வமான வரலாற்றை மறுப்பதாகும். சமுதாயத்தை விட வெளியிலிருந்து வருவதென்பது மூலமே கருத்து முதல் வாதமல்லவா? இறுதியில் எல்லா அரக்கர்களும் மடிய பின் வர்க்க அரக்கனைக் கொல்வது இவர்கள் நிற்கும்—நிற்பதாகச் சொல்லப்படும் தத்துவ தளத்தையே தகர்ப்பதாகும். முதலில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டபின் வர்க்கப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்ற அரசியல் கோஷத்தை படு பிற்போக் குத்தனம் எனக் கூறியவர்கள் இதை எப்படி அனுமதித்தார்கள்? வர்க்க அரக்கன் மடியும்போது ஏனைய அரக்கர்கள் வலுவிழந்து மடிந்துபோகும் உண்மையை இவர்கள் மறுக்கிறார்களா? இந்த அடிப்படைத் தவறை எப்படிக் கடந்தது பத்து ஆண்டுகளுக்கு மேலாக அறியாமல் இருந்தார்கள்? அல்லது அறிந்து நம் ஆள் என மௌனமாயிருந்தார்களா? இதுதான் புரட்சிகர உள்ளடக் கமா? இதுதான் நீண்ட பாய்ச்சலா? இப்படியிருக்க எப்படி இந்த மிகை மதிப்பீடு தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்ந்தது. இது நான் முன்னர் குறிப்பிட்ட கறுப்பு கறுப்பாய் வாந்தி எடுத்ததை காகம் காகமாய் வாந்தியெடுத்தான் என்ற தலையாட்டிகளாக வந்த விளைவா? ஆனால் ஒன்று கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஈழத்தில் முற்போக்கு இலக்கிய விமர்சனங்கள் என்று சொல்லப்பட்டவைகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டிய அவசி யத்தை சங்காரம் மேடையேற்றம் உணர்த்தி நிற்கிறது.

இறுதியாக விமர்சக கலாநிதிகளால் சங்காரத்திற்கு புனையப் பட்ட பட்டங்கள், பதக்கங்கள் பட்டாடைகள் இவைகளை நீக்கவிட்டு பார்க்கும் பொழுது சமீபத்தில் மேடையேற்றப்பட்ட நல்ல நாடகங்களில் இதுவும் ஒன்று.

—அலை—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சயன் பக்கங்கள்

அப்புறம் 'சங்காரம்' பற்றியும் எழுதிவிட்டால் ஆயிற்று. சங்காரம் ஒரு கூத்து வடிவமா, நாடக வடிவமா என்பது பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்வது தேவைற்றது. அது ஒரு நவீன நாடகம் என்ற அளவில் இப்போதுள்ள அதனது வடிவம் கூத்து முறை (வடமோடி)யிலிருந்து பெற்றுக் கொண்ட அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு வேறுவகையான அமைப்பாகும். சங்காரத்தைப் பற்றி எழுதத் துவங்குகையில்தான், நாடகப் பிரதிக்கும் நாடக மேடையேற்றத்திற்கும் இடையேயான சில பிரச்சினைகள் நினைவு வருகிறது. சில மோசமான நாடகப் பிரதிகள் நல்ல நெறியாள்கை மூலம் ஒரு செறிவான அரங்கு அனுபவத்தை தரலாம். (காலம் சிவக்கிறது ஒரு உதாரணம்) எனவே பிரதியையும் மேடையேற்றத்தையும் இணைத்து விமர்சிப்பதே பயனுள்ளது எனத் தோன்றுகிறது. அரங்கினை முதன்மைப்படுத்தினால் நிச்சயமாக சங்காரம் ஒரு நல்ல அனுபவத்தை எம்மில் பதித்தது. ஆட்ட முறைகள் அவற்றிடையேயான ஒத்திசைவு. இன்னும் அரக்கர்கள் — தொழிலாளர்களுக்கிடையேயான வேறுபட்ட தாளக் கட்டுகளும் முடிவில் அவற்றின் ஒன்றிப்பும் நளினமான அம்சங்கள். அரக்கர்கள் அரக்கர்களே! நாடகத்தின் இறுதியில் Climax என்று சொல்லப் படத்தக்க மௌகுரு, பிரான்சிஸ் ஜெனம் ஆட்டம் உச்சகட்டத்துக்கு போகவே இல்லை. (நடிகர்கள் ஓரளவு களைப்புற்றிருந்தமை காரணமோ?) இதில் வருகிற கதை சொல்வோர் அவசியம் மாதிரியே எனக்குத் தெரியவில்லை. பாடகர்கள் மட்டும் போதும் (அவர்களுக்கும் பாட்டுப் போதவே இல்லை தொண்டை திறபடமாட்டேன் என்கிறது)

'சங்காரத்தின்' பாடல்கள் கவிதைகளாக அமையாதது நன்கு புலப்படுகிறது. அதுபோக, வர்க்க அரக்கனைப் பின்தள்ளி விட்டமையை எமது முற்போக்கு, 'இலக்கிய விமர்சகப் பெருந் தகைகள்' எவ்வாறு சும்மா விட்டனர். தினகரனில் நான்கு நாடகங்கள் நூலுக்கு மாபெரும் விமர்சனம் எழுதிய சண்முக ரெத்தினம் (கலாநிதி) அவர்கள் இதை எவ்வாறு கோட்டை விட்டார்.

வர்க்க அரக்கனை பிரதானமாகச் சித்தரிக்க முயன்றதில் தான் அவனை இறுதியாக ஒழிப்பதற்காக நெறியாளர் காட்டியிருக்க வேண்டும். எவ்வகையில் நியாயப்படுத்தினாலும் கூட வர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கனே முதலில் இல்லாது போக வேண்டிய ஆள். இனம், மதம் சாதி போன்றன வர்க்கங்களின் அழிதலின் பின்னும் கொஞ்சக்காலம் இருப்பில் இருக்கும் 'தொடர்ந்த புரட்சி' இந்தக் கொஞ்ச கால அவற்றின் இருப்பையும் இல்லாது செய்வதற்காகும். ஒரு நாடகப்பிரதி என்ற அளவில், 'சங்காரம்' திருப்தியற்ற ஒன்றுதான் இறுதியாக மௌனகுருவிற்கு ஒரு ஐடியா சொல்லத் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்தில் உழைப்பாளிகள், சிற்றூழியர்கள், இன்னபிறபாட்டாளிகளுக்காக சங்காரத்தை ஒருதரம் இலவசமாக மேடையேற்றிப் பாருங்களேன்.

—புதுசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LANKA
GUARDIAN
Vol. 3 No. 9 September 15, 1980 Price 3/50

Tamil Literary scene Marxists vs Formalists

by Samudran (N. Shanmugaratnam)

The mid and late sixties were a period of heightened activity, on an unprecedented scale, by the Maoist - oriented sections of the Writer's Union. It would not be an exaggeration to state that this period showed all the signs of a qualitative leap forward in theatre and creative writing. The already revived folk drama was taken to a new height when Maunaguru's Sankaram (Destruction), with its revolutionary content depicting social evolution based on historical materialist premise, was staged.

The Tamil theatre gained a new dynamism with the arrival of N. Suntharalingam, Tassisius, Sivanandan, Pathmanathan and several others, who united revolutionary content with significant experimentation with form. Leading Tamil poets like the late Pasupathy, Murugaiyan and many others penned some of their best revolutionary poems during this period inspired by the anti-caste struggles in Jaffna. Many young poets and short story writers from the plantations made significant contributions to the evolving radical tradition. Problems of the exploited and oppressed Tamils, Muslims and Sinhalese people found a central place in this progressive literature and art.

5-09-1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LANKA
GUARDIAN
Vol. 3 No. 12 November 1, 1980 Price 3/50

The Tamil Theatre Then and now

by N. Sundaralingam

It was in the late sixties and early seventies that a serious Tamil theatre movement really blossomed. Students who took keen interest in the production of plays both at Peradeniya and Colombo teamed up after their studies and started producing and writing plays of their own, combining the experiences they gained with the traditional and modern plays produced at the Universities and elsewhere. It is heartening also to note that outside producers and playwrights as Zuhair Hameed and Fousul Ameer and others were coming out with serious artistic productions at this juncture. These new playwrights and producers were also keen followers of the social changes that were taking place in and around them and they tried to reflect these changes in their artistic creations. They very consciously used the theatre medium as a tool for a social dialogue with the masses and in bringing about a social change. Mounaguru who was the backbone in Dr. Vithiananthan's effort to revive and urbanise Kooththu tradition produced a Kooththu called 'Sankaram' (Destruction) in support of the mass struggle of the depressed castes to gain temple entry at Maviddapuram. Another group of actors called 'Ambalaththadigal' produced another play called 'Kanthan Karunai' (The Grace of Skanda) in the 'Kaththan Koothu' tradition again in support of this movement for the eradication of untouchability. Both these plays imbibed new content into the old traditional forms, making these forms more socially relevant and meaningful. Another play

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

called 'Apasuram' (Discord) made use of the absurd theatre style to put across a concrete idea on the ways of the politicians and priests. 'Kalam Sivakkirathu' a play by R. Sivananthan, another offspring of the Colombo University, underlined the importance of the unity of the Sinhala and Tamil peasants to liberate them selves from the burdens and ills of the class society. While R. Murugaiyan, a product of the Ceylon University and a widely known poet, wrote 'Kadooliyam' (Hard labour) a play on the exploitation of labour and the liberation of the downtrodden.

12-11-1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LANKA
GUARDIAN
Vol. 3 No. 16 January 1, 1981 3/50

Tamil Literary

by A. J. Canagaratna

A good example of this critical hijacking is the overrated Sankaram, a play dealing with bloodless abstractions. It was performed recently in Jaffna, for the first time after eleven years. The leaps I saw on stage were quite pleasing to the eye but I must say that, ideology-wise the play was a great leap backwards into the arms of the TULF with whom the left movement here is having a running battle about shelving the class struggle till the Tamil nation wins its freedom. No one doubts the revolutionary intentions of the play-wright; what's at issue here is the actual effect of what we see on the stage. The counter-revolutionary implications of the ending are obvious to any one with even a nodding acquaintance with Marxism. How come then that our revolutionary pundits missed the obvious? I can only explain it on the basis of mutual admiration. (Strangely enough I understand the play-wright had, at a post-performance discussion defended his ending on the ground that the traditional form demands that the climax be the battle between the protagonist and the antagonist! Who's being a formalist now?) Sankaram is a textbook illustration of what happens when you ignore the inter-dependence of form and content—the point that Mr. Reggie Siriwardene made with characteristic lucidity.

Samudran seems bent on making this exchange as interminable as the legendary Hanuman's tail (and knowing what havoc that caused Ravanan's Lanka, I wouldn't want the same fate to befall the Lanka Guardian). I have no intention of wasting any more time—and space—on Samudran. If, Kaspar-like, he wishes to interpret my unilateral withdrawal as another 'famous victory', he's welcome to thump his chest and proclaim he's the greatest.

Jaffna 1-1-1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கள் கிராமங்களின் உயிர்த் துடிப்பான கலையாக்கமாக காலாகாலமா இருந்து வந்திருக்கின்றன. இக்கூத்துக்கள் சமகாலத்தில் இரண்டு பாங்காக ஆடப்பட்டு வருவதை அவதானிக்கலாம். ஒன்று, பழைய மரபுக் கூத்துக்களை மாற்றம் ஏதும் இன்றி அப்படியே ஆடுதல்; மற்றது உள்ளடக்கம், அரங்கு இரண்டிலும் மாற்றத்தைச் செய்து ஆடுதல்; இந்த இரண்டாவது வகையில் சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தி நவீன அரங்கியல், நுட்பங்கள், உத்திகள் ஆகியவற்றை உள்வாங்கி ஆடப்படும் கூத்துக்கள் உள்ளடங்கும். `சங்காரம்' இந்த இரண்டாவது வகை நாடகப் பாரம்பரியத்தின் தொடக்க காலகட்டத்திற்கு உரியதாகும்.

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org